# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 12 புதன்கிழமை (26.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 061




5 எல்போட்டுக்குப் புதிய ஸ்ரிக்கர்



7 கட்டுப்பாட்டை மீறுகிறது மாநகர சபை



14 தமிழருக்கு உரிய தீர்வைத் தருவாரா



19 இருளின் கதவுகளைத் திறந்தவன்



25 இந்திய அணியை விட்டு வெளியேறுகிறார் கிரிஸ்டன்

## ஜனாதிபதிக்கு எதிராக வெள்ளை மாளிகை முன் நேற்று ஆர்ப்பாட்டம்




கொழும்பு,ஜன.26

தற்போது அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கைதுசெய்யுமாறு கோரி வெள்ளை மாளிகைக்கு எதிரே ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

மோசமான காலநிலையையும் பொருட்படுத்தாது இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

யுத்தக் குற்றங்கள் தொடர்பாக (27ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளைக் கொடியுடன் வந்த புலிகளின் தலைவர்களை சுடுமாறு உத்தரவிடவில்லை

## நீதிமன்றில் கோத்தபாய தெரிவிப்பு



கொழும்பு, ஜனவரி 26

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களையும், உறுப்பினர்களையும் சுட்டுக் கொல்லுமாறு இராணுவத்தினருக்கு நான் உத்தரவு பிறப்பிக்கவில்லை - இவ்வாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று மேல் நீதிமன்றில் தெரிவித்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் உறவினர்களும் சரணடைந்தார்கள். அவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (28ஆம் பக்கம் பார்க்க)

## மகாபோதி சங்கம் மீது சென்னையில் தாக்குதல்

சென்னை, ஜன. 26

சென்னை எழும்பூரிலுள்ள இலங்கை புத்த மகாபோதி சங்கத்திற்குள் நேற்றுமுன்தினம் இரவு அடையாளம் தெரியாத கும்பல் ஒன்று புகுந்து திடீர் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் புத்த பிக்குகள் உட்பட 5 பேர் காயமடைந்தனர்.

மேலும் யன்னல் கண்ணாடி, வான் கண்ணாடி, தொலைக்காட்சி என்பன அடித்து நொறுக்கப்பட்டன.

சென்னை எழும்பூரில் இலங்கை அரசின் நிதியுதவியுடன் செயற்படும் இலங்கை மகாபோதி சங்கத்தின் சென்னை மையம் உள்ளது. இங்கு புத்தர் (27ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்றம் சட்டபூர்வமானது

கொழும்பு,ஜன. 26

இலங்கையில் இராணுவ நீதிமன்றம் சட்டபூர்வமானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்திருந்த மனு மீதான தீர்ப்பை உயர் நீதிமன்றம் நேற்று வெளியிட்டது. அதில் பொன்சேகாவுக்குத் தண்டனை விதித்த இராணுவ நீதிமன்றம் நாட்டின் அரசமைப்புக்கு உட்பட்டது என்று தெரிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் (27ஆம் பக்கம் பார்க்க)

## திருச்சியில் மஹிந்தவின் கொடும்பாவி எரிப்பு

திருச்சி, ஜன. 26

திருச்சியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவப்பொம்மை எரிக்கப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த 12ஆம் திகதி புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினத்தில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற (27 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் அமெரிக்க விஜயம் ஐ.தே.க. சந்தேகம் எழுப்புகிறது

கொழும்பு,ஜன. 26

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமெரிக்க விஜயத்தின் இரகசியத்தை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் கேட்டுள்ளது.

அமைச்சரவையையும் அரச அதிகாரிகளையும் உள்ளடக்கிய 20 பேர் கொண்ட குழு ஜனாதிபதியுடன் சென்றிருக்கின்றது என்றும் அது தனிப்பட்ட விஜயமல்ல என்றும் அக்கட்சி மேலும் கூறியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் (27 ஆம் பக்கம் பார்க்க)

## அ.புரம் தாக்குதல்; குழு நியமனம்

கொழும்பு, ஜன.26

அநுராதபுரம் சிறைச்சாலையில் தற்போது பூரண அமைதி நிலவுவதாகவும் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோதல்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.டீ. சில்வா நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சம்பவத்தில் ஒருவரே உயிரிழந்துள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் (27ஆம் பக்கம் பார்க்க)


இப்பொழுது யாழ் நகரில்...




என்றென்றும் மக்களின் நன்மதிப்புப் பெற்ற ஸ்தாபனம் நவீன் செரமிக்

Naveen Ceramic (Pvt) Ltd.
212, Palaly Road, Jaffna.
Tel : 212220033 / 212220044



Jesus Calls உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோவான் 16:20)

யாழ்ப்பாணம் பிரார்த்தனைத் திருவிழா 2011

29,30 ஜனவரி 2011 மாலை 4.30 மணி
மத்திய கல்லூரி மைதானம், யாழ்ப்பாணம்.

வாருங்கள்... ஆசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்


தேவ செய்தி மற்றும் ஜெபம்
Dr.பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர்



மேலும் விவரங்களுக்கு:- கொழும்பு:- 011 5674211/ யாழ்ப்பாணம்:- 021 320 7000.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்திப் பிரிவு:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழ்.,மன்னார் மாவட்டங்களில் மழையும், ஏனைய மாவட்டங்களில் இடி மின்னலும் காணப்படுவதற்கான 20% சாத்தியம் உள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
தை 25, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7225.24↓
மிலங்கா(MPI) 7240.92↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 3251.24Mn
பங்குகளின் அளவு(No.) 120.69Mn
வியாபாரம்(No.) 27461
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
லங்கா அலுமினியம் 56.90
றிறி அக்றிறி 159.00
அலுப(றி)ப் 47.50
ஹொறன பிளான்ரேசன்ஸ் 52.80
அக்மி 24.50
குறைவு(Top 5 losers) - விலை Rs.
என்விறோமென்ரல் றிசோஸ் (W) 44.20
என்விறோமென்ரல் றிசோஸ் (W) 44.90
குட் கோப 693.90
என்விறோமென்ரல் றிசோஸ் (W) 49.20
டன்கொருவ 78.70
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# யாழ்.பொது நூலக சிறுவர் பகுதி சிங்கப்பூர் பாணிக்கு மாற்றப்படும்

## அந்நாட்டில் அறுவருக்கு பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்.பொது நூலகத்தின் சிறுவர் பகுதியை சிங்கப்பூர் பாணியில் மாற்றும் முயற்சியில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ். பொது நூலகத்தில் இருந்து அறுவர் கொண்ட குழு ஒன்று சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள நூலகங்கள், அவற்றின் அமைப்பு, செயற்பாடுகள் குறித்து பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சும், சிங்கப்பூர் ஒத்துழைப்புக்குரிய அமைப்பும் இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

இதன்படி சிங்கப்பூரில் உள்ள நூலகங்களின் சிறுவர் பகுதிகளைப் போல் நவீனமயப்படுத்தப்பட்டு யாழ். பொது நூலக சிறுவர் பகுதி மாற்றி அமைக்கப்படும். இதில் கட்டங்கள், தளபாடங்கள், நிறப்பூச்சுக்கள், கற்பித்தல் முறைமைகள் யாவும் நவீன மயப்படுத்தப்பட்டு மாற்றம்பெறவுள்ளன.

இதற்கான வேலைகள் யாவும் அடுத்த மாதம் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் நிறைவு பெறவுள்ளன.

சிங்கப்பூர் சர்வதேச ஒத்துழைப்புக்குரிய அமைப்பின் பணிப்பாளர் மார்க்கட் தவர கோன் 3 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதுடன் இந்தப் பணிகளைப் பார்வையிடுவதற்கு எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பத்தில் சிங்கப்பூரில் இருந்து 3 பேர் அடங்கிய நூலகர் குழு ஒன்று யாழ்.வரவுள்ளது என்றும் யாழ்.பொது நூலகத்தின் பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம் தெரிவித்தார். (ஒ-10-311)

# மட்டு.. அம்பாறையில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டி

கொழும்பு,ஜன.26

திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சிச் சபைகள், மன்னார் பிரதேச சபை தவிர்ந்த ஏனைய அனைத்து உள்ளூராட்சிச் சபைகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுகிறது என்று முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எம்.ரீ.ஹசன் அலி நேற்றுத் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தனது வேட்புமனுவை மொனறாகல மாவட்டத்திலுள்ள மெதகம பிரதேச சபைக்கு நேற்றுத் தாக்கல் செய்தது. தாமே இந்த வேட்புமனுவை நேரடியாகச் சென்று மொனறாகல மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்ததாகவும் ஹசன் அலி தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும், மன்னார் பிரதேச சபைக்கும் முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுகின்றது. (ஒ-சி)

# இராணுவ பொலிஸ் உத்தியோகத்தர் கஞ்சாவுடன் கைது

விடுமுறையில் சென்று திரும்பிய இராணுவப் பொலிஸ் உத்தியோகத்தரால் கொண்டுவரப்பட்ட கஞ்சா கைப்பற்றப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்றுமுன்தினம் பிரஸ்தாப இராணுவ பொலிஸ் உத்தியோகத்தர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார்.

சம்பந்தப்பட்டவரை நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் ஆஜர் செய்தனர்.

இந்நபரை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-207)

# முல்லைத்தீவு மக்கள் அரசை நம்பி இருக்கத் தேவை இல்லை

## செல்வம் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜன. 26

முல்லைத்தீவு உட்பட தமிழ் பிரதேசங்களில் அமையவுள்ள பிரதேச சபைகள் அரசை நம்பி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. மக்களின் வரிப் பணத்தைக் கொண்டும் வெளிநாட்டு உதவியுடனும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென வன்னி மாவட்டக் கூட்டமைப்பு எம்.பி செல்வம் அடைக்கலநாதன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

முல்லைத்தீவு மக்கள் ஒரு கட்சியைக் குறிப்பிட்டு அதைப் போட்டியிடுமாறு வேண்டுகோள் விடுக்கும் நிலையில் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது முல்லைத்தீவு மக்கள் அதீத நம்பிக்கை வைத்துள்ளனர். இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முல்லைத்தீவில் முகாமிட்டு தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தெரிவித்தார். (ஒ-சி)

# ஜே.வி.பியின் முன்னாள் எம்.பி. நந்தனவின் மனைவி ஐ.தே.கவில்

கொழும்பு, ஜன. 26

முன்னாள் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலகவின் மனைவி பிரியாணி குணதிலக ஐ.தே.கட்சிப் பட்டியலில் பாணந்துறை நகர சபைக்குப் போட்டியிடுகின்றார்.

நந்தன குணதிலக ஜே.வி.பியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவராவார். ஜே.வி.பி. சார்பாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான இவர் பின்னர் விமல் வீரவன்சவுடன் கட்சியைவிட்டு வெளியேறி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியில் இணைந்துகொண்டார். பின்னர் அதிலிருந்து கருத்து முரண்பாடு காரணமாக வெளியேறினார்.

இந்த நிலையில் அவரது மனைவி பிரியாணி பெரேரா குணதிலக நேற்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் ஐ.தே. கட்சியில் இணைந்துகொண்டார். (ஒ-சி)

# சென்னை மகாபோதி சங்கம் மீது தாக்குதல்

## விசாரணை நடத்தக் கோருகிறார் அதன் பீடாதிபதி

சென்னை, ஜன. 26

சென்னை எழும்பூரிலுள்ள மகாபோதி சங்கம் தாக்கப்பட்டு பௌத்த பிக்குமார் காயமடைந்தமை குறித்து தமிழக அரசு விசாரணை நடத்தவேண்டும்.

- இவ்வாறு சென்னை மகாபோதி விகாரை பீடாதிபதி தீனியாவல பாலித தேரர் தமிழக அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மகாபோதி சங்கம் தாக்கப்பட்டமை குறித்து நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சென்னை மகாபோதி மீதான தாக்குதலுக்கு ஒரு சிறு குழுவினரே காரணம். இது எவ்வகையிலும் தமிழ் - சிங்கள உறவைப் பாதிக்காது. இதுகுறித்து விசாரணை நடத்தப்படவேண்டியது அவசியம் - என்றார்.

இதுகுறித்து கூறியவை வருமாறு:-

சென்னை மகாபோதி மீதான தாக்குதல் குறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொண்ட கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம், சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கு நாம் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணி அளவில் மகாபோதி சங்கம் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-சி)

# நல்லூர் பிரதேச ஓய்வூதியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.26

ஓய்வூதியக் கொடுப்பனவு விவகாரம் மற்றும் அங்கத்துவப் பதிவு சம்பந்தமான கலந்துரையாடல் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இன்று முதல் இடம்பெறவுள்ளது.

இதன்போது 2006 ஆம் ஆண்டு சம்பள மீளாய்வுக்கமைய உறுதியாக்கப்பட்ட ஓய்வூதியத்தை முழுமையாக வழங்காமைக்கு ஆட்சேபம் தெரிவித்து மேன்முறையீட்டு மனு ஒன்றை அனுப்புவதற்காக ஓய்வூதியர்களிடம் கையொப்பம் பெறப்படவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு கோண்டாவில் கிழக்கு நாராயணர் கி.மு.சங்க மண்டபம், கோண்டாவில் வடக்கு வாகீஸ்வரி சனசமூக நிலைய மண்டபம் ஆகியவற்றில் கோண்டாவில் பிரதேச ஓய்வூதியர்களை ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலைப் பிரதேச ஓய்வூதியர்கள் காந்தி ச.ச.நிலைய மண்டபம், தியாகராஜ படிப்பகம் ஆகிய இடங்களில் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி பிரதேச ஓய்வூதியர்களை எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி இந்து இளைஞர் மன்ற மண்டபம், முட மாவடி ஞானவைரவர் ச.ச. நிலைய மண்டபம் ஆகிய இடங்களிலும் -

கொக்குவில் பிரதேச ஓய்வூதியர்கள் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் மேற்கு ச.ச.நிலைய மண்டபம், கோண்டாவில் மேற்கு நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலடி ச.ச. நிலைய மண்டபம், கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதி, நேதாஜி ச.ச. நிலைய மண்டபம் ஆகிய இடங்களிலும் ஒன்றுகூறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நல்லூர் பிரதேச ஓய்வூதியர்கள் எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் முருகன் ச.ச. நிலையம், நல்லூர் வடக்கு சங்கிலி சேகரப் பிள்ளையார் கோயிலடி ச.ச. நிலையம் ஆகிய இடங்களிலும் -

வண்ணார்பண்ணை ஓய்வூதியர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி காலை 9 மணிக்கு நாச்சிமார் கோயிலடி காமாட்சி ச.ச. நிலையத்திலும் -

கந்தர்மடத்தைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் அடுத்த மாதம் இரண்டாம் திகதி முற்பகல் 9 மணிக்கு அரசடி வீதி ஜனசக்தி ச.க. நிலையத்திலும் முற்பகல் 11.30 மணிக்கு நீராவியடி சைவ பரிபாலன சபை மண்டபத்திலும் ஒன்றுகூடுமாறு ஓய்வூதிய நம்பிக்கை நிதிய நல்லூர் பிரதேச செயலக பிரிவு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.(ஐ-10)

# மலையகத்தில் 4 கட்சிகள் இணைந்து போட்டி

கொழும்பு,ஜன.26

மலையகத்தைச் சேர்ந்த நான்கு கட்சிகள் இணைந்து நுவரெலியா, கண்டி, பதுளை ஆகிய மாவட்டங்களில் போட்டியிடத் தீர்மானித்துள்ளன.

மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், தொழிலாளர் விடுதலை முன்னணி மற்றும் மலையக தேசிய தொழிலாளர் சங்கம் ஆகிய கட்சிகளே இவ்வாறு இணைந்து போட்டியிட உள்ளன.

இக் கூட்டணியிலுள்ள இரு கட்சிகள் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இக் கட்சிகள் இரண்டும் ஆளும் கட்சிக்கு ஆதரவளிப்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக அமைதிக்கான சிறப்பு யாகம்

யாழ்ப்பாணம்,ஜன.26

சர்வதேச வாழும் கலை நிறுவனத்திலிருந்து வருகை தந்துள்ள சிவாச்சாரியர்களும் வேத பண்டிதர்களும் இணைந்து உலக அமைதிக்கான சிறப்பு யாகம் ஒன்றை கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்து சமய பேரவையில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடத்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு ஆசிபெறுமாறு வாழும் கலை நிறுவனத்தினர் அழைக்கின்றனர். (323)

# மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பரவலாக்குவது குறித்து அரசு கவனம்

கொழும்பு,ஜன.26

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அமுல்படுத்துவது, நிறுவனப் பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள துறைகளை மாகாணங்களுக்கு வழங்குவது தொடர்பான பிரச்சினைகள் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் கட்சிகளுடன் அடுத்த மாதம் பேச்சுவார்த்தை நடத்த அரசு தீர்மானித்துள்ளது என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளுடன் அரசு நடத்திய முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவது மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெப்ரவரி மாதம் நடைபெறும் பேச்சுவார்த்தையில் அதிகாரத்தை பரவலாக்குவது, அரசியல் தீர்வு சம்பந்தமாக பேச்சு நடத்தப்படும் எனவும் ராஜித கூறியுள்ளார்.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பரவலாக்குவது குறித்து விசேட கவனம் செலுத்தி இந்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் இணக்கமான நிலையில் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (த)

## போதைப் பொருளுடன் இந்தியப் பிரஜை கைது

கொழும்பு,ஜன26

பயணப் பையில் மறைத்து வைத்து கொண்டு வரப்பட்ட 150 மில்லியன் ரூபாய் பெறுமதியான 10 கிலோ கொக்கேய்ன் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜை ஒருவரை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து பாங்கொக்கிற்கு சந்தேக நபர் பயணம் செய்யவிருந்ததாக சுங்க அதிகாரி எம்.வி.ஜயரட்ன தெரிவித்தார்.

'தவறவிட்ட பொதிகளை பெற்றுக்கொள்ளும் இடத்திற்கு இவர் வந்திருந்தார். அங்கிருந்த அதிகாரிகள் இவரது பை தொடர்பில் சந்தேகமுள்ளதாக எமக்கு தெரிவித்தனர்.

இவரது பயணப் பையை ஆராய்ந்தபோது அதில் கொக்கேய்ன் போதைப்பொருள் காணப்பட்டது.

இது அண்மைக்காலத்தில் கைப்பற்றப்பட்ட அதிகூடிய தொகையாகும். கொக்கேய்ன் போதைப்பொருள் இலங்கையில் அவ்வளவு பிர பல்யம் இல்லை. இதை இவர் பாங்கொக்கிற்கு எடுத்துச்

செல்லவிருந்தாரென நம்புகிறோம்' என எம்.வி.ஜயரட்ன கூறினார். (த)

# செஞ்சிலுவைக் குழுவின் தலைவர் இலங்கை வருகை

கொழும்பு,ஜன 26

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைவர் டுட்ரே கோனே நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று புதன்கிழமை இலங்கை வரவுள்ளார்.

கடந்த காலங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து அங்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் செயற்பாடுகள் குறித்தும் ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2009ஆம் ஆண்டு முதல் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைவராக கடமையாற்றி வரும் டுட்ரே உலக மனிதாபிமான அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை வரவுள்ள கோனே ஜனாதிபதி மஹிந்த ராஜபஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜாபக்ஷ ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். (த)

## யாழ்.நகரில் நேற்று தீ விபத்து



யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கு அருகிலுள்ள இராணுவத்தினரின் வர்த்தக நிலையம் ஒன்று தீயினால் எரிந்து சேதமடைந்தது. இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

மின்சார ஒழுக்கினாலேயே இந்தத் தீவிபத்து ஏற்பட்டதாகவும் தீயணைப்புப் படையினர் விரைந்து செயற்பட்டதால் உடனடியாகத் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9-14)

# கிழக்கு மாகாண மக்களுக்கு தாய்லாந்து அரசு நிவாரணம்

கொழும்பு,ஜன 26

இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட மக்களுக்காக தாய்லாந்து அரசு ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை நிவாரண நிதியாக வழங்கியுள்ளது.

இதற்கான காசோலையை, பிரதி வெளிநாட்டு அமைச்சர் நியோமால் பெரெராவிடம், தாய்லாந்து வெளிநாட்டு அமைச்சர் காசிட் பிரோம்யாவினால் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த நாள்களில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிப்படைந்தனர்.

இந்த நிலையில் தாய்லாந்தில் இடம்பெற்ற வெளிநாட்டு அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொள்ள சென்றிருந்த பிரதி அமைச்சரிடம் இந்த காசோலை வழங்கப்பட்டுள்ளது. (த)

# இந்தியாவிலிருந்து இ.போ.சவுக்கு 100 பஸ்கள்

கொழும்பு,ஜன.26

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இந்தியாவிலிருந்து புதிதாக 100 பஸ்களை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் ஆலோசனையின் பிரகாரமே இந்த பஸ்களை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் பந்துசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போக்குவரத்து அமைச்சரின் ஆலோசனையின் கீழ் 100 பஸ்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பஸ் ஒன்றின் பெறுமதி 40 இலட்சமாகும்.

இதற்கான செலவு இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் ஈடுசெய்யப்படும் என்பதுடன், இந்த பஸ்கள் தூரப் பிரதேசங்களுக்கான சேவைகளில் ஈடுபடுத்தப்படும்.(த)

## கொட்டடியில் நேற்று தூக்கில் தொங்கியவாறு சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ். கொட்டடிப் பகுதியில் கூழாவடி வீதியில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் வசித்து வந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான க.தவச்செல்வம் (வயது 42) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பனை வடலியில் தொங்கிய நிலையில் நேற்றுக் காலை சடலம் உறவினர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து யாழ். பொலிஸார் அவ்விடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த மரணம் தொடர்பாக மேலதிக தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-9-15)

**பிரதேச செயலகங்கள், உ.அ.அதிபர் பிரிவுகளில்**

# தேசிய கீதம் பாடி திங்களன்று அலுவலகக் கடமை ஆரம்பம்

யாழ் மாவட்டத்தில் இயங்கும் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அர சாங்க அதிபர் பிரிவுகள் அனைத்தும் வாரம் தொடங்கும் முதல் நாளான திங்கள் கிழமைகளில் அலுவலகத்தில் தேசியக்கொடி ஏற்றி தேசிய கீதம்படி நாட்டின் அபிவிருத்தி பற்றி பதவி நிலை அலுவலர்கள் உரையாற்றிய பின்னர் அலுவலகக் கடமைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக யாழ் மாவட்ட பிரதேச செயலாளாகள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களுடனான கலந்துரையாடலின்போது முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று திங்கள்கிழமை பெரும்பாலான பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு களில் தேசியக்கொடி ஏற்றி அலுவலக நடவடிக்கைகள் ஆரம்பமாகியதை காணக்கூடியதாக இருந்தது.

## யாழ்.நகரிலும் இன்று இந்திய குடியரசு தினம்

இந்திய குடியரசுத் தினத்தையொட்டி விசேட நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 9 மணிக்கு நகரில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் கொடியேற்றும் நிகழ்வு இடம்பெறும்.

அதைத் தொடர்ந்து மாலை 6.30 மணிக்கும் 8 மணிக்கும் விசேட நிகழ்வு யாழ்.ரில்கோ ஹோட்டலில் நடைபெறும் என்று துணைத் தூதரக கவுன்ஸிலர் ஜெனரல் வி.மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-ஐ)

# ஐ.தே.க. போராட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு,ஜன. 26

அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி இன்று நடத்தவிருந்த போராட்டம் அடுத்த மாதம் ஒன்பதாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் நடவடிக்கை இடம்பெற்றுக்கொண்டிருப்பதாலேயே இத்தீர்மானத்தை எடுத்ததாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

அக்கட்சியுடன் இணைந்து [illegible] போராட்டத்தில் ஈடுபடவிருந்த தொழிற் சங்கங்கள், பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் போன்றவற்றுக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் ஐ.தே.க. மேலும் கூறியது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் அரசின் நிர்வாகச் சீர்கேடு போன்றவற்றுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் போராட்டங்களில் ஒன்றே மேற்படி போராட்டம் [illegible]

# பால்மா இறக்குமதி வரி குறைப்பு; விலைகள் 50 வீதமாகக் குறையும்

கொழும்பு,ஜன 26

பால்மாக்கள் மீதான இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கிலோகிராம் பால்மா மீதான இறக்குமதி வரி 50 ரூபாவில் இருந்து 28 ரூபா வாகக் குறைக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் பால்மாக்களின் விலைகள் அதிகரித்தமை காரணமாக தேசிய பால்மா நிறுவனங்கள், பால்மாக்களின் விலைகளை அதிகரிக்குமாறு, நுகர்வோர் அதிகார சபையிடம் கோரியிருந்தன

எனினும் உள்ளூர் சந்தை யில் பால்மாக்களில் விலை களைக் கட்டுப்பாட்டில் வைத் திருப்பதற்காகவே இந்தத் தீர் மானம் மேற்கொள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த் தகத்துறை அமைச்சு தெரிவித் துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணியில் மிதக்கும் வீடு...?

எப்போதுமே புறத்தோற்றத்துக்கே நாம் முக்கியத்துவம் கொடுப்பதுண்டு.

முயல்பிடிக்கிற நாயை மூஞ்சையை வைத்தே அடையாளம் கண்டுபிடிக்கும் அசாத்தியவல்லமை தமக்கிருப்பதாகவும் பலர் மார்தட்டிக்கொள்கின்றனர். ஆனால் அத்தகையஅனுமாணங்களில் பலவும் எதிர்மாறானதாகவே இருப்பதை அறிந்தாலும் அவர்கள் ஒத்துக் கொள் வதுமில்லை.

இப்போது பழையபடி சீருடைக்காரர்கள் மாலை மயங்கிய கையோடு, வீதிகளில் குவிந்து விடுவதால் இத்தனை நாளும் சந்திக்குச் சந்தி பஜாரடித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் பலரும் என்ன செய்வதென்று தெரியாமல் நகத்தைக் கடித்துக் கொண்டிருக்கிறார்கள்.பெற்றோருக்கும் வலு சந்தோஷம்.

இவ்வளவு நாளும் மாலையில் வீட்டை விட்டுச் செல்லும் பிள்ளை இரவு 10 மணிக்குப் பிறகுதான் கட்டுக் கொடிக்குத் திரும்புவது வழமை. ஆனால் இப்போதுதான் சீருடையினரின் புண்ணியத்தில் அவர்கள் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கிறார்களே என்ற மகிழ்வு பெற்றோருக்கு இருக்கத்தானே செய்யும்.

எனினும் சின்னஞ்சிறு உறுத்தல். சந்தியில் கூடிநின்று பம்பலடிக்கும் இளைஞர்கள் எல்லோருமே பெரியவர்கள் திட்டுவது போல ஊர் மேயும் கட்டாக்காலி மாடுகளா? என்ற சந்தேகமும் எழுகின்றது. ஏனெனில் பகல் முழுதும் படித்துக் களைத்தோ, அல்லது வேலை செய்து அலுத்தோ சோர்ந்து போன இளைஞர்கள் தம்மையொத்த

**ஓடுகாலி**

## கோணல் லங்கள்

சகபாடிகளுடன் மாலை நேரத்திலாவது தமது நட்பு சார்ந்த கதையாடல்களைச் செய்வதற்கு கூடுவது இயல்பே. இன்றைக்கு வயதாகிப்போன பலரும் தமது கடந்த கால நினைவுகளை இரை மீட்டும் போது சொல்கின்ற கூத்துகளை விடவும் தமது பம்பலடிப்புகள் அவ்வளவு மோசமானதில்லை என்பதே இளைஞர்கள் பலரதும் வாதம்.

ஆனாலும் சந்தியில் தன் நண்பர்களுடன் தமது பிள்ளை சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைக்காணும் பெற்றோர் , உடனேயே பொங்கியெழுந்து அவர்கள் ஏதோ செய்யக்கூடாத அதிபயங்கரக் குற்றத்தைச் செய்துவிட்டது போல வானத்துக்கும் பூமிக்கும் எகிறிக் குதிக்க ஆரம்பித்து விடுகின்றனர்.

எந்தவொரு பெற்றோரும் சேரக் கூடாத கூட்டத்தோடு சேர்ந்து தமது மகன் கெட்டுவிடுவானே என்றுதான் பயங்கொள்கிறார்களே தவிர தமது பிள்ளை தனது நல்ல குணத்தால் சகபாடிகளையும் நல்லவர்களாக மாற்றி விடுவான் என நினைப்பதில்லை.

ஆயினும் பெற்றோரையும் குறை கூறமுடியாதுதான். இளைஞர்களில் ஒருசாரார் பெற்றோர் எண்ணுவதைப் போலவே தறிகெட்டே அலைகிறார்கள். அவர்களால் மற்றைய இளைஞர்களும் அப்படித்தான் என்கிற முத்திரை குத்தப்பட்டுவிடுகிறது.

இதனால்நல்ல எண்ணத்துடன் நண்பர்களுடன் அரட்டையடிக்கும் இளைஞன் கூட தேவையற்ற வசைச்சொற்களை பெற்றோரிடம் வாங்கிக்கட்ட வேண்டியுள்ளது.

சந்தியில் நிற்கும் இளைஞர்களைத் தூற்றுகின்ற நம் சமூகம் வீடுகளில்- மறைமுகமாகக் - கும்மாளம் போடுபவர்களைப் பற்றிக் கண்டுகொள்வதில்லை.

ஆனால்அதிபயங்கர ஆபத்து அங்குதான் உள்ளது, இப்போது வேறொரு நாகரிகம் இளைஞர்களிடத்தே பரவி வருகின்றது.தற்போது சாதாரண குடும்பங்களே இருக்க வீடின்றி எங்காவது வாடகைக்கு வீடு கிடைக்குமா? என ஏங்கி வருகையில், ஆனைக்கோட்டைப் பகுதியில் ஒரு வீட்டை தமது சொர்க்கபுரியாக ஒரு சில இளைஞர்கள் (இவர்களில் அநேகர் வெளி மாவட்டத் தைச் சேர்ந்தவகள் என்பதும், தண்ணியடிப்பதற்காகவே மாவட்டம் விட்டு மாவட்டம் வந்து கஷ்டப்படுவதாகவும் (?) கூறப்படுகின்றது) மாற்றியுள்ளனர். பகல், இரவு என்கிற பேதமில்லாமல் எப்போதும் இந்த வீட்டின் முன்னால் இளைஞர்கள் கூடுவார்கள்.

வீட்டினுள் அவர்களுக்குத் தேவையான மதுபானவகைகள். குடித்துவிட்டு கும்மாளம் தான். இந்த வீட்டை தண்ணியில் மிதப்பதற்காகவே இவர்கள் வைத்திருப்பதாக அயலவர்கள் புறுபுறுத்துக் கொள்கின்றனர். மது தன் வேலையைக் காட்டத்தொடங்கும் போது குழுச் சண்டைகளிலும் இவர்கள் ஈடுபடுவதாகக் கூறப்படுகின்றது.

வீதியால் செல்லும் பெண்களுடனும் சேட்டைகளுக்கு குறைவில்லை. அதைவிட எந்நேரமும் இந்த வீதியில் தூஷணை வார்த்தைகளின் அர்ச்சனை யையும் கேட்க முடிகின்றது.எனினும் தட்டிக்கேட்க எவருக்கும் துணிவில்லை. அச்சத்தின் பிடியில் குடாநாடு உறைந்து போய்விட்ட நிலையில் அதைப்பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாது குடியே தம் கருமம் என 24 மணிநேரமும் தமது போதைக்காக ஒரு வீட்டையே பயன்படுத்தும் இவர்களுக்கு மணிகட்ட எவர் வருவார்?


### வீடு விற்பனைக்குண்டு

**மானிப்பாய் சந்தை, முன் ஒழுங்கையில் 3 பரப்புக் காணியுடன் புது வீடு விற்பனைக் குண்டு.**

தொடர்பு:- 0212225583,0213002727

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 27.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.

★சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★சன்னதி பாம் சென்ரர், தொண்டைமானாறு - 0776904590
★நெல்லியடி பல்பொருள் விற்பனை, நெல்லியடி - 0774656377
★முகுந்தன், பருத்தித்துறை - 0771392593
★துர்க்கா பாம், சுன்னாகம் - 0779346599

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே. 021 222 6944
(109460)

### வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் அம்பிகா பரராஜசிங்கம்
பிறப்பு: 04.11.1922
இறப்பு: 28.12.2010

கடந்த 28.12.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி அமரர் அம்பிகா பரராஜசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (27.01. 2011) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பொன்னையா லேன்,(அப்பையா லேன்)
ஆனைக்கோட்டை.

சிவக்குமரன்
குடும்பத்தினர்.

### 12ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



அமரர் கிருஷ்ணபிள்ளை ராஜ்குமார் (B.A.F)
[உப அதிபர், வவு/ மணிவாசகர் வித்தியாலயம்]

பிறப்பு : 31.03.1969
இறப்பு : 08.02.1999
திதி: 26.01.2011

வெல்லன் விநாயகர் அடியில் ஆத்மாசாந்தி பெறுக.

குடும்பத்தினர்.

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
தொ.பே: 021 3213076

### வேலையாள்கள் தேவை

பிரபல வியாபார நிறுவனமொன்றுக்குப் பின்வரும்பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை.

1. சாரதி 50 வயதுக்கும் மேற்பட்டவராக இருக்கவேண்டும்.
2. காசாளர் 40 வயதுக்கு மேற்பட்டவர்

* ஆண்,பெண் இருபாலாரும்

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 601, நாவலர் வீதி,
கைலாச பிள்ளையார் கோவிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்
0774714636

### பாராட்டுகின்றோம்

விநாயகர் லோன்றி சித்தன்கேணி, வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை கணேசன் என்பவர் தொலைந்துபோன பொருள், காசு என்பவற்றை எடுத்து தந்தமைக்கு இவரையும் இவரது குடும்பத்தினரையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அன்ரன் மரியதாஸ்
குடும்பத்தினர் , யாழ்ப்பாணம்.

### கார் விற்பனைக்கு

வைத்தியரின் தனிப்பாவனையில் சிறிது காலமே பாவித்த புதிய 2007 Model TOYOTA Passo, Peral White நிறமான KL xxxx தொடரிலக்கமுடைய Full option (A/C, Power Steering, Power Mirror, Power window, Remote Key, Central Locking) கார் உடன் விற்பனைக்கு (Very Economic 15 - 20 k.m/L.)

தொடர்பு: 0779611993,
0212263682
(9575072)

### மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நிரந்தர பட்டதாரி ஆசிரியர் 34 வயதுக்கு கீழ்ப்பட்ட R/C அல்லது NON R/C மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: 0770712304

### Spoken English & Grammar

(வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்)
By: Mr.B.Ruban
(A/L Eng. Teacher & BBA)
More Details .0779785749

### இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்தது (1Kg 450/-), கல் பேட் சுத்தம் செய்து காலை 6.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

19, முருகேசர் லேன், நல்லூர்.


## விபத்துக்களில் இருவர் காயம்

தென்மராட்சி, ஜன.26

பாடசாலை சென்ற சிறுமியை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதிக் காயப்படுத்தியதில் அதே இடத்தைச் சேர்ந்த மதுசா (வயது 6) என்னும் மாணவியே காயமடைத்தவராவார்.

இதே வேளை சாவகச்சேரி கச்சாய் வீதியில் நடந்து சென்ற வரை மோட்டார் சைக்கிள் மோதியதில் தர்சன் (வயது 28) என்பவரும் காயமடைந்தார். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-207)


### நீங்கா நினைவலைகள்

15ஆவது ஆண்டு | 1ஆவது ஆண்டு





திதி: பிரதமை
அமரர் இளையதம்பி பரமானந்தன் (சந்தோசம்)

திதி: அபரபக்க அட்டமி (26.01.2011)
திருமதி புனிதவதி பரமானந்தன்

01.01.1936 ← அன்னை மடியில் → 19.04.1942

ஆண்டவன் அடியில் 18.06.1996
ஆண்டவன் அடியில் 06.02.2010

கூடத்தில் கொலுவிருந்த
மாடத்து மணிவிளக்குகளே!
காலத்தின் கட்டளையால்- எமை
கண்ணீரில் மிதக்கவிட்டு நீங்கள்
காற்றாகி ஈராறு திங்களும்
பதினைந்து ஆண்டுகளும்
இன்றோடு போனதப்பா
காலங்கள் விடைபெறலாம்- எம்
கோலங்கள் மாறலாம்- ஆனாலும்
கண்முன்னே நிழலாடும்- உங்கள்
நினைவுகள் மட்டுமே நித்தமும் எம்முடனே உயிர்வாழும்.



ஒரு ஜீவன்தான் என்னோடு தான் ஓயாமல் ஒலிக்கிறது என்ற உங்கள் பாட்டை எம் உயிர் உள்ளவரை எம்மால் மறக்க முடியாது.

'மங்கள பவனம்'
கந்தரோடை,சுன்னாகம்.
தொ.பே: 0212240310

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களம்

மீண்டும் ஒரு தேர்தல். இம்முறை உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவிருக்கின்றது.

கடந்த 20ஆம் திகதியிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் தமது வேட்பாளர்கள் சார்பில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய ஆரம்பித்துள்ளன.

தேர்தல் எதற்காக நடைபெறுகின்றது. குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிக்கவும் அதன் மூலம் குறிப்பிட்ட பகுதிகளில் மக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கவும் தகுதியானவர்களை மக்கள் தேர்ந்தெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதே இந்தத் தேர்தல்.

மக்கள் ஆட்சி என்று குறிப்பிடப்படும் ஜனநாயத்தின் மூல வேராக - அடிப்படைத் தளமாக இந்த உள்ளூராட்சி மன்றங்கள் கணிக்கப்படுகின்றன.

மக்கள் பணியில் படிப்படியாக முன்னேறுவதற்கு இந்த மன்றங்கள் பயிற்சிக் களங்களாக அமைவதுடன், மக்களுக்கு அவசியமான தேவைகளை அடிமட்டத்திலிருந்து புரிந்துகொள்ளவும் அவைகளில் எதிர் கொள்ளப்படும் பிரச்சினைகளை, சவால்களை, ஆக்கபூர்வமாக எதிர்கொண்டு தீர்த்துவைத்து மக்கள் மனங்களில் இவர்கள் இடம் பெறுவதற்கும் இவை வழி செய்கின்றன.

உள்ளூராட்சி மட்டங்களில் இருந்து வளர்ந்து நாட்டின் உச்ச நிலைக்கு சென்ற அனேக தலைவர்களை நமது நாட்டில் நாம் பார்த்திருக்கின்றோம்.

குறிப்பாக சொல்வதானால் முன்னாள் ஜனாதிபதி அமரர் ஆர். பிரேமதாசாவை நாம் நினைவு கூரலாம் - அவர் ஆரம்பத்தில் கொழும்பு மாநகர சபையின் உறுப்பினராகவிருந்தவர். பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகி உதவி அமைச்சர், அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சர் என்று வளர்ந்து இறுதியில் இந்த நாட்டின் பிரதமராகவும் அதன்பின் நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி என்ற அந்தஸ்துக்கும் உயர்ந்தார். இந்த நாட்டின் மிகச் சிறந்த நிதியமைச்சராக இருந்தவர் என்று போற்றப்பட்ட கலாநிதி என்.எம்.பெரேராவும் கூட கொழும்பு மாநகரசபையின் உறுப்பினராக இருந்தவர்தான்.

எனவே உள்ளூராட்சிமன்றங்களில் உறுப்பினர்களாக வெற்றி பெறுபவர்கள் தமது பதவிகள் மூலம் மக்களுக்கு ஆற்றுகின்ற பணிகள் மூலம் அவர்களின் ஆதரவைப் பெற்று அரசியல் துறையில் மேல் நிலைக்கு வரமுடியும் என்பது தெளிவு. அதே வகையில் உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றி பெறும் கட்சிகளும் குழுக்களும் கூட தமது சிறந்த பணிகள் மூலம் மேல் நிலைக்குவர முடியும். ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் கட்சிகள் கிராமிய மட்டங்களில் ஆதரவை இழக்கும்போது ஆட்சி அதிகாரம் ஆட்டம் காணுவது ஒருபுறமிருக்க முற்றுமுழுதாக வீழ்ச்சிக்குள்ளாகுவதும் தவிர்க்க முடியாதது.

அண்மையில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் குடாநாட்டிலும் கிழக்கிலங்கையிலும் போட்டியிட்ட பிரதான கட்சிகள் ஒருபுறமிருக்க இக்கட்சிகளின் வாக்குப் பலத்தை சிதறடிக்கும் வகையில் பல உதிரிக் கட்சிகளும் குழுக்களும் மழைகாலத்தில் திடீர் திடீரென முளைக்கின்ற காளான்களைப் போன்று தோன்றி தேர்தலில் போட்டியிட்டதைப் பார்த்தோம். இந்தக் காளான் கட்சிகளை அதிகாரம் படைத்த பெரிய கட்சிகளே கூளை கூளையாகப் பணத்தை வழங்கிப் போட்டியிடச் செய்ததாகவும் பேச்சடிபட்டது. ஏற்கனவே தாம் வகித்த நிர்வாகப் பதவிகள் மூலமும், தனிப்பட்ட வேறு காரணங்களாலும் மக்கள் மனம் கவர்ந்திருந்த பலர் இவ்வாறு தேர்தலில் போட்டியிட்டார்கள். பல்வேறு சாத்தியமற்ற வாக்குறுதிகளையும் வழங்கினார்கள். மேடைகளில் தோன்றி உரைகள் நிகழ்த்தினார்கள். இவர்களில் பலருக்கும் தாம் தோல்வியடையப் போவது நிச்சயமாகத் தெரிந்திருந்தபோதிலும் அவ்வாறு நடந்துகொண்டார்கள்.

இன்னும் பலர் தேர்தல்காலத்தில் மட்டும் இங்குவந்து மக்களின் துயர் துடைக்கப்போவதாக நீலிக்கண்ணீர் வடித்து வாக்குக் கேட்டார்கள் - காரியாலயங்களைத் திறந்து இளைய தலை முறையினரின் விவரங்களை சேகரித்து அதைச் செய்வேன் இதைச்செய்வேன் என்றெல்லாம் வாக்குறுதிகளை அள்ளி வீசினார்கள்.

தேர்தல் முடிந்தகையோடு இவ்வாறு கடைவிரித்தவர்கள் எல்லோரும் சொல்லாமல் கொள்ளாமல் தலைமறைவாகிவிட்டார்கள். சிலர் மக்களிடம் வாங்கிய முற்பணத்தையும் கூட சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டதாகச் செய்தி வெளியானது.

எனவேதான், உள்ளூராட்சி மன்ற தேர்தல் காலத்தில் மக்கள் இந்த விதமான ஆசாமிகள் குறித்து மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

நாட்டிலுள்ள 335 உள்ளூராட்சி மன்றங்களின் 267 சபைகளின் ஆட்சிக் காலம் முற்றுப்பெற்றுள்ளன. ஏற்கனவே ஆட்சிக்காலம் முடிவடைந்திருந்த சுமார் 34 சபைகளுக்கும் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இவ்வாறு 301 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெறவிருக்கும் அதேவேளை 34 மன்றங்களுக்கான தேர்தல் பின்னர் நடைபெறும் என்று தெரிகின்றது. வடக்கில் 26 மன்றங்களுக்கான தேர்தல் ஏப்ரலில் நடைபெறும்.

இந்த நிலையில் உள்ளூராட்சி மன்றதேர்தலில் போட்டியிடும் கட்சிகள் கூறும் கருத்துக்களை வாக்காளப் பெருமக்கள் மிகக் கவனமாக உள்வாங்கி சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம். தனிப்பட்ட செல்வாக்கை விட மக்களின் பொது நன்மைக்கு இவர்கள் செய்யப்போகும் பணிகளையே முக்கியமாகக் கவனித்து தம் வாக்குகளை வழங்கவேண்டும் என்று சொல்லத்தேவையில்லை. ஏனென்றால் வாக்காளர்கள் புத்திசாலிகள்.

## தபால்மூல வாக்களிப்புக்கு 613 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜன.26

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிக்க இதுவரை 613 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாடாளாவிய ரீதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் குறித்துத் தேர்தல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து தபால் மூல வாக்காளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

விண்ணப்பப் படிவங்கள் அந்ததந்தத் திணைக்களங்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் நேற்று வரை யாழ்.மாவட்டத்தில் 613 பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர்.

தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் எதிர்வரும் 27ஆம் திகதியுடன் பூர்த்தியாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

## இலங்கையில் அரிசி மாவில் பாண் தயாரிக்கும் ஆலை

கோதுமை மாவுடன் அதிகளவு அரிசி மாவைப் பயன்படுத்திப் பாண் தயாரிக்கும் தொழில்நுட்பம் இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் 80 சதவீதம் அரிசி மாவைக் கொண்ட பாணைத் தயாரித்து சந்தைப் படுத்த முடியும் என்று மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் மிகப் பிந்திய நவீனத்துவம் வாய்ந்த அரைக்கும் தொழில் நுட்பம் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் அரிசிமா ஆலை வெயாங்கொடவில் கடந்த 20ஆம் திகதி திறந்து வைக்கப் பட்டது. இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆலையைத் திறந்து வைத்தார்.

இந்த ஆலையின் மூலம் 20 சதவீதம் கோதுமை மாவுடன் உயர்ந்த பட்சம் 80 சதவீதம் அரிசி மாவினைக் கலந்து பாணைத் தயாரிக்க முடியும்.

கோதுமை மா சார்ந்த உற்பத்திகளை விட அரிசிமா சார்ந்த உற்பத்திகள் ஆரோக்கியமானவை. இதன் மூலம் நாட்டுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கும் என்று பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது. (ம)

## பாடசாலை மாணவருக்குச் சைக்கிள்கள்



யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கான பத்து சைக்கிள்கள் ஆயர் இல்லத்தில் வைத்து மாணவர்களிடம் நேற்றுக் கையளிக்கப் பட்டன.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியினால் வழங்கப்பட்ட சைக்கிள்களே இவ்வாறு பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் உரை நிகழ்த்துகையில்:

பாடசாலை மாணவர்கள் தமது பாடப் புத்தகங்களை மட்டும் படிப்பதுடன் நிறுத்திக் கொள்கின்றனர். அவர்கள் அதனை விட்டு வெளியில் வந்து பொது அறிவு விடயங்களையும் கற்க வேண்டும். ஆனால் தற்போது மாணவர்கள் பாடப் புத்தகங்களையே படிப் பது குறைவாக இருக்கிறது. எனவே நீங்கள் ஊக்கமாகப் படிக்க வேண்டும்.

வீதி ஒழுங்குகளை நீங்கள் கவனமாகப் பின்பற்றுங்கள். பெரும்பான்மையான விபத்துகள் சம்பவிக்கக் காரணம் வீதி ஒழுங்குகளைச் சரிவரப் பின்பற்றாமையே. சரியான போக்குவரத்து விதிகளைப் பின்பற்றினால் உங்களுக்கும் ஆபத்து இல்லை மற்றவர்களுக்கும் ஆபத்தில்லை - என்றார். (ம-15)

## ஜே.வி.பியில் புலனாய்வு முகவர்

கொழும்பு,ஜன.26

ஜே.வி.பியின் தலைமைத்துவ மட்டத்தில் வெளிநாட்டு புலனாய்வு அமைப்பின் உறுப்பினர் ஒருவர் இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்ஸ இதனை தெரிவித்துள்ளார்.

கட்சியின் வரையறைக்கு உட்பட்டு, குறித்த புலனாய்வு முகவரால் தமது பணிகளை செய்து கொள்ள முடிந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது அவர் சுகபோகத்துடன் வெளிநாடு ஒன்றில் சென்று குடியேறி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை சோமவன்ச அமரசிங்கவும், ரில்வின் சில்வாவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆனால் எதிர்காலத்தில் எது உண்மை எது பொய் என்பது விளங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## 'எல்போட்டு'க்கு பதிலாக இனிமேல் 'ஸ்ரிக்கர்'

யாழ்ப்பாணம், ஜன.26

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தவர்களுக்கு வழங்கப்படும் எல்போட்டுக்குப் பதிலாக இனிமேல் 'ஸ்ரிக்கர்' வழங்கப்படவுள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு பின்னர் அமுலுக்கு வருகின்றது என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார். சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தவர்கள் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மூன்று மாத காலத்துக்கு 'எல்போட்' வழங்கும் நடைமுறை இதுவரை இருந்துவந்தது.

எதிர்வரும் 29ஆம் திகதிமுதல் அதற்குப் பதிலாக 'ஸ்ரிக்கர்' வழங்கப்படவுள்ளது. பரீட்சார்த்திகள் தாமாக [illegible] அந்த 'ஸ்ரிக்கரை' ஒட்டிக் கொண்டு வாகனத்தைச் செலுத்த முடியும் - என்றார் அந்த அதிகாரி. (த-9)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.26

சுன்னாகம் தெற்கு அருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் புனராவர்த்தன நவகுண்ட மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று புதன் கிழமை காலை 8 மணி தொடக்கம் 9.05 மணிவரை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் பிரதம சிவாச்சாரியார் வேதஞான சுரபி சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தில் புதிதாக நவக்கிரகங்கள், சனீஸ்வரன், தெட்சணாமூர்த்தி ஆகிய பரிவாரமூர்த்திகளுக்கான ஆலயங்கள் அமைக்கப் பட்டுள்ளன. (ம-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத் தபால் சேவையை அபிவிருத்தி செய்வதில் அக்கறை

யாழ்ப்பாணம், ஜன.26

வடமாகாணத்தபால்சேவையை அபிவிருத்தி செல்வதில் தபால் திணைக்களம் இப்போது அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. இவ்வாறு தெரிவித்தார் தபால் மா அதிபதி எம்.கே.திஸ நாயக்க.

கடந்த சனிக்கிழமை யாழ். பிரதம தபாலகத்தில் சுங்கத் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே தபால்மா அதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் யாழ். குடாநாட்டுத் தபால் சேவையே மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. சேவை மனப்பான்மை, பணி விசுவாசம், ஒழுக்கம், சுகாதாரம் ஆகிய வசதிகள் இங்கு அதிகளவில் காணப்படுகின்றன. இதற்காகவே நான் அடிக்கடி இங்கு வந்து பணியாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றேன். எதிர்காலத்தில் வடமாகாண அஞ்சல் சேவையில் பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும் அதற்கான நடவடிக் கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என் றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மத்திய தபாலகத்தின் கட்டுப்பாட்டாளர் வி.குமரகுரு கூறுகையில்,

சுங்க அலுவலகம் இங்கு திறக் கப்பட்டமை வடக்கு மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இந்த அலுவலகத்தை இங்கு திறப்பதற்குப் பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொண்டோம். அதன்பயனாகவிரைவாகஅதுஇங்கு திறக்கப்பட்டுள்ளது. என்றார்.

(த-26)

# எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் இல்லை

ஊர்காவற்றுறை, ஜன.26

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் பெற்றோல் இல்லாததால் இங்கு அவசர தேவைக்கு கூட பெற்றோலை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பலநோக்குக் கூட்டுற வுச் சங்கத்தில் பெற்றோலை சேகரித்து விற்பனை செய்யக் கூடிய வசதி வாய்ப்புக்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மண்ணெண்ணை, டீசல், ஒயில் போன்ற எரிபொருள்களே இங்கு விற்பனை செய்யப்படுகிறன. இதனால் 6 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள வேலணை பலநோக்குக்கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே பெற்றோலைப்பெறுவதற்கு பொது மக்கள் சென்று வரவேண்டியுள்ளது.

இதன் காரணமாக மோட்டார் சைக்கிள் பாவனையாளர்கள் தமது வாகனங்களுக்கு எரிபொருளை பெறமுடியாது திண்டாடுகின்றனர்.எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊர்காவற்றுறை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலைப் பெறுவதற்கு ஏற்ற வழிவகைகள் செய்து தருமாறு அப்பகுதிப் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (201-21)

# மந்திகை வீதி புனரமைப்பு

வடமராட்சி, ஜன.26

மந்திகை சிலையடிச்சந்தி தொடக்கம் ஆஸ்பத்திரி வீதிச் சந்தி வரையிலான சாவகச்சேரி வீதியில் ஏற்பட்டிருந்த குண்டு,குழிகளுக்கு கற்கள் போடப்பட்டு நிரவித்தார் ஊற்றி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்ட போது மந்திகை சிலையடிச் சந்தி தொடக்கம் ஆஸ்பத்திரி வீதிச் சந்தி வரையிலான யாழ்ப்பாண வீதி ஒரு மாத காலத்துக்கு மேலாக முடப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண வீதி முடப்பட்டிருந்த காலத்தில் அனைத்து இடங்களுக்கான போக்குவரத்துக்கள் யாவும் மந்திகை சாவகச்சேரி வீதி ஊடாக இடம்பெற்று வந்தன. இதனால் இந்த வீதி பெரிய குண்டு குழிகள் ஏற்பட்டு சேதமடைந்தது. இந்த வீதியூடாக போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

சேதமடைந்த வீதிகளில் குண்டு குழிகள் யாவும் யாழ். வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் கற்கள் போடப்பட்டு நிரவி தார் ஊற்றி தற்காலிகமாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது.(201-236)

## மனிதநேயம்...



உதவி: அல்லைப்பிட்டி, புதிய வீடமைப்புத் திட்டத்தில் சென்.ஜேம்ஸ் தேவாலயத்தின் முன்னாள் பங்குத்தந்தை பெனற் கொன்சன்ரைன் அடிகளால் வீடொன்று நிர்மாணிக் கப்பட்டு வழங்கப்பட்டது.

அமெரிக்காவில் இருந்து வருகைதந்த அடிகளார் குடியிருப்பாளர்களைச் சந்தித்த போது " நெய்தலம்" இயக்குநர் அருட்பணி பெ.ஜெயசேகரம் அடிகளார் மற்றும் குடியிருப்பு நிர்மாணக் குழுவினருடன் கலந்துரையாடினார். (160)

# ஊர்காவற்றுறையில் புதிய காவலரண்கள்

ஊர்காவற்றுறை,ஜன.26

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் மீண்டும் படையினரின் பிரசன்னம் அதிகரித்துவருவதுடன் முக்கியமான இடங்களில் புதிய காவலரண்கள் பரவலாக அமைக்கப்பட்டு வருகின்றன.

இதனால் பொதுமக்கள் மத்தியில் ஒருவித அச்சநிலை ஏற்பட்டுள்ளது. எனவே மக்கள் முன்னரைப்போல் நடமாடு வதைத் தவிர்த்து குறிப்பிட்ட நேரத் துடன் தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரை காலமும் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த இப்பிரதேசம் இப்போது படையினர் கட்டுப்பாட் டில் உள்ளது.

இதன் காரணமாகப் படையினர் பாதுகாப்புக்கருதி காவலரண்களையும் முகாம்களையும் அமைப்பதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை ஊர்காவற்றுறை வடக்கு வீதி மற்றும் தெற்கு வீதிகளில் பனை மரங்களைக் கொண்டு புதிய காவலரண்களை அமைப்பதில் படையினர் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது. (த-21)

# வங்கி முகவர்கள் என்று ஏமாற்றும் ஆசாமிகள்

## மக்களே! எச்சரிக்கையாக இருங்கள்

கொழும்புத்துறை, ஜன.26

யாழ். குடாநாட்டில் போலி வங்கி முகவர்களின் ஏமாற்று முயற்சிகள் தற்போது அதிகரித்துள்ளன. பல பொதுமக்கள் இவ்வாறான ஏமாற்றும் பேர்வழிகளிடம் பணத்தை இழந்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

விதவைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சேமிப்புத் திட்டமொன்றில் இணைப்பதாகத் கூறி கொழும்புத்துறை வளன்புரம் பகுதிகளில் பல விதவைப் பெண்களிடம் பெருமளவு பணத்தைச் சுருட்டிக்கொண்டு தலைமறைவான ஒரு நபர் சில மாதங்களின் பின்னர் கடந்த வாரம் சிக்கிய சம்பவமொன்று நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இப்பகுதியில் ஏமாற்றப்பட்ட ஒருவர் தெரிவித்ததாவது

"வங்கி ஊழியர்போன்று கச்சிதமான உடையணிந்த ஒருவர் தாம் குறிப்பிட்ட வங்கியொன்றின் முகவரென்றும் விதவைக் குடும்பங்களுக்கு உதவும் திட்டமொன்றுடன் வந்திருப்பதாகவும் நாசூக்காகக் கூறிய அவர் கணக்கை ஆரம்பிக்க 2 ஆயிரம் ரூபா தாருங்கள் எனப் பல பதிவுகளை மேற்கொண்டார். பணத்தைப் பெற்றுக் கொண்டு நாளை இதேநேரம் பண வைப்புப் புத்தகத்துடன் வருவதாக கூறிச் சென்றார்.

இதேபோன்று பலரிடம் பணத்தைப் பெற்றுச் சென்றவர் இரண்டு மாதங்களாகியும் வரவில்லை கடந்த வாரம் கச்சேரிப் பகுதியில் பலசரக்குக் கடையென்றில் பொருள் வாங்க நின்ற அவரை எதேச்சையாகச் சந்தித்தேன்.

அவர் சென்றதும் கடைக் காரரிடம் வீட்டை அறிந்து அங்கு பணத்தை பறிகொடுத்த பலரை அழைத்துக் கொண்டு சென்றேன். அது ஒரு தற்காலிகக் குடிசையாகக் காணப்பட்டது.

நாம் பணத்தைத் தருமாறு மிரட்டவே அவரது மனைவி எனக் கூறப்படுபவர் சிறிய மோதிரம் ஒன்றைக் கொடுத்தார் எனத் தெரிவித்தார்.

(த-135)

# மாதாந்த உதவி சிலருக்கு இல்லை

தென்மராட்சி, ஜன.26

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோரில் சிலருக்கு உதவித்தொகை நிறுத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் போது உழைக்கும் ஆற்றல் உள்ள 18 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளையுடையவர்களுக்கும் வெளிநாடுகளில் உள்ள பிள்ளைகளிடமிருந்து வருமானம் பெறுவோருக்கும் உதவித் தொகை நிறுத்தப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் பிரிவினர் தெரிவித்தனர். (201-207)

# நீரிழிவு நோயாளர் 'கிளினிக்'கில் மருந்துகள் கிடைப்பதில்லை

தென்மராட்சி,ஜன.26

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நீரிழிவு நோயாளர்களுக்கு மாதக் கிளினிக்குகளில் உரிய குளிகைகள் வழங்கப்படுவதில்லை. இதனால் நோய்த் தாக்கம் சிலருக்கு அதிகரித்துள்ளது.

வைத்தியசாலையில் மாதத்தில் சனிக்கிழமைகளில் நடத்தப்படும் நீரிழிவு நோய்க்கான கிளினிக்கில் வாராந்தம் ஏறந்தாழ 250 இற்கு மேற்பட்டடோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். 15 தினங்களுக்கு ஒருமுறை கிளினிக்குகளில் மருந்துகள் தரப்படவில்லையெனவும், தனியார் மருந்துக் கடைகளில் மருந்து வாங்குவதற்கு பணம் இல்லாத நோயாளர்கள் நீண்ட நாள்களாக மருந்து பாவிக்காததால் நோய்கள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

(201-207)

# விவசாயிகள் ஓய்வூதியத்தை அதிகரிக்குக

யாழ்ப்பாணம், ஜன. 26

விவசாயிகளின் அடிப்படை ஓய்வூதியம் மூவாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டும். கடந்த 10 ஆண்டுகளாக விவசாயிகளின்அடிப்படை ஓய்வூதியம் 1000 ரூபாவாக மட்டுமே உள்ளது.

யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.முதலியார் இவ்வாறு கோரியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

விவசாயிகளின் மெய்யான தொழிற்பாடு ஊடாக இந்த நாடு வளம்பெறுகின்றது.

ஆனால் விவசாயிகளின் அடிப்படை ஓய்வூதியம் ஆயிரம் ரூபா என்பது வெறும் சிறு ஊக்குவிப்பே தவிர அது ஓய்வூதியமாகக் கருதப்படமாட்டாது.

கடந்த 5 ஆண்டுகளாக விவசாயிகளின் ஓய்வூதியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நாம் ஜனாதிபதிக்கும் விவசாய அமைச்சுக்கும் பல கடிதங்களையும், மகஜர்களையும் முன்வைத்தோம். ஆனால் எதிலும் அபிவிருத்தி ஏற்படவில்லை.

தற்போது மீண்டும் விவசாய அமைச்சருக்கு எமது அடிப்படை ஓய்வூதியத்தை அதிகரிக்குமாறு கோரிக்கடிதம் அனுப்பியுள்ளோம்.

சாதகமான பதில் கிடைக்காவிடில் நாடளாவிய ரீதியில் விவசாயிகளைத் திரட்டி ஓய்வூதிய அதிகரிப்புப் போராட்டம் நடத்தவுள்ளோம் - என்றார்.

(த-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான் விதித்த கட்டுப்பாடுகளை தானே மீறுகிறது மாநகர சபை

யாழ்ப்பாணம்,ஜன.26

தான் போட்ட கட்டுப்பாடுகளைத் தானே மீறும் வகையில் யாழ். மாநகர சபையின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாகப் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்மாவட்டத்தின் ஒரேயொரு பெரிய மைதானமாக உள்ள துரையாப்பா விளையாட்டரங்கை யாழ்.மாநகரசபை முதல்வர் தன்னிச்சையாக அரசியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதால் அந்த மைதானத்தில் எந்தவொரு விளையாட்டு நிகழ்வையும் நடத்த முடியாமல் போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த மைதானத்தை விளையாட்டு நிகழ்வுகள் தவிர்ந்த ஏனைய எந்த நிகழ்வுக்கும் பயன்படுத்துவதில்லை எனச் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை தானே மீறியுள்ளது மாநகர சபை. யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகளை மட்டும் நடத்துவதற்கான அனுமதியே வழங்கப்படுமென்ற போதும் ஜனாதிபதி கலந்துகொண்ட தேசிய தைப் பொங்கல் விழாவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் அந்த நிகழ்வு காரணமாக மைதானமும் சேதத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற மாநகரசபை அமர்விலே விளையாட்டுக்கு மட்டும் மைதானத்தைப் பாவிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.களியாட்ட நிகழ்வுகள், இசைக்கச் கச்சேரி கள், கண்காட்சி ஆகியவற்றை இந்த மைதானத்தில் நடத்துவது அதன் பராமரிப்பு வேலைகளுக்கு இடையூறாக இருப்பதுடன் அது சேதமடைவதன் காரணமாகவே மாநகர சபை இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தது.

**குடாநாட்டில் ஒரேயொரு பெரிய மைதானமாக விளங்கும் துரையப்பா விளையாட்டரங்கை மாநகரசபை முதல்வர் தன்னிச்சையாக அரசியல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்துவதால் ஏனைய விளையாட்டு நிகழ்வுகளை நடத்த முடியாத நிலை**

யாழ். நகரப் பகுதிகளில் இடம்பெறும் நிகழ்வுகளின் போது வாகனத் தரிப்பிடமாக மைதானத்தைப் பயன்படுத்துவதற்கும் தடைவிதிக்க இருப்பதாகவும் அதேவேளை தேசியப் பாதுகாப்புத் தினத்துக்கு மட்டும் வாகனங்கள் நிறுத்துவதற்கு அனுமதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.



இதனை அடிப்படையாக வைத்தே யாழ். வர்த்தகக் கண்காட்சிக்கும் யாழ். மாநகர சபை துரையப்பா விளையாட்டரங்கை வழங்குவதற்கு மறுத்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட தேசியப் பொங்கல் விழாவை மாத்திரம் நடைமுறைகளைப் புறந்தள்ளி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்துவதற்கான அனுமதியை யாழ்.மாநகர சபை வழங்கியது.

இதன் காரணமாக மைதானத்துக்குள் விழாமேடை அமைப்பதற்கும் ஏனைய தேவைகளுக்குமான கனரக வாகனங்கள், டிரக்டர்கள் சென்று வந்ததினால் நிலம் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. மற்றும் மைதானத்தினுள் வளர்க்கப்பட்ட புல்லுகளும் அழிவடைந்துள்ளன.அந்தச்சேதங்கள் இதுவரை சீர் செய்யப்படவில்லை. எனவே, இந்த விடயம் தொடர்பாக மாநகரசபை மேயரைத் தொடர்பு கொள்ளப் பல தடவை முயற்சித்தபோதும் அவர் கூட்டங்களில் கலந்து கொண்டிருப்பதால் அவருடன் கதைக்கமுடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-15)

## வியாபார உரிமங்களை பெற்றுக்கொள்க

தென்மராட்சி, ஜன.26

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வணிக நிலையங்கள் மற்றும் கைத் தொழில் நிலையங்கள் இந்த வருடத்குரிய வியாபார உரிமங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த உள்ளூராட்சிச் சபைகளில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக் கப் பட்டுள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர்களால் பார்வையிடப்பட்ட உணவு கையாளும் நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வணிக நிலையங்கள் மற்றும் கைத்தொழில் நிலையங்கள் ஆகியவை உரிய சிபாரிசுடன் அந்தந்த உள்ளூராட்சிச் சபைகளிடம் கையளித்துள்ளதாகவும் உணவு கையாளும் நிலையங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் முன்மொழியப்பட்ட அறிவுறுத்தல்களை உடனடியாகப் பூர்த்தி செய்து உரிய காலப் பகுதிக்குள் வியாபார உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிய திகதிக்குள் வியாபார உரி மம் பெறத் தவறும் வணிக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

### அபிவிருத்திக்கான வருகை...



வரவேற்பு: மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலைக்கு நேற்று செவ்வாய்க்கிழமை வருகைதந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டின்ஸ் மற்றும் தூதரக உத்தியோகத்தர்களை தென்னிந்தியத் திருச்சபை யின் யாழ்.பேராயர் கலாநிதி எஸ்.டானியல் தியாகராஜா வரவேற்று அழைத்துச் செல்கிறார்.

## யாழ்.மாவட்டத்தில் இதுவரை 19 சுயேட்சைகள் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், ஜன.26

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் யாழ்.மாவட் டத்தில் போட்டியிடுவதற்கு நேற்றுமாலை வரை 19 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன.

அதேவேளை இதுவரை எந்த அரசியல் கட்சிகளும் வேட்பு மனுத் தாக்கல் செய்யவில்லை என்று யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 20ஆம் திகதி முதல் எதிர்வரும் 27ஆம் திகதிவரை வேட்பு மனுத் தாக்கலுக்குரிய காலஎல்லை என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் கடந்த 5 தினங்களுக்குள் 19 சுயேட்சைக் குழுக்கள் மட்டுமே கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பிரதான கட்சிக்கள் வேட்புமனுத் தாக்கல் குறித்து ஆலோசனைகளையும் விண்ணப்பங்களையும் பெற்றுச் சென்றுள்ளன. எனினும் அவை வேட்பு மனுத் தாக்கல் செய்யவில்லை. நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வது நிறுத்தப்படும் - என்றார்.

இதேவேளை-

சில பிரதான கட்சிகளுக்குக் கிடையில் வேட்பாளர்கள் நியமனம் குறித்து இழுபறி நிலை காணப்படுவதாகவும் சில கட்சிகளுக்கிடையில் போட்டியிட ஏற்கனவே தீர்மானித்த வேட்பாளர் கள் பின்னடித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தென்னங்கன்று விநியோகம்

தென்மராட்சி, ஜன.26

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு தென்னை அபிவிருத்திச் சபையினர் தென்னங்கன்றுகளை வழங்கிவருகின்றனர். பாலாவிப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட தென்னங்கன்றுகள் குடியிருப்பாளர்களுக்கு பரப்புக்கு ஏழு தென்னங்கன்றுகள் வீதம் வழங்கி வருகின்றனர். தென்னைப் பயிர்ச் செய்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக நான்கு பரப்புக் காணிக்கு மேல் வைத்துள்ள குடியிருப்பாளர்களுக்கே தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பிரதேசத்தில் தென்னம் பிள்ளைகள் நடுவதற்கு தற்போது உரிய காலம் என்ப தால் மக்கள் ஆர்வத்துடன் நட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (201-207)

## குடாநாட்டு வைத்தியசாலைகளில் ஆளணி வெற்றிடங்களை நிரப்புக

யாழ்ப்பாணம், ஜன.26

குடாநாட்டு அரச் வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர்கள் மற்றும் மருந்து கலவையாளர்களுக்கான வெற்றிடங்களை நிவர்த்தி செய்ய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வுக்கு வருகை தந்த சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறி சேனவிடம் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

சுகாதாரப் பகுதியினரால் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையில் மேலும் தெரியவருவதாவது:

யாழ்.குடாநாட்டு அரச வைத்தியசாலைகள் பலவற்றில் வைத்தியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இதேவேளை ஏற்கனவே ஓய்வு பெற்றுச் சென்ற வைத்தியர்கள் பலருக்கு மீள் நியமனம் வழங்கப்பட்டு அவர்களின் சேவைகளே நடைபெறுகின்றன. இதேவேளை மருந்து கலவையாளர்களுக்கும் வெற்றிடங்கள் நிலவி வருகின்றன.

எனவே வைத்தியசாலைகளில் வைத்தியசேவையைத் தாமதமின்றி மக்களுக்கு வழங்குவதற்கு மேற்குறித்த ஆளணி வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுகாதாரப்பகுதியினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை, சுகாதாரப் பகுதியினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்குத் தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-26)

## வல்வெட்டித்துறைச் சந்தை மீண்டும் பழைய இடத்தில்

நெல்லியடி, ஜன.26

வல்வெட்டித்துறை சந்திக்கு அருகில் உள்ள கட்டடத்தில் மீண்டும் வழமைபோல் வல்வெட்டித்துறைச் சந்தை இயங்கும்.

வல்வெட்டித்துறை மரக்கறிச் சந்தை, மீன்சந்தை என்பன நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் அங்கு இயங்கவுள்ளதாக வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வல்வெட்டித்துறை சந்திப் பகுதியில் கடந்த காலங்களில் மேற்படி சந்தை இயங்கி வந்தது. அந்தப் பகுதியில் படை முகாம் அமைக்கப்பட்டதால் சந்தை இயங்குவதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் சந்தை இயங்க முடியாத நிலை ஏற்பட்டது.

தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் சந்தை முன்பு இயங்கி வந்த இடமான வல்வெட்டித்துறை சந்தியில் இயங்கவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (201-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு அலைந்து திரியும் மக்கள்

வவுனியா, ஜன.26

வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்த மக்கள் தமது பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதிப்பதற்குத் தேவையான பிறப்பு அத்தாட்சி பத்திரம் இல்லாமையினால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

கடந்த போர் அனர்த்தங்களின் போது தற்போது மீளக்குடியமர்ந்த மக்களின் பெரும்பாலான ஆவணங்கள் தொலைந்தும் அழிவடைந்தும் போயுள்ளன.

இந்த மக்கள் இத்தேவையை அடுத்து மாவட்ட செயலங்களிலும், பிரதேச செயலகங்களிலும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தினமும் அலைந்து திரிவதைக் காணமுடிகின்றது.

இதேவேளை அனேக பாடசாலைகளிலும் மாணவர் அனுமதியின் போது பிறப்புச் சான்றிதழ் மிகவும் முக்கியமானது அதனை வழங்கினால் மட்டுமே அனுமதி வழங்கப்படும் என அதிபர்கள் கட்டாயப்படுத்துவதனால் பிள்ளைகளை பாடசாலையில் சேர்க்கும் போது பெற்றோர்கள் இவ்விடயத்தில் பலவிதமாகப் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளையில் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களில் உள்ள பதிவாளர் பிரிவுகளில் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கும் மற்றும் அவசிய நேர்முகத் தேர்வுகளுக்கும் பிறப்பு அத்தாட்சி பெறவருவோர் தொகை அதிகரித்துள்ளதால் அவற்றை விரைவாக வழங்க முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-501)



அறுவடைக்கு விழவுகாலம்...

மகிழ்வான தருணம்: வட்டக்கச்சியைச் சேர்ந்த சின்னையா என்ற விவசாயிக்கு நெல் அறுவடை இயந்திரத்தைக் கடனடிப்படையில் கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளரான வீ.எஸ்.சிவகுமாரன் வழங்குகிறார். (207)

# நிவாரணம் இன்றி முகாம் மக்கள் அவலம்

வவுனியா, ஜன.26

வவுனியா வெண்கலச் செட்டிகுளம் நலன்புரி நிலையத்திலுள்ள மக்கள் நிவாரண உதவிகள் கிடைக்கப்பெறாமல் பெரும் இன்னல்களை அனுபவித்து வருவதாகப் பாதிப்படைந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

இந்த நலன்புரி முகாமில் புதுக்குடியிருப்பு, கேப்பாப்புலவு பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்கள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். நலன்புரி முகாமில் தங்கியிருப்பதால் வெளியிடங்களுக்குச் சென்று தொழில் புரிவதற்குப் ''பாஸ்'' அனுமதி பெறவேண்டும். இவ்வாறான நிலையில் தொழில் வாய்ப்புக்கள் எதுவுமற்ற நிலையில் முகாமுக்குள் முடங்கிக் கிடக்கின்றார்கள்.

அத்துடன் இங்கே ஆண் தலைமைத்துவம் இன்றி பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களே ஏராளம். இவர்களுக்கு வாராவாரம் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. நாளடைவில் மாதாந்தம் என வழங்கப்பட்டது. தற்போது அதுவும் இடை நிறுத்தப்பட்டுள்ளதால் இந்த நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் ஒரு வேளை உணவுக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தமது நிலை தொடர்பாக உரியவர்கள் கவனம் செலுத்தவில்லையெனவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (313)

# மீள்குடியேறிய மக்களுக்கு வீட்டுக் கடன் உதவிகள்

கிளிநொச்சி, ஜன.26

கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளின் எல்லைக்குட்பட்ட மீள்குடியமர்ந்த 300 பயனாளிகளுக்கு வீட்டுக் கடன் உதவிகள் வழங்கப்படவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

மீளக்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் நன்மைகருதி இலகு கடன் திட்டத்தின் மூலம் வீட்டுக் கடன் உதவியை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கடன் உதவியானது அரச தொழில் புரியும் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு 3 லட்சம் ரூபாவும், ஏனையோருக்கு 2 லட்சம் ரூபாவும் கடன் உதவியாக வழங்கப்படவுள்ளது.

கடன் உதவியைப் பெற விரும்புவோர் 155 ஆம் கட்டையில் அமைந்துள்ள கிளிநொச்சி தேசிய வீடமைப்பு அதிகார சபையுடன் தொடர்பு கொள்ள வேண்டுமெனக் கிளிநொச்சி தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் எம். ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

(க-313)

# வங்கியால் அறுவடை இயந்திரம் வழங்கப்பட்டது

முல்லைத்தீவு, ஜன.26

கிளிநொச்சி இலங்கைவங்கிக் கிளையினர் 25 இலட்சம் ரூபா பெறுமதியான நெல் அறுவடை இயந்திரமொன்றை விவசாயியொருவருக்குக் கடன் அடிப்படையில் வழங்கியுள்ளனர். வட்டக்கச்சியைச் சேர்ந்த சின்னையா என்பவருக்கே இந்த நெல் அறுவடை இயந்திரம் வங்கியினரால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தை கிளிநொச்சி இலங்கை வங்கியின் கிளை முகாமையாளர் வீ.எஸ். சிவகுமாரன் விவசாயிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் வங்கிக் கிளை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

தற்போது வன்னிப் பிரதேசத்தில் நெல் அறுவடை வேலைகள் அனேகமாக மனிதர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் ஒரே சமயத்தில் அறுவடை வேலைகள் நடைபெறுவதால் கூலிக்கு ஆள்களைப் பிடிப்பதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நெல் அறுவடை இயந்திரத்தின் மூலம் அறுவடைவேலைகள் சுலபமாக்கப்படுவதுடன் ஒரே நாளில் பல ஏக்கர் நெல்வயல்களில் அறுவடையை மேற்கொள்ளவும் (207)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23.02.1967
அமரர்
உதிர்வு 26.01.2009

கதிரவேலு விஜயகுமார்

கீரிமலையில் மலர்ந்து
தேவரையாளியில் புகுந்து
வன்னியில் உதிர்ந்தவரே!
நியாயங்கள் பல சொல்லி
என்னைக் கைபிடித்தவரே
எம்மை விட்டு எங்கு சென்றீர்?
அவனியில் எத்தனை நாள்கள் வந்தாலும்
அப்பா நீங்கள் எம்முடன் இருந்த
நாள்கள் ஈடாகுமா?
பாடல்கள் பல பாடித் தூங்கவைத்த அப்பாவே!
பாவிகள் நாம் உங்கள் படத்தின்முன் தூங்குகிறோம்
கணப்பொழுதில் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
காலம் எல்லாம் உங்கள்
தாகத்தால் வாடும் பூக்கள்.

'செல்லாலய்',
தேவரையாளி,

மனைவி - வி.தர்மராணி,
பிள்ளைகள்- யதுர்சன்,
ஐதுசாயினி.

அறை வாடகைக்குத் தேவை

தனியார் கம்பனியில் உயர்பதவி வகிக்கும் பெண் ஒருவருக்கு Commode உடன் குளியலறை வசதி கொண்ட வீட்டில் அறை உடனடியாக வாடகைக்குத் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0776139307 (109902)

விற்பனைக்கு

வியாபார ஸ்தாபனங்களுக்கும் வீட்டுப்பாவனைக்கும் ஏற்ற திண்டுக்கல் இரும்புப் பெட்டகங்கள் (IRON SAFE) தேவையான அளவுகளில் விற்பனைக்குண்டு. சகல விதமான பழுதடைந்த இரும்புப் பெட்டகங்களும் சிறந்த முறையில் திருத்யமைத்துக் கொடுக்கப்படும். இல. 13, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு:- 0779698942

கோழிக் குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRA No - 1 புறொயிலர் குஞ்சுகள் 26.01.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

T.P. No. 021 2222867, 0776090926

பதினேழாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சதாசிவம் கார்த்திகேசு
(உரிமையாளர் -V.S.K.S. சுருட்டுக் கம்பனி)



மலர்வு 01.12.1932

உதிர்வு 02.02.1994

திதி: 26.01.2011

ஆண்டுகள் பதினேழு ஆன பின்பும்
ஐயா உமை நாம் மறப்பதில்லை
திருமகள் சனசமூகப் பணியுடன்
முத்துவைரவர் பணியும் செய்தீர்
நன்றாய் வாழவைத்த எம் ஐயா!
நன்றியுடன் உமைத் தொழுவோமே!

09/12, திருமகள் வீதி,
அரியாலை.

நீங்காத துயரில் நித்தம் தவிக்கும்:
மனைவி - கா.உருக்குமணி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக உளவியல்சார் செயற்றிட்டம்

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மக்கள் இடம்பெயர்ந்து மீளக்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் சமூகவியல்சார் உள நலச் செயற்றிட்டங்களில் உள்ளடங்கிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்ற மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 14 மாவட்ட உள நலச்செயற்பாடுகளின் முக்கிய தேவை குறித்தும் இவ்வருடம் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசிய தேவைகள் குறித்தும் மாவட்டசார் பிரதிநிதிகளுடன் இக்கருத்தரங்கில் கலந்துரையாடப்பட்டது. அதில் பிர

**மக்கள் குடியமர்ந்த இடங்களில் சமூகவியல் சார் உள நலச் செயற்றிட்டங்கள் உள்ளடங்கிய வேலைத்திட்டங்கள்.**

தானமாக மீள்குடியேற்றம் நடைபெறும் பகுதிகளில் உளநலச் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதன் தேவை குறித்தும் ஆராயப்பட்டது.

குறிப்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் விசேட மருத்துவ முகாம்களை அமைப்பது தொடர்பாகவும் அத்துடன் பால்நிலைசார் விழிப்புணர்வைப் பிரதானமாக ஏற்படுத்துவதன் தேவை குறித்தும், சிறுவர்கள் நலன் தொடர்பாகக் கடமைபுரியும் அமைப்புகள் ஊடாக வேலைத்திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாகவும் இவற்றை முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் ஊடாகச் செயற்படுத்துவது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் எதிர்காலத்தில் மக்களின் தேவைகள் மற்றும் முன்னுரிமைப்படுத்த வேண்டிய செயற்பாடுகள் குறித்தும், அவை பயனுள்ளதாக அமைவதற்கு எவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இவ்வருட செயற்திட்டத்தில் குறிப்பாகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை விசேடமாக உள்வாங்கி அவர்களுக்குத் தேவையான அடிப்படைவசதிகளை ஏற்படுத்தியபின் இவற்றை நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(க-501)

## கிளிநொச்சி ஸ்கந்தபுரம் வீதி மோசமான நிலையில்

கிளிநொச்சி, ஜன.26

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் அவ் வீதியால் பயணம் செய்வோர் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

பாடசாலை மாணவர்கள், தொழிலுக்குச் செல்வோர் என அனைவரும் சிரமங்களை எதிர்கொண்டவாறு இந்த வீதியூடாகச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்கந்தபுரம் பிரதேசத்துக்கான பிரதான பாதை இது என்பதால் குண்டும் குழியுமாக கிரவல் வீதியாகக் காட்சியளிக்கும் இதனைப் புனரமைப்புச் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறார்கள். (க-313)

## துணுக்காய் வலயத்தில் கல்விச் செயலமர்வு

முல்லைத்தீவு, ஜன.26

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்தில் யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கல்விசார் செயலமர்வு ஒன்று நடைபெற்று வருகின்றது.

க.பொ.த. வகுப்பு மாணவர்களுக்கான இந்த ஆண்டு விஞ்ஞான ஆய்வுகூடச் செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வு ஒன்றே 15 நாள்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்தச் செயலமர்வை துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த விஞ்ஞான ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் இணைந்து நடத்தி வருகின்றனர்.

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் இச் செயலமர்வு நடைபெற்று வருகின்றது.

யுத்தத்திற்குப் பின்னரான கல்விச் செயற்பாடுகள் வன்னி மாவட்டங்களில் மெல்ல மெல்ல முன்னேற்றம் கண்டுவரும் வேளையில் இதுபோன்ற செயற்பாடுகள் மாணவர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையுமெனப் பெற்றோர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

மேலும் இச்செயலமர்வை ஏற்பாடுசெய்த கல்வி வலய உத்தியோகத்தர்களின் சிறந்த சேவைமனப்பான்மையையும் இவர்கள் பாராட்டியுள்ளனர்.

மேலும் இந்தச் செயல்மர்வில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பெரும் நன்மையடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. யுனிசெவ் நிறுவனம் இந்த மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-500)

**அறிவுக்கு ஊக்கம்...**



போற்றுதற்குரிய செயல்: ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி தமிழ்ச் சங்க அன்பாலய நிறுவனத்தினரால் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திற்கு வழங்கப்பட்ட பெறுமதியான நூல்களை ஓய்வு பெற்ற கிராம அலுவலர் மு.சிவனேசன் வித்தியாலய அதிபர் ந.கருணாகரனிடம் கையளிக்கின்றார். (500)

## பணியில் இல்லாத கிராம அலுவலர்

கிளிநொச்சி, ஜன.26

கிளிநொச்சி, அக்கராயன் குளத்தில் கிராம அலுவலர் பணியில் இல்லாமையால் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

பணியில் இருந்த கிராம அலுவலர் பதவி உயர்வு பெற்று இடம்மாறிச் சென்றதிலிருந்து ஸ்கந்தபுரம் கிராம அலுவலரே அக்கராயன் பகுதிக்கான பணியினையும் மேற்கொண்டு வருகின்றார்.

இந்நிலையில் தமது இடர்களை நீக்கும்பொருட்டு புதிய கிராம அலுவலர் ஒருவரை நியமிக்கும்படி கரைச்சி உதவி அரச அதிபர், கிளிநொச்சி அரச அதிபர் ஆகியோரிடம் மக்கள் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை அக்கராயன் பகுதிக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரிடம் கிராம அலுவலர் இல்லாத நிலை தொடர்பாக மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினரும் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக மக்களுக்கு உறுதியளித்துள்ளார். (க)

## கல்வியில் பெற்றோரின் பங்கு

கிளிநொச்சி, ஜன.26

மாணவர்களின் கல்வியில் பெற்றோர்கள் மிகுந்த அக்கறை செலுத்தும்போதே மாணவர்கள் கல்வியில் பெரும் வெற்றிகளை ஈட்டுவார்கள் என கிளிநொச்சி, அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் கண்ணபிரான் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பெற்றோர்கள் பாடசாலையின் சகல நிகழ்வுகளிலும் உற்சாகமாகக் கலந்து கொள்ள வேண்டும். பல பெற்றோர்கள் இப்பாடசாலையின் பழைய மாணவர்களாகக் கூட இருப்பார்கள். ஆனால் பாடசாலையின் நிகழ்வுகளில் ஒதுங்கியிருப்பார்கள். இந்நிலை மாற வேண்டும்.

மாணவர்களின் வளர்ச்சி பாடசாலையின் உயர்ச்சி என்பன பெற்றோர்களின் கைகளிலேயே தங்கியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

(க)

## கிளி. அக்கராயன் ம.வியின் ஆரம்ப பிரிவு இனி தனியாக

கிளிநொச்சி, ஜன.26

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு தனியாக இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலை 1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 780 வரையான மாணவர்கள் இங்கே கல்வி கற்றுவருகின்றனர்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கவிருக்கும் ஆரம்பப் பிரிவு வகுப்புக்களுக்குத் தனியான அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் நியமிக்கப்படுவார்கள்.

இந்தப் பாடசாலை இசுறு பாடசாலையாக மாற்றம் பெற்றதன் காரணமாகவே இதன் ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் பிரிந்து தனிப்பாடசாலையாக இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

# ஒட்டுசுட்டான் ம.விக்கு ஆஸி. நிறுவனம் நூல்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு, ஜன.26

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தின் நூல்நிலையத்துக்கு ஆஸ்திரேலியா நிறுவனமொன்று நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி தமிழ் வல்லுநர் அன்பாலய நிறுவனமே 1 லட்சத்து 24 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நூல்களை வழங்கும் நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி வித்தியாலய அதிபர் ந. கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நூல் அன்பளிப்பு நிகழ்வுக்குத் தொடர்பாளராகச் செயற்பட்டுவரும் ஓய்வுபெற்ற கனகரத்தினபுரம் கிராமசேவை அலுவலர் மு.சிவனேசன் நிறுவனத்தின் சார்பில் நூல்களை வழங்கினார். வித்தியாலய அதிபர் அவற்றைப் பெற்றுக்கொண்டார்.

வித்தியாலய அதிபர் தமது தலைமை உரையின்போது இந் நூல்களை இப்பாடசாலைக்கு வழங்கியமை குறித்து மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளாகிய மாணவர்களுக்கு இ[illegible]கள் ஒரு வரப்பிரசா[illegible]. இதன் மூலம் எமது மாணவர்கள் மேன்மேலும் கல்வியில் வளர்ச்சியடைந்து நல்ல பெறுபேறுகளைப் பெறுவர் என்பது திண்ணம். அன்பளிப்புக்கு முன்நின்று உழைத்த கற்சிலைமடுக் கிராமத்தைச் சேர்ந்தவரும் தற்போது அவுஸ்திரேலியாவில் பொறியிலாளராகக் கடமையாற்றும் பொன்னையா சீவரத்தினம் அவர்களுக்கும் சிட்னி தமிழ் வல்லுநர்கள் அன்பாலயத்திற்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் வழங்கப்பட்ட [illegible] கற்று [illegible] நல்ல பெறு பேற்றினைப் பெற வேண்டுமெனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து நூல்களைக் கையளிக்கும் நிகழ்வில் ஓய்வு பெற்ற கிராமசேவை அலுவலரான மு.சிவனேசன் உரையாற்றுகையில் எமது பிரதேச மாணவர்கள் தற்போது கல்வியில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் கல்வி நிலையினை மேம்படுத்தும் முகமாகப் புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியா நாட்டில் வாழும் எமது உறவுகள் தங்களது உழைப்பின் ஒருபகுதியை இதற்காகச் செலவிட்டு மிகவும் பிரயோசனமான பெறுதற்கரிய நல்ல நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இவர்களின் அன்பாலய நிறுவனத்துக்கு நன்றி கூறி நினைவு கூருகின்றோம்.

இந்த நூல்களை இப்பாடசாலை மாணவர்கள் நன்கு கற்று நல்லஅறிவினைப் பெற வேண்டும். மேலும் எமது கடல் கடந்து வாழும் உறவுகள் மாணவர்களின் நலனில் தொடர்ந்து அக்கறைசெலுத்தி கல்விக்கு உந்து சக்தியை விழங்கவேண்டுமெனவும் தெரிவித்தார்.

நன்றியுரையினை நூல்நிலையப் பொறுப்பாசிரியர் தெரிவித்தார். நிகழ்வில் ஆசிரியர்களும் உயர்தர மாணவர்களும் கலந்து கொண்டனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி - மாத்தளை ரயில் தடம் புரண்டது

கண்டி, ஜன.26

கண்டியிலிருந்து மாத்தளை நோக்கி நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்ற ரயில் தியபுபுல எனும் இடத்தில் தண்ட வாளத்தை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் தண்டவாளத்திலிருந்த சுமார் நூறு சிலிப்பர் கட்டைகள் சேதமாகியுள்ளதுடன் ரயில் எஞ்சினுடன் பெட்டியொன்றும் தண்டவாளத்தை விட்டு விலகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.பிரயாணிகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை.

ரயில்வே பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பின் நேற்று செவ்வாய்க்கிழமை ரயில் பாதை திருத்தப்பட்டு சேவைகள் வழமைக்குத் திரும்பியதாகக் கண்டி ரயில் நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (204-5)

## தொழிலாளர்களின் இன்றைய நிலைக்கு தொழிற்சங்கங்கள் பதில் கூறவேண்டும்

நுவரெலியா, ஜன. 26

கோதுமை மா, மண்ணெண்ணெய், தேங்காய் என்பனவற்றின் விலைகள் விண்ணைத் தொடும் அளவுக்கு உயர்ந்துள்ளதால் தோட்டத் தொழிலாளர்கள் அதிர்ந்துபோய் இருக்கின்றார்கள்.

இந்த நிலையில் உழைக்கும் தொழிலாள வர்கத்தினரான அவர்கள் மண்ணையும் புல்லையுமா உண்பது எனக் கேள்வி எழுப்பியுள்ள ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் மனோகணேசன், இந்த நிலைக்கு கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமுமே பதில் கூறவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொகவந்தலாவை பணிமனையில் நடைபெற்ற ஹற்றன் வலய அமைப்பாளர்கள் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

நடைமுறையிலுள்ள கூட்டு ஒப்பந்தம் மார்ச் இறுதியில் காலாவதியாகின்றது. இந்தநிலையில், இந்தத்தேர்தல் பிரசாரங்களின்போது கூட்டு ஒப்பந்தமும், தோட்டத் தொழிலாளர்களின் சம்பளமும் முக்கிய விடயங்களாக விவாதிக்கப்படவேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கு ஏற்ற சம்பளத்தைக் கூட்டுஒப்பந்தம் ஒரு போதும் வாங்கிக் கொடுக்கவில்லை. எனவே,இந்தநிலைமைக்குக் கூட்டுஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இ. தொ. கா., இ. தே. தோ. தொ. ச. ஆகிய இரண்டும் பதில் கூறியாக வேண்டும்- என்றார். (ளி)

## தென்மாகாணப் பாடசாலைகளில் 69 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை

மாத்தறை,ஜன. 26

தென்மாகாணத் தோட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க வேண்டுமாயின் அப்பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் - எனச் சபை உறுப்பினர் வீரசுமண வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் தெனியாய ஏண்ணோர்ட் தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தொண்டர் ஆசிரியர்களின் ஒன்றுகூடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் ஆறு தமிழ்ப் பாடசாலைகளும் காலி மாவட்டத்தில் நான்கு தமிழ்ப் பாடசாலைகளுமாக மொத்தம் பத்துப் பாடசாலைகள் காணப்படுகின்றன. தெனியாய கல்வி வலயத்திலேயே கூடுதலான தமிழ்ப் பாடசாலைகள் இருக்கின்றன. இங்கு 69 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

இங்கு ஆரம்பக்கல்வி, தமிழ் மொழி- சமயம், இரண்டாம் மொழி ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. இப்பகுதியைச் சேர்ந்த உயர்தரத்தில் சித்தியடைந்த 35 இளைஞர்- யுவதிகளே அர்ப்பணிப்புடன் மேற்படி பாடங்களைக் கற்பித்து வருகின்றனர்.

இவர்களின் திறமைமிக்க வழிகாட்டலில் புலமைப்பரிசில் பரீட்சையிலும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையிலும் மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருக்கின்றனர்.

இவர்களுக்கு நிரந்தர நியமனத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது அத்தியாவசியமாகும். நானும் தெனியாயப் பகுதியைச் சேர்ந்த ஒரு தோட்டத் தொழிலாளியின் மகன்தான். அதனால் தொழிலாளர்களின் வேதனையை நன்கறிவேன். அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசியல் ரீதியில் முயற்சிப்பேன் - இவ்வாறு மாகாண சபை உறுப்பினர் வீரசுமண வீரசிங்க தெரிவித்துள்ளார். (ளி)

## வீதியை மூடுவதை எதிர்த்து கண்டி மக்கள் ஆர்ப்பாட்டம்

கண்டி,ஜன26

கண்டி- மஹியங்கனைவீதியை புனரமைப்புச் செய்வதற்காக அந்த வீதியைத் தற்காலிகமாக மூடிவிடுவதற்கு அதிகாரிகள் எடுத்த முடிவுக்கு எதிராக நூற்றுக்கணக்கானோர் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

கண்டி மெததும்பறைப் பிரதேசத்திலிருந்து ஹசலக வரை 72 கிராம அதிகாரி பிரிவுகளில் வாழும் மக்கள் குறித்த வீதியை மூடியதால் பாதிப்படைந்துள்ளதாகவும் 17 கிலோமீற்றர் தூரம் வரையான பயணத்தை 160 கிலோமீற்றர் தூரம் வரை பயணிக்க வேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் மக்களின் வேண்டுகோளைச் செவிமடுத்த அதிகாரிகள் மாலை 5 மணி முதல் மறுநாள் காலை 9 மணி வரையும், நண்பகல் 12 மணியிலிருந்து ஒரு மணி வரையும் 36 ஆசனங்களைக் கொண்ட பஸ்கள் மட்டும் பயணிக்க அனுமதி வழங்கியுள்ளனர். (204)

## தலவாக்கலையில் 2 கடைகள் எரிந்து சேதம்

தலவாக்கலை நகரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற தீ விபத்தில் இரண்டு கடைகள் முற்றாக எரிந்து சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.

தீப்பற்றிய கடைகளை பொது மக்களும் பொலிஸாரும் இணைந்து நீரூற்றி அணைத்துள்ளனர்.

கடை மூடப்பட்டிருந்த நிலையிலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளது.இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(204)




## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### திருச்செல்வம் முகுந்தன்

மலர்வு
01.12.1977



உதிர்வு
26.01.2009

மௌனங்கள் வார்த்தைகளாக
என்றும் உம் புன்னகையில் வாழ்ந்தோம்
நம்பமுடியவில்லையே.........
உங்கள் முகம் பார்த்து ஆண்டிரண்டானதுவோ?
எம் இதயக் கோயிலின் தெய்வமே!
காலத்தின் கோடுகள் கண்ணீரில் கரைகின்றன
ஓலத்தின் ஓசைகள் வானையும் முட்டுகின்றன
அரைவிழி மூடி நீங்கள் விழுகையில்
விழுந்து பதுங்குகின்றீர் என நினைத்தோமே!
எறிகணைத்துண்டு இதயத்தைத் தொட்டதால்
திடீரென எமைப்பிரிந்த எந்தையே!
அக்கணம் முதல் அழுகையே நிலைத்தது.
அப்பா எனக்கேட்கும் பிள்ளையின் அழுகுரல்...
இதயமற்றவர் புரிந்திட்ட சதியினில்
இன்முகா உமை இழந்தோம்
எங்கள் ஏந்தலே!
எங்கள் இதயச்சிறையில்
வாழும் உமக்கு ஏது விடுதலை?

என்றும் உங்களை நெஞ்சில் நிறுத்தி வழிநடக்கும்,
குடும்பத்தினர்.

இல.1106, திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங். வேட்பாளர்கள் வெற்றி பெறுவது நிச்சயம்

## மாகாண அமைச்சர் சுபைர்

மட்டக்களப்பு, ஜன.26

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து போட்டியிடும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி பெறுவது நிச்சயம். அது மட்டுமன்றி அவர்களே அதிகூடிய விருப்பு வாக்குகளையும் பெறுவரென கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரும், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர சபைக்குப் போட்டியிடும் அ.இ.மு.கா. வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் ஆகியோர் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சுபைர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக்கட்சியான அ.இ.மு.கா. அரசின் பலமிக்க கட்சியாகவும், செல்வாக்கு மிக்க கட்சியாகவும் விளங்குகின்றது. மக்களின் ஆதரவு எமக்கு இருப்பதாலேயே அரசில் இச்செல்வாக்கு கிடைத்திருக்கின்றது - என்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அ.இ.மு.கா. அனைத்து இடங்களிலும் போட்டியிடுகின்றது. போட்டியிடும் இடங்களிலெல்லாம் எமக்கு வெற்றி நிச்சயம். இதை இப்போதே உறுதியாகக் கூறமுடியும். அ.இ.மு. கா. சார்பில் வெற்றிலைச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட பலர் முண்டியடித்து முன்வந்துள்ளனர். இது தேர்தல் வெற்றியை உறுதி செய்கின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் தலைமைத்துவத்தின் தீர்க்கதரிசனமான செயற்பாடுகளாலும், நம்பிக்கையான அணுகுமுறையாலும் அரசினதும், ஜனாதிபதியினதும் நம்பிக்கைக்குரிய கட்சியாக இன்று எமது கட்சி திகழ்கின்றது. மக்கள் சக்தியுடன் ஆலமரமாக வளர்ந்திருக்கும் அ.இ.மு.காங்கிரஸுக்கு வாக்களிப்பதன் மூலம் அதிகளவு நன்மைகளையும் அபிவிருத்திகளையும் எட்ட முடியுமென்பதைப் பொறுப்புடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன் - என்று அமைச்சர் சுபைர் தெரிவித்துள்ளார். (எ)

# வைத்தியசாலையில் குழந்தையை பிரசவிப்பதால் இறப்பு வீதம் குறையும்

திருகோணமலை,ஜன.26

வைத்தியசாலைகளில் தாய்மார்கள் குழந்தைகளைப் பிரசவிப்பதால் குழந்தையின் இறப்பு வீதத்தைக் குறைக்க முடியும் என திருகோணமலை பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஈ.ஐ.ஞானகுணாளன் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

இதனால் தாய், குழந்தை இறப்பு வீதத்தைக் குறைக்கமுடிவதுடன் குழந்தைகளுக்கு வரும் நோயையும் ஓரளவு கட்டுப்படுத்த இயலும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஒரு நாளும் வீடுகளில் குழந்தைகளைப் பிரசவிக்கத் தாய்மார் கள் முயற்சிக்கக்கூடாது.ஒரு குழந்தை பிறந்து 3 வருடங்களின் பின் னரே அடுத்த குழந்தையை பிறக்க வேண்டும் என்று வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஞானகுணாளன் தெரிவிதுள்ளார். (எ)

# தஹ்வா இஸ்லாமிய கலாபீட பட்டமளிப்பு விழா

சாய்ந்தமருது, ஜன.26

சாய்ந்தமருது தஹ்வா இஸ்லாமிய கலாபீடத்தின் 8ஆவது பட்டமளிப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது ஜும் ஆப் பள்ளி வாசலில் நடைபெறும்.

கலாபீடத்தின் தலைவர் அல்ஹாஜ் யூ.எல்.எம்.காசிம் மௌலவி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த அறிஞர்களும் கலந்து கொள்வர். (எ)

# மீராவோடை விவசாயி நீரில் மூழ்கி மரணம்

மட்டக்களப்பு, ஜன.26

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவில் மீராவோடை பதுரியா நகர்ப் பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மீராவோடை பதுரியா நகர் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான முஹம்மது ஹனீபா யூசுப் என்றழைக்கப்படும் விவசாயியே இவ்வாறு உயிர் இழந்தவராவார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தை அடுத்து தமது வயலுக்குச் சென்ற இவர் அங்குள்ள நீரோடையில் மீன்பிடிக்க முயன்றுள்ளார். இவ்வாறு மீன் பிடித்துக் கொண்டு இருக்கும் வேளையில் நீரில் மூழ்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் குடும்ப உறவினர்களின் வாக்குமூலங்களைப் பெற்று விசாரணைகளையும் மேற்கொண்டனர். (எ)

## மழை ஓய்ந்தும்...



அவலம்:-அண்மையில் தொடர்ந்து பெய்த மழையினால் வெள்ளம் வழிந்தோட முடியாமல் வீதியில் தேங்கி நிற்கின்றது. (204)

# பாதிப்புக்குள்ளான மாணவருக்கு உதவி

அம்பாறை,ஜன.26

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட வீரமுனையை சேர்ந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள், குழந்தைகளுக்கு உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமான பீப்பிள் சல்வேசன் போரம், சுவிற்ஸர்லாந்து மக்களுடன் இணைந்து குழந்தைகளுக்கான பால்மா பைக்கட்டுக்கள், பிஸ்கட்டுக்கள் மற்றும் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களையும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கியுள்ளது.

இந்நிகழ்வில் பீப்பிள் சல்வேசன் போரம் அமைப்பின் தலைவர் கலாநிதி எஸ்.கணேஸ், நிர்வாக உறுப்பினர்கள், வீரமுனை கிராம சேவையாளர்கள் மற்றும் வீரமுனை இணையத்தளக் குழுவினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வெள்ள அனர்த்தத்தினால் சிறுவர்கள் உளத்தாக்கத்திற்குட்பட்டிருந்தனர். அவர்களது உளவிருத்தியை விருத்தி செய்யும் நோக்கில் இந்தப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. (204)

# பல்கலைக்கழகத்தை தொலைபேசியில் மிரட்டும் காலம் மலையேறிவிட்டது

மட்டக்களப்பு,ஜன.26

யுத்தத்தினால் கடும் பாதிப்புக்குள்ளான யாழ் பல்கலைக்கழகம் துரித அபிவிருத்தி அடைந்துள்ள நிலையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உள்ள சிலர் யுத்தத்தைப் பயன்படுத்தி தங்களைப் புனரமைத்துள்ளதாக. மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் உலகின் எந்தப் போராட்ட வளர்ச்சியிலும் முக்கிய மைல் கல்லாக இந்த பல்கலைக்கழகங்களே காணப்பட்டன.

இலங்கையை எடுத்துக் கொண்டாலும் அந்த போராட்டங்களில் இந்த பல்கலைக்கழகங்கள் எந்தளவு முக்கியத்துவம் பெற்றிருந்தன என்பது அனைவருக்கும் தெரியும்.

அவ்வாறான ஒரு கட்டமைப்பைப் பேணிப்பாதுகாப்பது அனைவரதும் கடமையாகும். இன்று யுத்தத்தைக் காரணம் காட்டி எந்தவித வளர்ச்சியும் பல்கலை கழகத்தில் ஏற்படுத்தப்படவில்லை. அன்று நான் பார்த்த அதே பல் கலைகழகமே இன்றும் உள்ளது. எந்தவித பௌதீக வளர்ச்சியும் அங்கு ஏற்படுத்தப்படவில்லை.

யுத்தத்தில் வடகிழக்கில் பல் கலைக்கழகங்கள் அதிக பாதிப்புகளை எதிர்கொண்டன. அந்த பாதிப்புகளில் இருந்து யாழ். பல்கலைக்கழகம் வெகுவிரைவாக மீண்டெழுந்து இன்று சிறப்பான முறையில் பரிணமிக்கின்றது. ஆனால் கிழக்குப் பல்கலைக்கழகத்தை பொறுத்தவரையில் யுத்தத்தைக் காரணம் காட்டி அங்கிருந்த சிலர் தங்களை மட்டும் புனரமைத்துள்ளனர்.

பல்கலைக்கழக பேரவையினர் எடுக்கும் முடிவுகள் அமுல்படுத்தப்படும்போதே பல்கலைக்கழகத்தினை சிறந்த முறையில் கொண்டு செல்லலாம். பல்கலைக்கழகங்கள் அரசியல் நோக்கமில்லாமல் இயங்க தலையீடுகள் இன்றிச் செயற்பட வேண்டும். அப்போதுதான் அதன் நோக்கம் நிறைவடையும்.

கடந்த கால யுத்தத்தைப் பயன்படுத்தி இன்று பல்கலைக்கழகத்தில் பல குழுக்கள் உருவாக்கம் பெற்று வருவதால் அது பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைக்கும் அதன் வளர்ச்சிக்கும் பின்னடைவைக் கொண்டு வரும்.

கடந்த காலத்தைப்போன்று சிலர் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு பல்கலைக்கழகத்தை மிரட்ட எத்தனிக்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு இடமக்கொடுக்க வேண்டாம். அது ஒரு காலத்துடன் சென்று விட்டது. இன்று அந்த நிலைமையினை அவர்களால் ஏற்படுத்த முடியாது.

. அதற்கு நாங்கள் ஒருபோதும் இடம்கொடுக்கமாட்டோம். பல்கலைக்கழக நடவடிக்கைகள் என்றும் சுதந்திரமாகவும் கட்டுக்கோப்புடையனவாகவும் நடைபெற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (204)

# பாதிப்புக்குள்ளான கிழக்கு பல்கலை மாணவர்களுக்கு உதவிப் பொருள்கள்

மட்டக்களப்பு,ஜன.26

யாழ். மக்களினால், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்காக வழங்கப்பட்ட ஒரு தொகை உதவிப் பொருள்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா நுண்கலைக் கல்லூரியின் மாணவர்களுக்கே இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. ஒயாதகரங்கள் என்ற கோஷத்துடன் யாழ். மக்களினால் சேகரிக்கப்பட்ட இந்த உதவிப் பொருள்கள் சுவாமி விபுலானந்தா நுண்கலைக் கல்லூரியின் யாழ்.பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் மூலமாக மட்டக்களப்புக்கு கொண்டு வரப்பட்டன.

இந்தப் பொருள்கள் பல்கலைக்கழகத்தில் வைத்துவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன. சுவாமி விபுலானந்தா நுண்கலைக் கல்லூரியின் மாணவர் ஒன்றியத்தலைவர் தர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்லூரியின் ஊழியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். (204)

# கிரான் பகுதியில் வெடிகுண்டு மீட்பு

மட்டக்களப்பு,ஜன26

மட்டக்களப்பு, கிரான் பிரதேசத்துக்குட்பட்ட பகுதியிலிருந்து குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த பிரதேசத்தி லிருந்து பிரதேச செயலகத்திற்குச் செல்லும் பிரதான வீதியின் அண்மையிலிருந்தே இந்தக் குண்டு மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் படையினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அவ் விடத்துக்கு விரைந்த இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரி வினர் மேற்படி குண்டினை செயலிழக்கச் செய்தனர். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பம் வசூலித்துவரும் குழுக்கள் குறித்து உயர் பொலிஸ் அதிகாரிகளிடம் பிரஸ்தாபம்

கொழும்பு, ஜன.26

அரச உயர்மட்டங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற பேரில் நீண்டகாலமாக நகைக் கடை உரிமையாளர்களிடம் பெருந்தொகைப் பணத்தை அபகரித்து வந்த குழுக்கள் குறித்து செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக நகைக்கடைகளின் உரிமையாளர்கள் அச்சம் காரணமாக பொலிஸில் முறையிடவில்லை எனத் தெரிக்கப்படுகிறது.

நகை வர்த்தகர்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் கடந்தசனிக்கிழமை நடத்திய கலந்துரையாடலின் போதே இந்த விவகாரம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபாவின் ஏற்பாட்டில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இது குறித்து இலங்கை நகை வர்த்தகர் சங்கத்தின் தலைவர் ஆர். இராதாகிருஷ்ணன் தெரிவித்தவை வருமாறு:

கப்பம் கோரும் மேற்படி குழுக்கள் அரச உயர்மட்டத்துடன் தொடர்புள்ளவை என்றே நகை வர்த்தகர்கள் எண்ணியிருந்தனர்.

எமது இந்த சந்தேகத்தை பொலிஸ் அதிகாரிகள் தீர்த்துள்ளனர். அந்தக் குழுக்கள் அரசுடன் தொடர்புடையவை அல்ல எனவும், இராணுவத்திலிருந்து தப்பியோடியோரைக் கொண்ட குழுக்கள் எனவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி குழுக்களுக்கு கோடிக்கணக்கான ரூபா கப்பமாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (சி)

# கண்களை இழந்த இளைஞர் புனர்வாழ்வு முகாம் அனுப்பி வைப்பு

கொழும்பு, ஜன.26

இரு கண்களையும் இழந்த 25 வயதான இளைஞர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டு புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் புலிச் சந்தேகநபர் எனப் பொலிஸாரினால் கூறப்பட்டதையடுத்தே அவர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

திருக்கோவிலை சேர்ந்த இவர், யாழ்ப்பாணத்திலிருந்து வந்த போது ஓமந்தையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட நீதிமன்றில் இவர் ஆஜர்படுத்தப்பட்ட போது பதில் நீதிவான் எம். சிற்றம்பலம் அவரை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (சி)

# தமிழ் கைதிகளுக்கு ஏதாவது நேர்ந்தால் அரசே பொறுப்புக் கூற வேண்டும்

கொழும்பு, ஜன. 26

**குமரகுருபரன்**

தமிழ்க் கைதிகளுக்கு ஏதாவது நேர்ந்தால் அதற்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும். தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் கைதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற மோதல் குறித்துக் கருத் துக் கூறும்போதே, அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

தமிழ்க் கைதிகள் தம்மை விடுதலை செய்யுங்கள் அல்லது விசாரணைகளை நடத்துங்கள் என பல வருடங்களாகக் கோரிவருகின்றனர். இதற்கு அரசு செவிசாய்க்க மறுக்கின்றது.

அநுராதபுர சிறைச்சாலையில் தமிழ்க்கைதிகள் ஏனையவர்களால் அடித்துக் கொடுமைப் படுத்தப்படுகின்றனர். இது திட்டமிட்ட செயல் என எண்ணத்தோன்றுகிறது.

தமிழ்க் கைதிகள் பல தடவைகள் கூறியும் அரசு எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அவர்களுக்கு ஏதாவது அநீதி நேர்ந்தால் அரசே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். அத்துடன், அவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும் - இப்படி அவர் கூறினார். (சி)

# இலங்கை- இந்தோனேசிய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத் தலைவராக ரவூப் ஹக்கீம்

கொழும்பு, ஜன. 26

இலங்கை - இந்தோனேசிய நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவர் பதவிக்கு நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கை - இந்தோனேசிய நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் ஏற்பாட்டில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்தோனேசிய தூதர் தலைமையில் இந்த விசேட சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தவை வருமாறு:

இலங்கைக்கும், இந்தோனேசியாவுக்கும் இடையில் நீண்ட காலமாக சிறந்த நட்புறவு பேணப்பட்டு வருகிறது. பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக சிறந்த நட்புறவு காணப்படுகிறது. நமது நாட்டில் சுற்றுலாத்துறையை வலுப்படுத்த இந்தோனேசியாவின் ஒத்துழைப்பு முக்கியமாகும்.

விசேடமாக ஆசியாவிலேயே பலம் வாய்ந்த இரு நாடுகளாக நாம் சிறந்து விளங்கவேண்டும்.

இந்த சங்கத்தின் தலைவராக அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியும் செயற்பட்டுள்ளார். கடந்த 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் திகதி இந்தச் சங்கம் முதன்முதலாக உருவாக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம், பொருளாதார, சமூக, கலாசார ரீதியில் உறவு பேணப்பட்டு வருகிறது - என்றார்.

இந்தச் சந்திப்பில் பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத், இந்திக்க பண்டாரநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான கமலா ரணதுங்க, எரான் விக்ரமரத்ன, கனக ஹேரத், முத்தலிப் பாவா பாரூக், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி ஆகியோர் கலந்துகொண்டனர். (சி)

# எரிபொருள் நிலையங்கள் மீது அதிரடிச் சோதனைகள் ஆரம்பம்

நாடெங்கும் இயங்கி வரும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோசடிகள் நடைபெறுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதால் அவற்றை அதிரடி சோதனைகளுக்கு உட்படுத்துமாறு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளுடன் தண்ணீரைக் கலப்படம் செய்தல், அளவை மோசடி போன்ற குற்றச்சாட் டுகள் பற்றி நாளாந்தம் பல முறைப்பாடுகள் கிடைத்து வருவதாலேயே இந்த திடீர் சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நுகர்வோரைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையெனத் தெரிவித்த அமைச்சர், சோதனைகளின்போது மோசடிகள் தெரியவரின் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சீபெட்கோ, இந்திய எரி பொருள் நிறுவனம் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படும் 1200 நிலையங்கள் இயங்கி வருகின்றன. (சி)




சுகாதார அமைச்சின் தொற்று நோய்த்தடுப்பு பணியகமும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியமும் இணைந்து ஏற்பாடு செய்த தேசிய நோய்த்தடுப்பு திட்டத்தின் விழிப்புணர்வு செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை நுகேகொடை ஆனந்த சமரகோன் திறந்தவெளி அரங்கில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில் நோய்த்தடுப்பு தொடர்பான பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் ஊர்வலம் செல்கின்றனர். (204)

# வில்பத்து வனப்பகுதியில் புலிகளால் அச்சுறுத்தல்

கொழும்பு, ஜன. 26

வில்பத்து வன சரணாலயப் பகுதியை அண்டிய பகுதிகளில் புலிகளால் ஏற்பட்டுள்ள கடும் அச்சுறுத்தல் காரணமாக அந்தப் பிரதேச மக்கள் அச்சத்துடன் இருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 30 ஆண்டுகளாக நிலவிய உள்நாட்டுப் போர் காரணமாக, வில்பத்து வனப் பகுதி, குடியிருப்புகள் அற்ற நிலையில் வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டது.

யுத்தம் முடிவுற்ற நிலையில், அப்பகுதியை அண்டிய பிரதேசங்களில் ஓரளவுக்கு இயல்பு நிலை திரும்பியிருந்தது. எனினும், கடந்த சில நாள்களாக அந்தப்பிரதேச மக்களின் கால்நடைகள், கோழிகள் என்பன காணாமற்போகத் தொடங்கியுள்ளமை அப்பிரதேச மக்கள் மத்தியில் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

அவ்வாறான சம்பவங்கள் காரணமாக வில்பத்து வனப்பகுதியில் சிறுத்தைகள் அல்லது சிறுத்தைப் புலிகள் நடமாடுகின்றனவா என மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது. அது குறித்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடமும் பொதுமக்கள் தகவல் வழங்கியுள்ளனர். (சி)

# ஊடகர் பிரகீத் காணாமற் போய் ஒரு வருடம்; பொறுப்புக் கூற வேண்டியவர்கள் மௌனம்

கொழும்பு, ஜன. 26

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமற் போய் இற்றைக்கு ஒரு வருடமாகியும் அவருக்கு என்ன நேர்ந்தது என்பது தொடர்பாக ஆராய்வதற்கு பொறுப்பான பிரிவினர் தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமற் போய் நேற்று முன்தினத்துடன் ஒரு வருடம் பூர்த்தியாகியது. இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

காணாமற் போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட ஒரு சாதாரண மனிதரல்லர். அவர் சமூக விரோதியுமல்லர். நாட்டிலுள்ள முக்கிய பிரிவினர் மௌனமாயிருக்கும்போது குரல் கொடுப்பவராகத் திகழ்ந்தவர்.

இந்தநாட்டில் இடம்பெற்ற பெருமளவான நிதி மோசடிகளை முதற் தடவையாக மக்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டியவர் ஊடகவியலாளர் பிரகீத் ஆவார். தட்டவேண்டிய இடங்களிலும் அவர் தைரியமாகத் தட்டினார். நாட்டுக்கு, சமூகத்துக்கு நல்வழியை காட்டிய அவர், பணத்துக்கும், பலத்துக்கும் அடிபணியாது அவற்றுக்காக தம்மை மாற்றிக்கொள்ளாமல் செயற்பட்டார் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# இலங்கைத் தூதரகம் உறுதிப்படுத்திய மொழிபெயர்ப்பைப் பெற உத்தரவு

கொழும்பு, ஜன. 26

படை விட்டோடிகளை முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடன் இணைந்து தங்க வைத்திருந்தார் என்று குற்றஞ்சுமத்தப்பட்ட கப்டன் சேனக ஹரிப்பிரிய டி சில்வாவுக்கு பிணை வழங்குவதற்கு, [illegible] [illegible] வழங்கிய தீர்ப்பில், பெல்ஜியத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தால் உறுதிப்படுத்தப்பட்ட மொழி பெயர்ப்பைப் பெறுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

இதன்போது சேனக ஹரிப்பிரியவும் ஏனைய மூவரும் மேற்படி வழக்கில் பெல்ஜிய நீதிமன்றத்தால் நிரபராதிகளென விடுவிக்கப்பட்டுள்ளனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி. கிழக்குப் பிரதேச பண்பாட்டுப் பேரவை, கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் நடந்த கலை பண்பாட்டு விழாவில் இடம்பெற்ற கலாசார ஊர்வலம்.

# கலைகளுக்கு புத்துயிரூட்ட வேண்டும்

அச்சுவேலி, ஜன. 26

எமது பாரம்பரிய கலை வடிவங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு நாளாந்தம் குறிப்பிட்டளவு நேரத்தைச் செலவிட வேண்டும். அந்தவகையில் கிராமிய மட்டத்தில் மறைந்து கிடக்கும் கலை வடிவங்களை மீட்டெடுத்துப் புத்துயிர் ஊட்ட வேண்டும். எதிர்காலத்துக்கு மாறுபடாமல் கையளிக்க வேண்டும்.

இவ்வாறு கூறினார் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம்.

வலிகிழக்கு பிரதேசப் பண்பாட்டுப் பேரவையின் கிராம சேவையாளர் பிரிவுமட்டத்திலான கலைபண்பாட்டு விழா நடத்தும் செயற்றிட்டத்தின் கீழ் முதலாவது கலை பண்பாட்டு விழா சிறுப்பிட்டி வடக்கு கலைவாணி பாலர்முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

தமிழ்ப்பேரறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளை அரங்கில் சிறுப்பிட்டி, சிறுப்பிட்டி மேற்கு கிராம அலுவலர் பிரிவு இரண்டையும் உள்ளடக்கியதாக இந்த விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு ஆசிரியகலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமை தாங்கினார். விழாவில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

உலக மயமாக்கல், இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாடு, சமகாலச் சூழ்நிலைகள் போன்ற இன்னோரன்ன நிலைமைகளினால் தமிழ்மக்களின் பாரம்பரிய கலை இலக்கிய வடிவங்களிலும் பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய ஏதுநிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் எமது பாரம்பரிய கலைபண்பாட்டு வடிவங்கள் உள்ளபடி பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு இத்தகைய ஒருநாள் விழாக்கள் மட்டும் போதுமானவை அல்ல. - என்றார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் ஆ.சண்முகதாஸ் உரையாற்றும்போது:

தமிழ் இனத்தின் பாரம்பரிய கலைபண்பாட்டு வடிவங்கள் கலப்படம் இன்றி தூய வடிவமைப்பில் கிராமிய மட்டத்தில் உள்ளது. அதனை உரிய முறையில் பாதுகாத்து எமது எதிர்காலச் சந்ததிக்கு வழங்க வேண்டிய மிகப்பொரிய பொறுப்பு எல்லோருக்கும் உண்டு.

கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் கலை பண்பாட்டு விழாக்களை எடுக்கும் போது கிராம மட்டத்தில் கலை பண்பாடு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுவதோடு கிராம மட்டத்தில் மறைந்து வாழும் கலைஞர்களின் ஆற்றல்களும் இனங்காணப்பட்டு வெளிப்படுத்தும் நிலையும் அவர்களை கௌரவிக்கும் செயற்பாடும் முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழ்மொழியில் தமிழர் வாழ்வியலில் பண்ணும் இசையும் தொடர்புபடாத இடமே இல்லை நெல்லுக் குத்துவதிலும் கொத்து றொட்டி வெட்டுவதிலும் கூட இசை வடிவம் இருக்கும் இராகம் இருக்கும். தேவார பாடல்களில் மீக அழகிய பின் இசைவடிவங்கள் உண்டு. இவையெல்லாம் தமிழுக்குரிய சிறப்பியல்புகளாகும் - எனத் தெரிவித்தார். (ம-11)

# இலவசக் கல்வித் தந்தையின் ஆசை நிறைவேறியது

யாழ்ப்பாணம்,ஜன.26

இலவசக் கல்வியின் தந்தை கன்னங்கராவின் ஆசையும் அவரது இலக்கும் இன்று இமய மலை போல் உச்சத்தை தொட்டு விட்டது.

இலவசக் கல்வின் நோக்கம் இவற்றினால் இன்று பல லட்சக்கணக்கான வறிய மாணவர்கள் உயர்நிலைஅடைந்து இளைப்பாறி விட்டனர்.

யாழ். மாவட்ட தேச வள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க. முதலியார் இவ்வாறு தெரிவித்தார்.

கட்டுடை சைவ வித்தியாசாலையில் புதிய மாணவர்களை இணைப்பதற்கான கால்கோள் விழா பாடசாலை அதிபர் து.சிவஞானம் தலைமையில் இடம் பெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட க.முதலியார் தொடர்ந்து பேசுகையில்:

இலவசக் கல்வியின் நோக்கம் இன்றும் எமது நாட்டில் நீடித்து நிலைத்திருக்கின்றது.

இன்று கல்வி பற்றி பேசப்படுவது மட்டுமல்ல அதற்கான முக்கியத்துவமும் இன்று அதிகரித்து விட்டது.

கட்டுடை சைவித்தியாசாலை இன்று அதிகரித்த மாணவர் எண்ணிக்கை கொண்ட பாடசாலையாக விளங்குகின்றது. இந்தப் பாடசாலை விரைவில் ஜீ.சீ.ஈ சாதாரணம் தரம்வரை உயர்த்த நாம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் வேண்டுதல் விடுப்போம்.

இதனை விட முக்கியமானது கட்டுடை சைவ வித்தியசாலை நூற்றி இருபது வருடப் பழைமை வாய்ந்த பாடசாலை.

பௌதீகவள அபிவிருத்தியில் பின்தாங்கியே உள்ளது.

விரைவில் மாணவர்களின் கல்வி தரம் உயரவும் புற அக சூழல் அழகாக இருக்கவும் முதலில் கட்டுடை சைவ வித்தியாசாலைக்கு இரண்டு மாடி கட்டடம் அவசியம் தேவை.

அத்துடன் இன்றைய நாளில் புதிதாக வருகை தந்துள்ள மாணவர்கள் எதிர்கால கல்விமான்கள். அவர்களின் வாழ்வு வளம் பெற வாழ்த்தி வரவேற்கிறேன். - என்றார்.

இந்த நிகழ்விற்கு பிரதம விருத்தினராக ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி லோ. குலேந்திரன் கலந்து கொண்டார். சுன்னாகம் றோட்டறிக்கழகத் தலைவர் எஸ்.சபேசன், ஆரம்பக் கல்வி ஆலோசகர் திருமதி ரூபா உதயரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி ப.சிவகுருநாதன் கிராம அதிகாரி ச.சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-302)

# சிறுவர் ஆற்றல் வெளிக் கொணரப்பட வேண்டும்

யாழ்ப்பாணம்,ஜன.26

சிறுவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக் கொணர வேண்டிய பொறுப்பு சமுதாயத்துக்கு உண்டு என்று கோப்பாய்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

சுகவாழ்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட 'தேடும் சிட்டுக்கள்' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு கலைத்தூது கலையத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

பொருளாதார ரீதியில் பின்தாங்கிய மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர முடியாமல் கிராமப் புறங்களில் அதிகம் முடங்கிக் கிடக்கின்றார்கள்.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட கோப்பாய்ப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 16 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட சிறுவர் கழகங்களைச் சேர்ந்த மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர சுகவாழ்வு நிலையத்தினர் ஊக்கம் கொடுத்து இவ்வாறு சஞ்சிகையை வெளியிட்டது பாராட்டிற்குரியது.

[illegible]ல்விக்கு வறுமை [illegible] த[illegible]யல்ல, தன்னம்பிக்கை [illegible] இருந்தால் சிறந்த நல் எதிர்காலத்தை சிறுவர்கள் தாங்களே ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

உலகின் விஞ்ஞானிகளுக்கு, வல்லுநர்களும் தாய், தந்தை இழந்தவர்களாகவும் ஆவார்கள் இதனை சிறுவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தற்போது இளம் சமுதாயத்தினர் தொலைக்காட்சியில் மூழ்கி எதனைப் பின்பற்ற வேண்டும் என்பது தெரியாமல் ஒழுங்கற்ற வாழ்க்கை நடைமுறைகளைப் பின்பற்றி வருகின்றார்கள்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" [illegible] இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்வும் பல கருத்துரைகளை முன்வைத்தார்.

சுகவாழ்வு நிலையத்தின் இயக்குநர் அருட்தந்தை பி.செபமாலை பெரேரா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கோப்பாய்ப் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் திருமதி வரதீஸ்வரி சத்தியேஸ்வரன், திருமதி சம்திலி சதீஸ், கரித்தாஸ், சிறுவர் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் அ.அஜந்தன், சுகவாழ்வு நிலைய இணைப்பாளர் திருமதி வான்சீலின் கில்பேட் ஆகியோர் கலந்து கொண்டார்கள். (ம-313)

# செயற்கை அவயவங்கள் பொருத்த நிதியுதவி

நாவற்குழி,ஜன.26

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் 11 பேருக்கு செயற்கை அவயங்களை வழங்க நிதியுதவி வழங்கியது.

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் இவர்களுக்கு உபகரணங்களைப் பொருத்தியது.

செ.தங்கவேல்,சரசாலை, சாவகச்சேரி, க.சற்குணராசா, கங்காலி, காரைநகர், பி.சிறீவதனி, வராம்பற்றை, கோப்பாய் வடக்கு, ந.சுதர்சன், நீர்வேலி வடக்கு, சூ.ரம்மியா, செல்வபுரம், உரும்பிராய், இ.சிறிரஞ்சன், சிவகுல வீதி, உரும்பிராய், சி.ஜெயானந்தன், இராசவீதி, உரும்பிராய், பொ.இராமச்சந்திரன், துன்னாலை கரவெட்டி, சி.விக்கேஸ்வரன், பிரான்பற்று, பண்டத்தரிப்பு, பொ.ஜெயக்குமார், சுதுமலை மேற்கு, மானிப்பாய், கூ.சங்கர் திக்கம், அல்வாய் வடமேற்கு.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வோர் செய்கை அவயவங்களைப் பொருத்துவதற்கு மருத்துவரின் சிபாரிசுடன் கூடிய சான்றிதழ் பெறல் வேண்டும்.

தமது தேவை குறித்த கோரிக் கைக் கடிதம் ஒன்றை எழுதி கிராமசேவகரின் சிபாரிசைப் பெற்று பிரதேச செயலக சமூக சேவைகள் அதிகாரியிடம் இவற்றைச் சமர்ப்பித்து பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-121)

# மதுவரி திணைக்கள ஊழியர்கள் கௌரவிப்பு

கைதடி, ஜனவரி.24

யாழ்.மதுவரித் திணைக்களத்தில் கடமைபுரிந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் திணைக்களக் கேட்போர் கூடத்தில் யாழ். மதுவரித் திணைக்களத்தின் அத்தியட்சகர் கே.சோதிநாதன் தலைமையில் இடம் பெற்றது.

மேற்படி திணைக்களத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்கள் எஸ்.தயாளன், கே.சிவகடாட்சம், ஆர்.சந்திரகாந்தன் ஆகியோர் திணைக்கள உத்தியோகத்தர்களால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் கே.தர்மசீலன், சாவகச்சேரி மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

(ம-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
பொறுப்பான வேலைகளால் அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும். எதிர்பாராத வகையில் உருவான செலவு ஒன்றை மற்றொரு வகையில் சரிக்கட்டுவீர்கள். உங்களின் திறமையை வேலையில் காட்டுவீர்கள். உறவினர்கள் சிலரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆட்படலாம்.

**இடபம்:**
விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும் நாள். வருவாயை அதிகரிக்கும் விடயங்களில் நாட்டம் செல்லும். மற்றவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பு ஒன்று உங்களுக்குக் கிடைக்கவில்லையே என ஆதங்கம் அடைவீர்கள். எதிர்பாராத சிலர் உங்களிடம் உதவிகள் கேட்டு வரலாம். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும்.

**மிதுனம்:**
கடன் மிகுதிகளை வசூலிக்க முயற்சிப்பீர்கள். நீங்கள் விரும்பாத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். வாகனப் பயணங்கள் மகிழ்ச்சி தருவதாக அமையும். திட்டமிட்ட வேலை ஒன்றில் திடீரென மாற்றம் செய்யலாம். உறவினர்களால் செலவு உண்டு.

**கடகம்:**
உற்சாகம், தெம்புடன் செயற்படுவீர்கள். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரை சந்திப்பீர்கள். தொல்லை கொடுத்தவர்கள் எல்லை விட்டுச் செல்வர். கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். உங்களுக்குப் பிடித்தமான பொருளை சிலர் கொடுக்கலாம்.

**சிங்கம்:**
சிலரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடக்கலாம். பழமையான விடயங்களில் நாட்டம் செல்லும். உறவினர்கள் சிலர் உங்களிடம் வேடம் போடுவது கண்டு எரிச்சல் அடைவீர்கள். ஒரு செலவை நினைத்துக் கவலைப்படும் நேரத்தில் மற்றொரு செலவு ஏற்படலாம். சில பொருள்களை வாங்க ஒருவரிடம் அவசரமாகக் கடன் வாங்கலாம்.

**கன்னி:**
முக்கியமான வேலை ஒன்றை முடித்துக் கொள்ள சூழ்நிலை சாதகமாக அமையும். தொழில் கூட்டாளிகள் அனுசரணையாக நடந்து கொள்வர். பிறரை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காமல் நீங்களே செய்வீர்கள். உறவினர்கள் சந்திப்பால் குடும்பக் கதைகள் பேசி மகிழ்ச்சி அடைவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும்.

**துலாம்:**
தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். எளிதில் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்று பல மணி நேரத்திற்கு இழுத்தடிக்கலாம். சோர்வு, சோம்பல் குடிகொள்ளும் நாள். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்வீர்கள். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். செலவுகள் கூடும்.

**விருச்சிகம்:**
வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் சிலரை தேடிச் சென்று பார்ப்பீர்கள். பண விடயங்களில் மிகுந்த நாணயமாக நடந்து கொள்வீர்கள். நண்பர்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். மனைவி, குழந்தைகள் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். பரிசு, பாராட்டு உண்டு.

**தனுசு:**
கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். நண்பர்களுடன் மனக்கசப்புகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். பல நாள்களாக நீங்கள் எதிர்பார்த்த வாய்ப்பு ஒன்று தேடி வரலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களின் பெருமையைக் காட்ட முற்படுவீர்கள்.

**மகரம்:**
நினைத்ததை செய்ய முடியாமல் இடையூறுகளைச் சந்திக்கலாம். உதவி செய்த சிலரே இப்போது உபத்திரவமாக மாறலாம். இரண்டு நாள்களாகத் தடைப்பட்ட பணவரவுகள் இன்று வந்து சேரலாம். வெளியூர்களில் இருந்து வரும் உறவினர்களுக்காகச் சில காரியங்களைச் செய்வீர்கள். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆள்படலாம்.

**கும்பம்:**
குடும்ப உறுப்பினர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து உங்களுக்கு எரிச்சல் உண்டாக்கலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவர் மீது உள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். பெரிய எதிர்பார்ப்புடன் இருந்த விடயம் ஒன்று பிசுபிசுத்துப் போகலாம். சபலம், பேராசைகளால் தண்டச் செலவுகளுக்கு ஆள்படலாம்.

**மீனம்:**
நடப்பது நடக்கட்டும் எனத் தன்னம்பிக்கையுடன் சில காரியங்களைச் செய்வீர்கள். போட்டி, எதிர்ப்புகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் கூடும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உருவாகும்.

# மஹிந்த தமிழருக்கு உரிய தீர்வை தருவாரா...?

'சண்டே ரைம்ஸ்' பத்தி எழுத்தாளர் லஷந்த குருகுல சூரிய எழுதியுள்ள கட்டுரையைப் புதினப் பலகைக்கான இணையத்தளத்துக்காக மொழிபெயர்த்தவர் தி.வண்ணமதி.

13 வது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் நன்மைகள்தான் என்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான பேச்சுக்களின் போது குறிப்பிட்ட இந்தக் கேள்விக்கு, தான் விடை தேடியதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்.

''இதனை அறிவதற்கு நான் விரும்புகிறேன்''. இலங்கையினது இனப்பிணக்குக்கான அரசியல் தீர்வு தொடர்பாக எத்தகைய முனைப்புக்களை முன்னெடுக்கப்போகிறீர்கள் என ஊடகவியலாளர்கள் மஹிந்தவிடம் கோரியபோது, ''நான் எப்போதும் கூறுவதைப் போல 13 ஆவது அரசியலமைப்புச்சட்டத்தினை அடியொற்றியதாகவே தீர்வு அமையும்'' என்று மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வழி செய்யும் 13ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக ராஜபக்ஷ கூறுகிறார்.

அலரி மாளிகையில் 20 வரையிலான வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு புத்தாண்டினை முன்னிட்டு ராஜபக்ஷ சிறப்புக் காலை உணவினை ஒழுங்கு செய்திருந்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதி ராஜபக்ஷவின் சகோதரனுமான பஸில், ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்கள்.

ஊடகவியலாளர்கள் ஒவ்வொருவரும் மஹிந்தவிடம் தாம் விரும்பிய கேள்விகளைக் கேட்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

மாகாணங்களுக்கு காவல்துறை அதிகாரங்களை வழங்குவதோடு மாகாணங்களுக்கு நேரடி வெளிநாட்டு முதலீடுகள் சென்று சேர்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அதிகாரங்கள் பகிரப்படாது என்பதை ஜனாதிபதி ராஜபக்ஷ இதன்போது உறுதிபடக் கூறினார்.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதால் அதிக பிரச்சினைகள் உருவாகும் என்றும் இந்த முறைமை பின்பற்றப்படும் இந்தியாவில் இது தெளிவாகத் தெரிகிறது என்றும் அவர் கூறினார்.

மாகாணங்களுக்கான வெளிநாட்டு முதலீடுகள் என்று வரும் போது அது மத்திய அரசின் ஊடாகவே செல்லவேண்டும் என்றும் மஹிந்த உறுதிபடக் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான கலந்துரையாடல்களின் போது அவர்கள் எத்தகைய கோரிக்கைகளை முன்வைத்தார்கள் என ராஜபக்ஷவிடம் கேட்கப்பட்டது.

''பிரபாகரன் விரும்பியது எதுவோ அதனை நாம் நிச்சயம் கொடுக்கமாட்டோம். கேட்பதற்கும் ஒரு அளவிருக்கிறது'' எனப் பதிலளித்தார் மஹிந்த.

நாட்டினது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வினை முன்வைப் பதற்காக காலவரையறை தொடர்பாகக் கேட்கப்பட்டபோது, இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் முடிவெடுக்க வேண்டும்.- என்றார் அவர்.

''தமிழ்க் கட்சிகள் மத்தியில் கருத்தொருமைப்பாடு ஏற்படவில்லையெனில் அவர்களுடன் பேசி என்ன பயனிருக்கிறது. மத்தியில் அதிகாரங்களைப் பகிர்வதையே நான் விரும்புகிறேன்''.



என்றார் மஹிந்த.

அரசியல் தீர்வு தொடர்பாக தமிழ்க் கட்சிகள் அனைத்தும் கலந்துபேசி பொதுவானதொரு தீர்வு யோசனையினை முன்வைக்குமாறு தான் கூட்டமைப்பினரிடம் கோரியிருப்பதாக மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்.

இதன் பின்னர் தெற்கிலுள்ள அரசியல் கட்சிகளிடத்தில் குறிப்பிட்ட தீர்வு யோசனையினை தான் முன்வைப்பாராம் மஹிந்த.

இவ்வாறு முன்வைக்கப்படும் தீர்வினை தெற்கினது அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொள்வார்களா எனக் கேட்டபோது, ''நான் நாட்டை ஒருபோதும் விற்கமாட்டேன் என்பதை அவர்கள் நன்கறிவார்கள். தெற்கினது அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் குறுகிய மனப்பான்மையுடன் செயற்படவில்லை'' என்றார்.

இலங்கையின் நாடாளுமன்றில் தமிழர்களைப் பிரதிநிதித் துவப்படுத்தும் அளவில் பெரிய தமிழ்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கடந்த ஆண்டு அரசு பேச்சுக்களை ஆரம்பித்திருந்தது.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வினை எட்டும் நோக்குடனேயே இவர்களுக்கிடையிலான இந்தப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

2010 ஆம் ஆண்டு ஏப்ரலில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை நாடாளுமன்றின் 14 ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனதாக்கியிருந்தது.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஒரு துணை அலகாகக் கூட்டமைப்புத் தன்னை அடையாளப்படுத்திச் செயற்பட்டமையினால் அது மக்கள் மத்தியில் தனக்கிருந்த செல்வாக்கினைப் பெரிதும் இழந்தது எனலாம்.

கடந்த 30 ஆண்டுகால வரலாற்றில், 2010 ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில்தான் நாட்டினது வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்கள் விடுதலைப் புலிகளின் அழுத்தங்கள் எதுவுமின்றி சுதந்திரமாக வாக்களித்தார்கள்.

கடந்த செப்ரெம்பரில் 18 ஆவது அரசியலமைப்புத் தொடர்பான வாக்கெடுப்பு இடம்பெற்றபோது கூட்டமைப்பின் ஒரேயொரு சிங்கள இனத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான பியசேன அரசின் பக்கம் தாவியதைத் தொடர்ந்து கூட்டமைப்பின் நாடாளுமன்றப் பலம் 13 ஆகக் குறைந்தது.

இதுநாள்வரை இடம்பெற்ற அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்களைப் பொறுத்தவரையில் பேச்சுக்களில் பேசப்பட்ட விடயங்கள் என்ன என்பதை இரண்டு தரப்பினரும் பெரிதாக வெளியே கூறவில்லை.

இரண்டு தரப்பினருக்குமிடையிலான முதற்கட்டச் சந்திப்பாக அதிபர் ராஜபக்ஷவும் கூட்டமைப்பின் தலைவரும் தலைசிறந்த அரசியலாளனுமான இரா. சம்பந்தனுக்கும் இடையிலான பேச்சுக்கள் இடம்பெற்றன.

அரசுக்கும் கூட்டமைப்பினருக்கும் இடையிலான பேச்சுக்கள் தொடர்பான பல்வேறுபட்ட ஊகங்கள் வெளிவந்து அது இந்த முன்முனைப்புக்களைப் பாதிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலேயே இரண்டு தரப்பினரும் தமக்கிடையிலான பேச்சுக்கள் தொடர்பாக அதிகம் அலட்டிக் கொள்வில்லைப் போலும்.

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள்கட்டுமான, மீள்குடியமர்வுப் பணிகள் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பாக ஆராய்வதற்காக இரண்டு தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் குழுவில் அரசின் சார்பில் அமைச்சர்களான ரட்ணசிறி விக்கிரமநாயக்க, நிமல் சிறிபால டீ சில்வா, ஜி.எல் பீரிஸ் ஆகியோரும் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் கனக ஈஸ்வரன் ஆகியோரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மருத்துவக் காரணங்களுக்காக இந்தக் குழுவின் இறுதிக் கூட்டத்தில் இரா சம்பந்தன் கலந்து கொள்ளவில்லை.

இது இவ்வாறிருக்க, இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வினை ஏற்படுத்தும் இன்னொரு முனைப்பாக நாட்டிலுள்ள அனைத்துத் தமிழ் கட்சிகளும் இணைந்து தமிழ் அரசியல் கட்சிகளின் அரங்கம் என்ற ஒன்றை அமைத்திருக்கின்றன.

விடுதலைப் புலிகள் அமைப்பு செயற்படு நிலையில் இருந்த அந்தக் காலப்பகுதியில் நினைத்துப் பார்க்கவே முடியாத ஒன்றாகக் கருதப்பட்ட ஓர் அம்சம் தற்போது நிதர்சனமாகியிருக்கிறது.

பல்வேறுபட்ட பின்னணிகளையும் கருத்துக்களையும் கொண்டிருந்த தமிழ் அரசியல் கட்சிகள் ஓர் அரங்கமாக ஒன்றிணைந்திருக்கின்றன.

கூட்டமைப்புத் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் அமைத்திருந்த இந்த அரங்கத்தில் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததொரு நிகழ்வு.

நீடித்து நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வினை எட்டும் வகையிலும் மக்களின் மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளைக் கவனிப்பதற்காகவும் இவர்கள் ஒரு குடையின் கீழ் அணி திரண்டிருப்பது முதன்மையானது.

இந்த வாரத்தின் முதற்பகுதியில் இரண்டு அணி களையும் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட குழு வொன்று அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலான ஈ.பி.டீ.பி. மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மற்றும் சுதந்திரமாகச் செயற்படும் இதர தமிழ்க் கட்சிகள் ஆகியவற்றையும் இந்த அரங்கத்துடன் உள்வாங்காவிட்டால் தமிழ் அரசியல் கட்சிகளின் அரங்கம் என்ற ஒன்று உபயோகமற்றதாகத்தான் இருக்கும்.

இலங்கையிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில் கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளின் விளைவாக பெரும்பாலானவை தங்களது உறுப்பினர்களை இழந்து நிற்கின்றன.

எப்போதுமே விடுதலைப் புலிகள் தொடர்பாக கருத்துக்களை துணிந்து வெளிப்படையாகக் கூறி வந்த வி.ஆனந்தசங்கரி விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் முதலிடத்தில் இருந்தார் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

ஆனந்தசங்கரி, கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தமையினால் வடக்கு வாழ் தமிழ் மக்களை விடுதலைப் புலிகள் எவ்வாறு அடக்கி ஆண்டார்கள் என்பதை அவர் நன்கறிவார்.

போர் இடம்பெற்ற காலப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விட்டுக் கொடுப்புடன் செயற்படவேண்டுமெனக் கோரி ஆனந்தசங்கரி பல பகிரங்கக் கடிதங்களை எழுதியிருந்தார்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் சந்திரஹாசன் மீள்குடியேற்றப் பணிகளுடன் தொடர்புடைய சமூக அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், சிறீ ரொலோ போன்ற ஏனைய தமிழ்க் கட்சிகளும் தமிழ் கட்சிகளின் அரங்கத்துடன் இணைந்து செயற்படுகின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தினர் அதிபர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் துன்ப துயரங்களைப் போக்குவதற்கான ஒரு முனைப்பாக நாட்டிலுள்ள தமிழ்க் கட்சிகள் அனைத்தும் கருத்தொருமைப்பாட்டுக்கு வருவதற்கு முயற்சிப்பதானது இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் இடம்பெறும், யாருமே எதிர்பார்க்காத வரவேற்கத்தக்கதொரு அம்சம்.

தமிழ் கட்சிகளின் அரங்கமானது கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்திவரும் அதேநேரம் கூட்டமைப்பு அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறது.

நாட்டினது இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்தப்படவேண்டுமெனில் அதற்கு தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் அரசியல் உறுதியுடன் செயற்படுவது அவசியமானது.

இடம்பெற்று முடிந்த தேர்தல்களின் போது உறுதியான, மக்கள் ஆணையினைப் பெற்றிருக்கும் மஹிந்த ராஜபக்ஷவினால் அரசியல் தீர்வினை கொண்டுவரும் முயற்சியில் காத்திரமான பங்கினை வகிக்கமுடியும்.

அத்துடன் ''நான் ஒருபோதும் நாட்டை விற்க மாட்டேன்'' என்ற நம்பிக்கை மக்களிடமிருக்கிறது என்ற மஹிந்தவினது கூற்றுக்கமைய தென்பகுதி மக்கள் அவரிடத்தில் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

இது இனப்பிரச்சினை விடயத்தில் மஹிந்த உறுதியுடன் செயற்படுவதற்கான அடித்தளத்தினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது எனலாம்.

# உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்



அசுரத் தனத்தோடு அலையும் ஒருவனைத் தேவனாக மாற்றும் வலிமை பகவத்கீதையின் பதினாறாவது அத்தியாயத்தில் இருக்கிறது. அதை ஒவ்வொரு மனிதனும் ஆழமாகப் படிக்க வேண்டும்.

நமது மனதில் படிந்திருக்கிற அறியாமை, அரசுத்தனம் என்கிற கழிவுகளை எரிக்கிற நெருப்பு கீதையில் இருக்கிறது. ஸ்ரீசத்யசாய் ஸ்ரீதாவாஹினி என்கிற கீதைப் பேருரையில் ''கீதையில் மொத்தம் எழுநூறு தீக்குச்சிகள் இருக்கின்றன. மெய்யறிவு என்ற தீயை எந்தக் குச்சியில் இருந்தும் பற்றவைக்கலாம். அனுபவம் என்ற கல்லில் அதைத் தேயுங்கள் அதுவே போதுமானதாகும். என்று கூறப்படுகிறது.

கீதையைப் படித்தால் மட்டும் போதாது- அதை நடைமுறைப்படுத்த வேண்டும் ''கற்கக் கசடற'' என்ற வள்ளுவர் ''கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்றார். நம்மவர்கள் கீதையைப் படிக்கிறார்கள்; பின்பற்றுவது இல்லை.

கோள் சொல்லாதவன், பிராணிகள் மீது அன்பு காட்டுபவன், பேராசையில்லாதவன், மென்மை உள்ளம் உடையவன், சபலமற்றவன் தேவனாகிறான் என்று பதினாறாவது அத்தியாயம் இரண்டாவது சுலோகம் கீதையில் பேசுகிறது.

கோள் மூட்டுதல் கீழானகுணம், மேலோர் அதை விரும்புவதில்லை. அதனால் பாதிக்கப்படுவதில்லை. வேலைக்காரிகள் தங்களைத் தாக்க வைத்துக்கொள்ள மாமியார் பற்றி மருகளிடமும் மருமகள் பற்றி மாமியாரிடமும் கோள்மூட்டுவது உண்டு. மூடப் பெண்கள் அதை நம்பி சண்டை போடுகிறார்கள்.

முதலாளி பற்றி அவர் மனைவியிடம் கோள்மூட்டிப் பணம் கறக்கிற டிரைவர்களும் உள்ளனர். நண்பர்களைக் கோள்மூட்டிப் பிரிக்கிற நயவஞ்சகர்கள், பகைவர்களாக்குகின்ற பாவிகள் பலரை உலகம் பார்த்திருக்கிறது.

கோள் மூட்டுபவனும், அதைக்கேட்டு நடப்பவனும் அசுர சாம்ராஜ்யத்தைப் பூமியில் நிலை நிறுத்துபவர்கள்.

அடுத்து விலங்குகள் மீது தயை காட்டுதல் தெய்வகுணம் எனப்படுகிறது. சிலபேர் நாய்களைக் கல்லால் அடிப்பார்கள். மகான்கள் கருணையாகவே விலங்குகளை நடத்துவர்கள். ஷீரடி சாய்பாபா தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குதிரையை அதன் காவலன் அடித்த போது தாம் அடிபட்டதாக நம் முதுகைக் காட்டினார். தம்மோடு இருந்த நாய்களுக்கு உணவிட்டுத் தடவிக்கொடுக்காமல் அவர் சாப்பிட்டதில்லை.

இராமன் அணிலுக்கு அருள்பாலித்தார் என்பது செவிவழிக் கதை. அண்மைக் காலத்தில் வாழ்ந்த ரமண மகரிஷி தம்முடன் வாழ்ந்த பல விலங்குகளையும் மறுபிறவியின்றி முத்திபெறச் செய்தார். ரமண ஆசிரமத்தில் அந்த விலங்குகளின் சமாதிகள் கூட உள்ளன. கூண்டில் அடைக்கப்பட்ட பறவைகளை விலை கொடுத்து வாங்கி அவற்றைத் திறந்து விடுவதை வாடிக்கையாகக்கொண்ட சில பெரிய மனிதர்களும் உண்டு.

''உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்'' என்றார் மஹாகவி பாரதி. விசப்பாம்பு ஒன்றை மந்திரத்தால் கட்டியதற்காக வள்ளலார் வருந்தினார். மீன்களைக் கொல்லும் தூண்டிலையும் வலைகளையும் கண்டபோதேல்லாம் கண்ணீர் விட்டுக்கதறினார் அவர்.

விஞ்ஞான ஆராய்ச்சியாளர் ஒருவர் பூனை வளர்த்தார். அது எரியும் மெழுவொர்த்தியைத் தட்டி விட்டதால் அவரது நெடு நாளைய ஆராய்சிக்காகிதங்கள் எரிந்துவிட்டன. நியாயமாகப் பூனை மீது கோபம் வந்து பலர் அதனைக் கொன்றே போட்டிருப்பார்கள். அவரோ நெருப்பைப் பார்த்துப் பயந்த பூனையைத் தடவிக்கொடுத்து அதன் பயத்தை நீக்கப் பாடுபட்டார்.

இவர்களது இந்தப் பண்புகள் அவர்களைத் தெய்வங்களாக ஆக்கிவிட்டன. பிராணிகள் மீதுள்ள தயை பலருக்குள் இருந்த தெய்வீகத்தைக் கிளறிவிட்ட வரலாறுகள் உண்டு.

வேடன் அம்பால் அடிபட்டு விழுந்த தன் துணையைக் கண்டு சோகத்துடன் அலறிய ஒரு கிரஷெஞ்சப் பட்சியின் அழுகுரல்தான் வேடனாக அலைந்த வால்மீகிக்கு இராமாயணம் பாடுகிற வால்மீகி முனிவராகப் பதவி உயர்வு தந்தது.

அடுத்து 'பேராசையையும் சபலத்தையும் வென்றவனே தேவன் என்கிறது கீதை. பேராசை உள்ளவர்கள் நிறையவே அடைவதில்லை. நிம்மதி பெறுவதில்லை. எனவே அவர்கள் இருக்கும் இடம் நரகமாகிறது - அவர்கள் அமைதி இழந்து தவிப்பதால் உறங்க மாட்டார்கள், பிறரையும் உறங்க விடமாட்டார்கள்.

சில குழந்தைகள் எல்லாவற்றையும் தானே உண்ண வேண்டும் என்கிற வெறியால் யாருக்கும் எதையும் கொடுக்காமல் வாயில் திணித்துக்கொண்டு திணறித் திணறித் உண்ணும். கண்களை மலங்க மலங்க விழித்தபடி கொஞ்சம் கண்ணீர் வரும்படி தொண்டையில் சிக்கித் திணறும். அப்போதும் கையில் இருக்கிற பண்டத்தை எறியாது தட்டில் இருப்பதை யாரும் எடுக்கவும் முடியாது. இவை அசுர உணர்வின் அடையாளங்கள். அந்த இராட்சத சாயல் உள்ள குழந்தைகளைக் கவனமாகத் திசை திருப்பவேண்டும். பேராசை பெருநஷ்டம் என்று சொன்னால் போதாது, புரியவைக்கவேண்டும். உணர்த்த வேண்டும். ஆசைப்படுவது ரோஜாவை முகர்ந்து பார்க்கிற மாதிரி. பேராசைப்படுவது றோஜாவைச் செடியோடு பெயர்த் தெடுக்கிற மாதிரி.

ஹிட்லர் பேர்ாசைக்காரன். பிறர் சொத்துக்களைக் கொள்ளையாடிப் பல அரக்கர்கள் உலகத்தை நர்கமாக்கிய பாவிகள். எனவே மனிதர்கள் அரக்கர்களாக மாறக்கூடாது.

சுகி.சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய் இல்லாமல் தண்ணீரில் சமைப்பது நல்லது



நாள்தோறும் சமையலில் எண்ணெய்க்குப் பதிலாகத் தண்ணீரைப் பயன்படுத்தலாம் என இதயநோய் நிபுணரும் சேவோல் சுகாதார ஆராய்ச்சி அறக்கட்டளையின் நிறுவுநருமான டாக்டர் ''பிமல் சாஜ்ஜர்'' தெரிவித்துள்ளார்.

1992ஆம் ஆண்டில் 1.6 கோடியாக இருந்த இதய நோயாளிகளின் எண்ணிக்கை 2010ஆம் ஆண்டில் 10 கோடியாக உயர்ந்துள்ளது. இதயத்தில் ஏற்படும் அடைப்புகளை நீக்குவதற்கு பை-பாஸ் அறுவைச் சிகிச்சை அல்லது ஆஞ்சியோ பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை.

உணவுத் திட்டம், உடற்பயிற்சி, மன அழுத்த மேம்பாடு, யோகா, நடைப்பயிற்சி ஆகிய 5 முறைகளையும் தினமும் பின்பற்றினால் இதயப் பாதிப்பைக் குறைத்துவிடலாம். அறிவியல் மற்றும் வாழும் கலையை இணைத்த செயற்பாடுகளின் மூலம் இதயத்தில் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்கலாம்.

இதயத்தில் சிறிய அளவில் ஏற்படும் அடைப்புகள், பல ஆண்டுகள் கழித்து பெரிதாகி வெடித்துவிடும். அவ்வாறு வெடித்து விட்டால் அந்த அடைப்புகள் இருந்த பகுதி முழுவதும் செயலிழந்துவிடும். இந்த அடைப்புகளுக்கு முக்கிய காரணம் இரத்தக் குழாய்களில் அதிகளவு கொழுப்பு படிவதே. அதிகக் கொழுப்புப் படிவதற்கு சமையலில் உபயோகப்படுத்தும் எண்ணெய்தான் காரணம்.

இதயத்தில் உள்ள அடைப்பை நீக்க பின்வரும் முறைகளைப் பின்பற்றலாம்.

* காற்றுப்பைகள் மூலம் இரத்தத்தை வேகமாகச் செலுத்துவதன் மூலம் இரத்தத்தில் உள்ள அடைப்புகளை நீக்க முடியும்.
* ஊசியின் மூலம் வேதிப் பொருளை செலுத்துவதன் மூலம் இதயத்தில் உள்ள அடைப்புகளைக் கரைக்க முடியும். இந்த இரண்டு முறைகளையும் 80 சதவீதப் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு செய்தால் போதுமானது.

# மின்சாரத்தில் இயங்கும் புதிய மினி கார்



புதிய அம்சங்களுடன் கூடிய இஎன்-வி என்ற பெயரில் மின்சாரத்தில் இயங்கும் காரை ஜெனரல் மோட்டார் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தக் கார் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்கவும் சாலைகளில் போக்குவரத்து நெரிசலை குறைக்கவும் பற்றரியில் இயங்கும் எலக்ட்ரிக் கார்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் குறைந்த தொலைவு மட்டுமே செல்ல முடியும் என்பதால் அவை மக்களிடத்தில் போதிய வரவேற்பைப் பெறவில்லை.

இந்தநிலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையிலும், பார்க்கிங் தொல்லைக்கு பதிலளிக்கும் வகையிலும் மேம்படுத்தப்பட்ட இலத்திரனியல் காரை ஜெனரல் மோட்டார் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் லாஸ்வேகாஸ் நகரில் நடந்த விழாவில் இந்த நிறுவனத்தின் இயக்குநர் கூறியதாவது:

இஎன்-வி காரானது சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையிலும், குறைந்த மின்சாரத்தில் இயங்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் காருக்கு ஒருமுறை சார்ஜ் செய்தால் 25 கி.மீ வரை பயணம் செய்யலாம். இரண்டு பேர் அமர்ந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்ட இந்தக் காரை அதிகபட்சம் 25 கி.மீ வேகத்தில் செலுத்தலாம். இந்தக் காரை பார்க்கிங் செய்வதற்கு குறைந்த இட வசதியே போதுமானது. இந்தக் காரின் வர்த்தக ரீதியான விற்பனையை ஆரம்பிப்பது குறித்து எந்த அறிவிப்பையும் இதுவரை வெளியிடவில்லை.

# அழகான கன்னங்களைப் பெற வேண்டுமா?



அழகான கன்னங்களைப் பெற வேண்டுமா? உங்கள் முகம் மற்றவர்களை வசீகரிக்க வேண்டுமா? கவலையை விடுங்கள். கன்னம் ஒட்டி இருப்பது ஒரு பெரிய குறையே இல்லை.

ஆரோக்கியமான உணவுகளை உண்டு வந்தால் மிக எளிதாக அழகான கன்னங்களைப் பெறலாம். உணவில் புரதம், மாச்சத்து, கொழுப்புச் சத்து, நிறைந்த பொருள்களை நிறையச் சேர்க்க வேண்டும்.

பால், முட்டை, மீன், இறைச்சி, வெண்ணெய், நெய், வாழைப் பழம், வேர்க்கடலை, சுண்டல் ஆகியவற்றை அடிக்கடி உணவோடு சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது.

பருப்பு, கீரைவகைகள் ஆகிய உணவுகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாகத் தினமும் எட்டு மணி நேரம் உறங்க வேண்டும். தேவையில்லாமல் கவலைப்படுவதை விட்டு விடுங்கள்.

இப்படிச் செய்து வந்தால் ஒட்டிய உங்களது கன்னம் அழகாக மாறி விடும்.

# யோகா கலை பயிற்றுநராக 6 வயதுச் சிறுமி



ஸ்ருதி பாண்டே எனும் ஆறு வயதுச் சிறுமி உலகின் மிக இளமையான யோகா கலை பயிற்றுநராக விளங்குகின்றார்.

இவ்வளவு சிறிய வயதில் அவர் யோகாக் கலையைப் பயிற்றுவிப்பது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

உடலை வளைப்பதில் திறமை மிக்க ஸ்ருதி பாண்டே, வட இந்தியாவில் உள்ள ஆச்சிரமம் ஒன்றில் கடந்த இரண்டு வருடங்களாகத் தன்னைவிடப் பெரியவர்கள் பலருக்கு யோகாக் கலையைப் பயிற்றுவித்து வருகின்றார்.

அவருடைய பயிற்றுவிப்பாளரான ஹரி சேட்டன் (வயது 67), 35 வருடங்களுக்கு முன்பு இந்த ஆச்சிரமத்தைத் தோற்றுவித்தார். இந்த ஆச்சிரமத்தில் 4 வயதில் மாணவியாக வந்து சேர்ந்த ஸ்ருதியின் யோகாத் திறமையை ஹரி சேட்டன் கண்டுவியந்தார்.

தற்போது ஸ்ருதி, ஜுன்ஸி நகரிலுள்ள பரமானந்தா சரஸ்வதி தமது நிலையத்தில் ஒவ்வொரு நாளும் அதிகாலை 5 மணிக்கு வெள்ளை ஜீன்ஸ், சிவப்பு நிற சேட் அணிந்து யோகாக்கலை வகுப்பை ஆரம்பித்து விடுவாள்.

அவளிடம் வர்த்தகர்கள், ஆசிரியர்கள், இல்லத்தரசிகள், ஓய்வு பெற்றவர்கள் என 30 பேர் யோகா கலையைப் பயில்கின்றனர். என்னுடைய அறிவுறுத்தல்களை மக்கள் பின்பற்றுவதைப் பார்த்து நான் சந்தோசப்படுகின்றேன்.

அவ்வேளையில் நான் உண்மையான ஓர் ஆசிரியர் போன்று உணர்கிறேன் என ஸ்ருதி கூறுகிறாள்.

எனது சகோதரன் யோகா செய்வதைப் பார்த்த பின்புதான் எனக்கும் இந்தக் கலைமீது ஆர்வம் வந்தது. அந்தக் கலைகளை நான் சுயமாகப் பயில்வதற்கு முயன்றேன். ஆனால் அது மிகவும் கடினமாக இருந்தது. எனவே நான் எனது பெற்றோரிடம் யோகா வகுப்பிற்கு என்னை அனுப்பும்படி கூறினேன் என்று குறிப்பிடுகின்றாள்.


ஸ்ருதியின் சகோதரன் ஹார்ஸ் குமார் (வயது 11), தனது 5 ஆவது வயதில் 84 யோகா நிலைகளையும் பயின்று லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'ஸ்ருதி ஓர் ஆச்சரியம்' என்கிறார் அவரின் பயிற்றுநர் ஹரி சேட்டன்.

அவள் வேகமாகக் கற்றுக் கொள்பவள். தனது வயதையொத்த ஏனையோரைவிட அவள் நுட்பங்களை விரைவாக் கற்றுக் கொள்வாள். 6 மாதங்களுக்குள் அவள் கடினமான யோகா நிலைகளைச் செய்வதில் ஏனைய அனைவரையும் மிஞ்சினாள் என ஹரி சேட்டன் கூறுகிறார்.

ஸ்ருதியின் யோகா வகுப்பில் கடந்த 03 மாதங்களாக யோகா கலை பயின்றுவரும் தொழிலதிபரான லோகேந்திரா போல் சிங் (வயது 48) கருத்துத் தெரிவிக்கையில், நான் எனது வாழ்க்கையில் சாதகமான பல மாற்றங்கள் நிகழ்வதை காண்கின்றேன். நான் முன்பு அதிகமாக கோபப்படுபவனாக இருந்தேன். ஆனால் தற்போது எனது கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடிகிறது. நான் அமைதியானவனாக மாறிவிட்டேன். இவை அனைத்துக்கும் நான் ஸ்ருதிக்கே நன்றி கூறவேண்டும்'' என்கிறார்.

# வானத்தில் புதிய சூரியன் தோன்றும்; விஞ்ஞானிகளின் அதிர்ச்சித் தகவல்!



தற்போதைய உலகில் விண்ணில் பல அதிசயங்கள் நிகழ்ந்து வருகின்றன. இந்நிலையில் வானில் மிகவும் சக்திவாய்ந்த வெளிச்சம் ஒன்று ஏற்பட உள்ளது. பூமி தோன்றிய நாள் முதல் இந்த மாதிரியான நிகழ்வு ஏற்பட்டதில்லை. இந்த வெளிச்சமானது இரவைப் பகல் போன்று மாற்றும். ஒருவாரம் முதல் 2 வாரங்கள் வரை ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

அதிசக்தி வாய்ந்த விண்மீன் கூட்டமானவை பூமியில் இருந்து 640 வெளிச்சம் ஆண்டுகள் தூரத்தில் உள்ளன. இந்த விண்மீன் கூட்டங்கள் சிவப்பு நிறத்திலான இராட்சத வடிவமானவை.

இவற்றின் ஆயுள்காலம் முடியும்போது அவை கூட்டம் கூட்டமாக வெடித்துச் சிதறும். இவ்வாறு வெடித்துச் சிதறும்போது வானில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்தில் அதிசக்திவாய்ந்த வெளிச்சம் தோன்றும்.

இது மற்றொரு சூரியன் புதிதாக தோன்றியதைப் போன்ற தோற்றத்தை உருவாக்கும். இச்சம்பவம் இந்த ஆண்டு இறுதியில் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

அப்படி இல்லாவிட்டால் அடுத்த 10 லட்சம் ஆண்டுகளுக்குப் பிறகுதான் உண்டாகும். இந்தத் தகவலை ஆஸ்திரேலியாவின் தெற்கு குவின்ஸ்லாந்துப் பல்கலைக் கழகத்தின் இயற்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் பராட்கார்டர் தெரிவித்துள்ளார்.

# அதிகம் சிந்தித்தால் உடல் எடை அதிகமாகும்



அதிகம் சிந்தித்தால் உடல் எடை அதிகரிக்கும் என்று ஆய்வு முடிவுகள் வெளியாகியுள்ளன. மருத்துவர்களும் இதை உண்மை என்று கூறுகின்றனர். உடல் உழைப்பு அதிகம் இருக்கும் பணிகளில் இருப்பவர்களுக்கு, உடல் எடை அதிகரிப்பு ஏற்படாது. அதே சமயம் உடல் உழைப்பு குறைவாகவும் சிந்தனைத்திறன் அதிகமாகவும் உள்ள பணிகளில் இருப்பவர்கள் உடற்பருமன் சிக்கலால் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர்.

உடல் உழைப்பு குறைவாக இருக்கும் போது, நமது மூளை அதிகமாகச் சிந்திக்கின்றது. அப்போது ஏராளமான சக்தி செலவாகும். இருப்பினும் உடற்பருமன் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? என்பது மருத்துவர்களுக்கு புரியாத புதிராகவே இருந்து வந்துள்ளது. இதன் காரணம் கண்டறிய மருத்துவர்கள் பல சோதனைகளை மேற்கொண்டனர். இந்தநிலையில் அதிகம் சிந்திப்பதே உடல் எடை அதிகரிப்புக்குக் காரணம் என்பது தெளிவாகக் கண்டறியப்பட்டது.

அதாவது நாம் சிந்திக்கும்போது அதிகசக்தி செலவாவதால், பசி அதிகமாக ஏற்படுகின்றது. இதனால், அதிகமாகச் சாப்பிட்டு விடுகிறோம். இதன் விளைவாக உடற்பருமன் ஏற்பட்டு விடுகிறது.

இது குறித்துப் பலரிடம் மேற்கொண்ட ஆய்வின் படி, புத்தகங்களைப் படித்த பின், மூளைக்கு வேலையளிக்கும் கணினி விளையாட்டுகளில் ஈடுபட்ட பிறகு, அவர்கள் உட்கொள்ளும் உணவின் அளவு வழக்கத்திற்கு அதிகமாக இருந்தது என்பது தெரிய வந்தது. மன அழுத்தம் ஏற்படுகின்ற, சிந்தனைத் திறன் அதிகம் தேவைப்படுகிற பணிகளில் இருக்கும் ஆய்வு நிபுணர்கள், விஞ்ஞானிகள் போன்றவர்கள், தினமும் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும் என்று மருத்துவர்கள் ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

உடற்பருமன் பிரச்சினையில் இருந்து தப்பிக்க, இதுவே சிறந்த வழி என்று தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தாத்திரை மாதா ஆலயம்



தொகுப்பு: லக்ஸ்மன்

தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற கத்தோலிக்க தேவாலயங்களில் வேலணை, சாட்டி பிரதேசத்தில் உள்ள சிந்தாத்திரை மாதா தேவாலயமும் ஒன்று. இயற்கை எழில் கொஞ்சும் பகுதியில் அமைந்துள்ள இத்தேவாலயம் மடுத் திருப்பதியைப் போன்று உள்ளதாக கத்தோலிக்க மக்கள் கருதுகின்றார்கள். உற்சவ காலங்களில் தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி இலங்கையின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இங்கு அன்னையின் அருள்வேண்டிக் கூடுகிறார்கள். இந்தப் பக்தர்கள் கூட்டத்தில் இந்து மதத்தவர்களும் இடம்பெறுகிறார்கள். உற்சவ தினங்களில் சாட்டி பிரதேசம் பக்திப் பரவசம் கமழும் ஒரு இடமாகவே காட்சியளிக்கும். மதவேறுபாடின்றி அனைவரும் நேர்த்திக்கடன்களை நிறைவேற்று வதைக் காணலாம்.

இந்த ஆலயம் போர்த்துக்கேயர் காலத்தைச் சேர்ந்தது. கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதில் போத்துக்கேயர் தீவிரமாக இருந்தனர் என்பதை வரலாற்றில் அறியமுடிகின்றது. 400 ஆண்டு பழமைவாய்ந்த இந்த ஆலயம் இந்தப்பகுதி மக்களின் மகிழ்ச்சியான வாழ்வுக்கு ஆதாரமாக உள்ளது என அனைத்த மக்களுமே நம்புகின்றார்கள். ஆலயச் சுற்றாடலில் உள்ள பெரும்பாலான மக்கள் இந்துக்களாவர். எனினும் ''எங்களுக்குத் தாயாக இருந்து காத்து வரும் தாயாக விளங்குகிறார் சிந்தாத்திரை மாதா'' என்கிறார்கள்.

சாட்டி என்பது சாட்டன் என்னும் பிரெஞ்சுச் சொல்லில் இருந்து திரிபுபட்டது. சாட்டன் என்ற பெயரில் ஊர் ஒன்றும் பிரான்சில் உள்ளது என அறியப்படுகிறது. சாட்டியின் பூர்வீகக் குடிகள் கமண்டலர், குயவர்கள்கும். மன்னார் மாதோட்டப்பகுதிகளைச் சேர்ந்த கத்தோலிக்க ம்க்களும் இங்கு குடியேறியதாகவும் பின்னர் அவர்களின் சந்ததியினர் ஊர்காவற்றுறைக்குச் • சென்றுவிட்டதாகவும் சொல்லப்படுகின்றது. நல்லூர் ஞானப்பிரகாசரின் ஆய்வுகளிலும் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. 1600ஆம் ஆண்டின் பின்னர்தான் அங்கு இந்த மக்கள் குடியமர்ந்தாகவும் அதன்பிற்பாடே ஊர்காவற்றுறைக்குச் சென்றதாகவும் தெரிகின்றது.

சாட்டியில் இருந்த போர்த்துக்கேயரின் கோட்டை ஒல்லாந்தரால் அழிக்கப்பட்டது. அக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட மாதாவின் திருச்சொரூபத்தைக் கோட்டையின் மத்தியில் கட்டப்பட்ட குடிசை ஒன்றில் வைத்து வழிபாடுகள் இடம்பெற்றதாகவும் மூத்தவி என்பவரே மாதாவின் உருவத்தை வைத்து வழிபட்டதுடன் அதனைப் பிரபல்யப்படுத்தியவர் என்பதும் யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளாரின் தகவல்கள் மூலம் அறியப்படுகின்றது. மூத்தவி மூன்று தினங்கள் அங்கு தங்கி நின்று வழிபாடு செய்து வந்தார்.

ஆலயம் பிரபல்யமடையத் தொடங்கியதும் பின் நாள்களில் பக்தர்களின் வரவு அதிகரித்ததைத் தொடர்ந்து 1789இல் சிறிய ஒரு ஆலயம் அமைக்கப்பட்டது. அந்த ஆலயம் 1886இல் தீக்கிரையானது. அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளில் கத்தோலிக்க மதத்தொண்டு புரிந்த வண.அந்தோனி அடிகளின் மேற்பார்வையில் 1928இல் மீண்டும் கட்டடப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அப்போது யாழ்ப்பாண ஆயராக இருந்த அதி. வண.ஜே.ஏ.கிமோர் ஆலயத்தை மீள அமைக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

வருடத்தில் இரு தடவைகள் இங்கு விசேட திருப்பலிகள் இடம்பெறுகின்றன. சித்திரை மாதத்தில் உயிர்த்த ஞாயிறு தினத்துக்கு அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை இரண்டு தினங்கள் திருப்பலிப் பூசைகள் இடம்பெறுவதுண்டு. இந்த விழா கரம்பனைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படுகின்றது. புரட்டாதி மாதம் 24ஆம் திகதி கொடியேற்ற உற்சவம் இடம்பெறுகின்றது. பெருந்தொகையான மக்கள் கலந்துகொள்ளும் இந்த உற்சவத்தில் பங்குத் தந்தையுடன் யாழ் .ஆயர் அவர்கள் கலந்து கொண்டு விசேட திருப்பலிப்பூசைகளை ஒப்புக்கொடுக்கிறார்கள். கொடித்தம்பம் இறக்கும் திருவிழா சாட்டிப் பகுதியில் உள்ள இந்துக்களே செய்கிறார்கள். அன்னதானமும் அன்றைய தினம் இடம்பெறுகின்றது.

சாட்டி மாதா ஆலயப் பகுதியில் உள்ள கிணறுகள் மிகவும் சுவையான நல்ல தண்ணீரைக் கொண்டன. மாதாவின் உருவச்சிலை இங்குள்ள கிணற்றில் கண்டெடுக்கப்பட்டது. மாதாவின் உருவச்சிலை கிணற்றுக்குள் கிடந்ததாலேயே நீர் மிகவும் சுவையாக இருப் பதாகவும் மக்கள் கரு துகின்றார்கள். சாட்டி மாதா ஆலய உற்சவ காலங்களில் வேலணைப் பிரதேச செயலகம், பிரதேசசபை என்பன ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் நலன் கருதியும் பொது மக்களின் வசதி கருதியும் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன.

தற்சமயம் இந்த ஆலயத்தின் பங்குத்தந்தையாக உள்ள அருட்திரு பிலிப்ஸ் ரனிஸ்லாஸ் அடிகளார் ஆலயத்தைச் சுத்தமாகவும் உரிய வேளைகளில் பூசைகளைச் சிறப்பாக நடத்தி வைப்பதிலும் கவனம் செலுத்தி வருவதுடன் ஞாயிறுதோறும் விசேட வழிபாடுகளையும் நடத்தி வருகின்றார். பல்வேறு பகுதிகளிலும் இருந்து ஆலயத்துக்கு வரும் மக்களின் போக்குவரத்துக்களும் சீராக இடம் பெறக்கூடிய வகையில் அவர் மேற் கொண்ட முயற்சிகளால் பாதைகளும் நல்ல முறையில் உருவாகியுள்ளன.

முற்றும்

# வேலணை மத்திய கல்லூரி

*(சென்றவாரத் தொடர்ச்சி)*



தீவுப் பகுதியில் சிறந்த கல்விப் பாரம்பரியம் உருவாக முன்னிலை வகித்த பாடசாலைகளில் வேலணை மத்திய மகா வித்தியாலயமும் ஒன்றாகும்.

இந்தப் பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்கள் இந்தக் கிராமத்திலேயே சேவையை வழங்குகின்றனர். இவர்கள் மக்களிடையே ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளதுடன் புகழ்பெற்ற மனிதர்களாக இன்றும் பேசப்படுகின்றனர்.

அதிபர்கள் பதவியில் இருந்த ஒவ்வொருவருமே பாடசாலையின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு பணியாற்றியுள்ளனர். நூலகம், சிரமதானப் பணிகளின் மூலம் பாடசாலைச் சுற்றாடல் துப்பரவு, விளையாட்டுமைதானம் போன்ற தேவைகளை நிறைவு செய்வதிலும் அக்கறை காட்டியுள்ளனர். வேலணை மத்திய மகா வித்தியாலயம் அதிபர் இராசநாயகத்தின் காலத்திலேயே சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகும்.

18.10.1991 இல் வேலணையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த கல்லூரி, யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் பின்னர் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்திலும் இயங்கியது. அதன்பின்னர் யாழ். அரசடி வீதியில் தனியார் வீட்டுடனாண காணியில் இயங்கியபோதும் தொடர்ந்தும் நிலவிய இடப்பெயர்வுகளால் 1995 ஒக்டோபர் 30ஆம் திகதி சாவகச்சேரி டிபேறிக் கல்லூரியிலும் 1996 இல் மீள யாழ்ப்பாணம் வந்ததை அடுத்து வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் இயங்கிய ஐந்து பாடசாலைகளின் கூட்டுப் பாடசாலையாகவும் இயங்கியது. இதன்போது 53 மாணவர்கள் மட்டுமே இங்கு இருந்துள்ளனர்.

இக்கல்லூரியைத் தனியாக இயக்க வேண்டும் என்பதில் அன்றைய வலயம்I கல்விப்பணிப்பாளர் சு.இரத்தினராசா வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இதனை ஆரம்பித்து வைத்தார். இதன் அதிபராக கு.கணேசலிங்கம் நியமிக்கப்பட்டார்.

1998 இல் படையினரின் பாவனையில் இருந்த இக்கல்லூரியின் பெரும் பகுதியை அவர்கள் நிர்வாகத்திடம் ஒப்படைத்ததன் பயனாகத் தனது சொந்தக்கட்டடத்தில் மீளவும் ஆரம்பிக்கப்பட்டது. பிரதான மண்டபம் கோயில் வரை நீட்டப்பட்டதுடன் படிப்படியாக அபிவிருத்தி நடவடிக்கைக்களும் முன்னெடுக்கப்பட்டன.

22.06.2002 ஆம் திகதி பாடசாலையின் பிரதி அதிபர் ப.ஆரூரனிடமிருந்து தற்போதைய அதிபர் பொ.அருணகிரிநாதன் 15.07.2002 இல் பொறுப்புக்களைப் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து 19.7.2002 இல் பாடசாலை விடுதியில் இருந்த படையினர் முழுமையாக விலகிக் கொண்டனர். ஒரு தேசியப் பாடசாலையாக உள்ள இதன் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் தீவுப்பகுதி மாணவர்கள் உரிய பயனைப் பெற வேண்டும் என்பதில் அதிபர் அக்கறை கொண்டுள்ளார். ஜி.ரி.சற் நிறுவனத்தினூடாக மண்டபப் புனரமைப்பு, மலசல கூடத் தொகுதிகள், ஓடியோ வீடியோ அலகு, நூலக அபிவிருத்தி, தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப நிலையம் (ICTC), பாடசாலை சுற்று மதில் 23 பரப்புக்காணி கொள்முதல், மீள் மின்னிணைப்பு, விஞ்ஞான ஆய்வு கூடப்புணரமைப்பு என்பவை தற்போது இடம்பெறுகின்றன. கல்விச் செயற்பாட்டுடன் முறைசாராப்பிரிவின் கீழ் தையல் இயந்திரம், மின்னிணைப்பு திருத்த வேலைகள் தொடர்பான பயிற்சி நெறிகளை வழங்குவதற்கு ஆளுநரின் அனுமதியுடன் இதற்கான உபகரணங்கள் பெறப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளது.

மேலும் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் பாடசாலைகள் பெரியளவில் பூர்த்தியாகும் வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாகவும் கூறும் அதிபர் அருணகிரிநாதன் மாணவர் விடுதிக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதால் அதை நிறைவு செய்யப் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் உதவ வேண்டும் என எதிர்பார்க்கின்றார்.

விளையாட்டுத் துறையில் யாழ். மாவட்ட நிலையில் முதன்மை பெறத் தொடங்கியுள்ளதுடன் மாவட்ட, மாகாண தேசிய மட்டப் போட்டிகளிலும் மாணவர்கள் கலந்து கொண்டு பரிசில்களைப் பெற்றுள்ளனர். எதிர்காலத்தில் இவை மேலும் விரிவடையும் என்பது இக்கல்லூரிச் சமூகத்தின் நம்பிக்கை. இதில் அதிபர் ஆசிரியர்கள் அதிக கவனம் எடுத்து வருகின்றனர்.

கல்லூரி வளர்ச்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கல்லூரியின் தாய்ச்சங்கம், பழைய மாணவர் சங்கம், கொழும்பு, பிரான்ஸ், கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா நாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் கூடுதல் கவனம் எடுத்துத் தேவைகளை நிறைவேற்றுவதில் கணிசமான பங்களிப்பை வழங்குகின்றன. ஒன்று கூடல், மலர் வெளியீடு போன்ற நிகழ்வுகளும் இடம்பெறுகிறன.

இடம்பெயர்ந்த பெரும்பாலான மக்கள் இன்னமும் மீள்குடியமராத நிலையில் கடந்த காலங்களைப் போல் அதிகரித்த மாணவர் தொகை இல்லை எனப்படுகிறது. வங்களாவடி வேலணை வீதிப் போக்குவரத்துத் திறந்துவிடப்பட்ட போதும் இந்தப் பாதையால் பஸ்சேவை அனுமதிக்கப்படவில்லை. இதனால் இங்கு மட்டுமல்ல ஏனைய சில பாடசாலைகளும் பாதிக்கப்பட்டிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
04.01.1935



ஆண்டவன் அடியில்
27.12.2010

அமரர்
## கந்தையா இராஜரட்ணம்

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டிக்கிரியையும் இன்று (26.01.2011) புதன்கிழமை காலை 5மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

முதலியார் வளவு,
கரணவாய்த் தெற்கு,
கரவெட்டி.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
## தம்பையா கணேசன்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர், இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்-காங்கேசன்துறை, இலங்கை ரயர் கூட்டுஸ்தாபனம்- களனி)

மலர்வு 1940.09.17 — உதிர்வு 2010.12.27

அன்பின் தெய்வமே ஆசை அப்பா!
அன்பிற்கு இலக்கணமாய் அன்னையாய் இருந்தாயே
அன்புடன் வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் ஒளியூட்டிய அன்புத்தெய்வமே
மாதம் ஒன்று சென்றாலும் அன்பாக நீங்கள் அழைக்கும்
குரல் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

அமரரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.01.2011) புதன்கிழமை காலை 7மணியளவில் கிரிமலை புனித தீர்த்தக்கரையிலும் அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

★ இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மகன்- கணேசன் துஸ்யந்தன் 0773506372,
மகள்- கீதாஞ்சலி திருச்செந்தூரன் 0778445327
மருமக்கள்- திருச்செந்தூரன், அபர்ணா,
பேரப்பிள்ளைகள்- திருஷாங்கன், கீர்த்திகா

பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

# அந்தியேட்டி கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



அமரர்
## வே.க.த.தம்பிமுத்து (V.K.T.T.)

கடந்த (29.12.2010) புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின்அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (27.01.2011) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கொழும்பு 15, முகத்துவாரத்திலுள்ள அந்தியேட்டி மண்டபத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை (29.01.2011) சனிக்கிழமை முற்கல் 11 மணிக்கு கொழும்பு 04, பம்பலப்பிட்டி, 75 லோரன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்திலும் நடைபெறும். மேற்படி நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் மிகு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

நயினையின் முத்தாக
13.01.1913

அம்பாளின் பாதத்தில்
29.12.2010

02, ரஞ்சன் லேன்,
ஸ்ரேசன் வீதி, கொழும்பு - 06.

(109912)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன்

12



கென்யாவில் 'நியூ ப்ளூ ஸ்ரார்' என்ற ஐந்து நட்சத்திர விடுதியிலேயே யூலியன் தங்கியிருந்து ஊழல் பேர்வழிகளின் உண்மை முகத்தை உரித்துக் காட்டினார். எனவே கொலையாளிகள் தம்முடைய தாக்குதலை அந்த விடுதியிலேயே நிகழ்த்த விரும்பினர். தினமும் காலையில் எழுந்ததும் தகவல் சேகரிப்பதற்காகவும் தன்னுடைய நண்பர்களைச் சந்திப்பதற்காகவும் வெளியே புறப்பட்டுச் செல்லும் யூலியன் இரவு 9 மணியளவில்தான் குறித்த விடுதிக்கு திரும்பி வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இதேவேளை யூலியனின் அறைக்கு யார் வந்தாலும் வெளியே நிற்பது யாரென்பதை அறியும் வகையில் எந்நேரமும் இயங்கக் கூடிய சிறிய ரக வீடியோக் கமெரா ஒன்றும் அறைக்கதவின் மேற்பகுதியில் பொருத்தப்பட்டிருந்தது. அது இயங்கிக் கொண்டிருந்தால் நிச்சயம் கொலையாளிகள் யாரென்பதைக் கண்டுபிடிக்க உதவும் முக்கிய தடயமாக மாறிவிடும். நட்சத்திர விடுதியின் வரவேற்பாளராகப் பணிபுரிந்த பெண்ணுக்கு ஒரு சில பணக்கற்றைகள் பரிமாறப்பட்டன. அடுத்த சில நாள்களிலேயே யூலியனின் அறைவாசலில் பொருத்தப்பட்டிருந்த வீடியோக் கமெரா 'திடீரென' செயலிழந்து போனது. இதுபற்றி யூலியன் விடுதி நிர்வாகத்திற்கு உடனடியாகத் தெரியப்படுத்தினார். ''கவலைப்படாதீர்கள். வெகுவிரைவில் அது இயங்கத் தொடங்கிவிடும்'' என்ற பதிலே கிடைத்தது.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

இன்னும் சில பணக்கட்டுகளை கொலையாளிகள் குறித்த வரவேற்பாளினிக்குத் தூக்கி வீசியதும், யூலியனின் நடமாட்டங்கள் அனைத்தும் உடனுக்குடன் தெரியப்படுத்தப்பட்டது. அதில் கொலையாளிகளைக் கவர்ந்த ஒரு விடயம் 'இரவு 9 மணிக்குப் பிறகு யூலியன் தனியாகத்தான் அறையில் இருப்பார்' என்பதுதான். எப்போதுமே கூட்டமாக இருக்கும் போது அடிப்பதை விடவும் தனியனாக எதிரி மாட்டிக்கொள்வது வேலையை இலகுபடுத்திவிடும். தாக்குதல் நேரம் இரவு 9 மணிக்குப் பிறகுதான் என்று குறித்துக் கொண்டார்கள்.

ஆனாலும் ரத்தமின்றி சத்தமின்றி காரியம் நடந்தாகவேண்டும். துப்பாக்கியால் சுடுவதோ அல்லது கத்தியால் குத்துவதோ சரிவராது. எனவே தனியனாக இருக்கும் யூலியனின் 'குளோரோபோம்' என்ற மயக்க மருந்து மூலம் சடலமாக்கிக் கடத்தி வந்து கொலை செய்த பின்னர் அவரது உடலைக் கென்யாவில் விரிந்து கிடக்கும் அடர்ந்த காடு களில் ஏதாவதொன்றில் வீசிவிடுவதென முடிவு செய்யப்பட்டது. கென்யாவில் ஊழல் பேர்வழிகளுக்குப் பிடிக்காமல் போன யூலியனின் உடலைக் காட்டு விலங்குகள் விரும்பி உண்ணும் என்பது அவர்களின் நம்பிக்கை. தசை, எலும்பு என்பவற்றை விலங்குகள் அப்படியே அலாக்காக உண்டுவிட்டால் பிறகு என்ன தான் தலைகீழாக நின்று துப்பறிந்தாலும் யூலியனின் சடலத்தையோ அல்லது அவர் இறந்தமைக்கான தடயத்தையோ எவராலும் கண்டுபிடிக்க முடியாது என்று கணித்தனர். யூலியன் தங்கியி ருந்த தளத்தில் தமது பெயரிலும் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அதனை வெறுமையாகவே விட்டிருந்தார்கள். ஒரு சில நாள்களில் இந்த அறையில் இருந்தவாறே யூலியனின் நடமாட்டத்தை அவர்கள் அவதானித்துக் கொண்டார்கள்.

அதைவிடப் புத்திசாலித்தனமாக இன்னொரு காரியத்தையும் கொலையாளிகள் செய்யத் தவறவில்லை. 'நான் வந்த வேலை முடிவடைந்ததால், இந்த நட்சத்திர விடுதியில் எனது அறையைவிட்டு வெளியேறுகிறேன்' என்ற பதிவுடன் அவர் தங்கியிருந்த அறையைக் காலி செய்து செல்வது போன்று பதிவேட்டில் தமது கையாளான வரவேற்புப் பெண்ணைக் கொண்டு குறிக்கச் செய்தனர். ஏனெனில் அப்படியொரு பதிவைச் செய்வதன் மூலம் யூலியன் நட்சத்திர விடுதியில் இருந்து தன்னிஷ்டப்படி வெளியேறியதாக நினைத்து சில நாள்களுக்கு அவரை யாரும் தேடமாட்டார்கள்.

எல்லாம் 'பக்காவாகத்' தயார். இனி யூலியனின் உயிரைக் குடிக்க வேண்டியது மட்டுமே அவர்களிடம்

ஒளண்யன்

எஞ்சியிருந்த வேலை. அதையும் நிறைவேற்றக் களத்தில் குதித்தார்கள்.

ஒருநாள் இரவு 10 மணி. யூலியனின் மூச்சை நிறுத்துவதற்காக ஐந்து கொலையாளிகள் 'நியூ ப்ளூ ஸ்ரார்' விடுதிக்குள் உள் நுழைந்தார்கள். யாரோ விருந்தினர்களைச் சந்திக்கச் செல்வதைப் போல படிக்கட்டுகளில் ஏறி யூலியன் தங்கியிருந்த அறை அருகே சென்றார்கள். அவர்களில் மூவர் யூலியனின் அறையின் முன்னால் நிற்க மற்ற இருவரும் இரு திக்குகளிலும் பிரிந்து சென்று யாராவது வருகிறார்களா? என்று நோட்டமிட்டு வந்தனர். அந்த அகால இரவில் எல்லா அறைகளுமே தூங்கிக் கொண்டிருந்தன. மயக்க மருந்தை வெளியில் எடுத்துத் தயார் செய்தார்கள். அவர்கள் வந்திருந்த வாகனம் விடுதிக்கு வெளியே எப்போதும் புறப்படத் தயாரான நிலையில் உறுமிக் கொண்டிருந்தது.

வந்தவர்கள் யூலியனின் அறைக் கதவைப் பலமாகத் தட்டினார்கள். அடுத்த நொடி-

யூலியனின் கதவு திறந்தது.

ஆனால் அதிர்ச்சியில் உறைந்தது அசாஞ்சே அல்ல; கொலையாளிகள் தான்.

*(திரைகள் இன்னும் திறக்கும்)*

**மணமக்கள் தேவை**

- 76இல் பிறந்த, 12இல் சூரியனும் செவ்வாயும் உள்ள, 20 3/4 பாவமுடைய கனடா பிரஜா உரிமைபெற்ற மணமகன் வந்துள்ளார். படித்த அழகான மணமகள் தேவை.
- 69இல் பிறந்த, செவ்வாய் இல்லாமல் 15 ½ பாவமுடைய, சொப்வெயார் இஞ்சினியர் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்கிறார். படித்த மணமகள் தேவை.
- 82இல் பிறந்த, செவ்வாய் இல்லாமல் 8 ½ பாவமுடைய சிங்கப்பூரில் வேலை செய்யும் சிவில் எஞ்ஜினியருக்குப் படித்த அழகான மணமகள் தேவை.
- 83இல் பிறந்த, செவ்வாய் இல்லாமல் 23 ½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டனாகப் பணிபுரியும் மணமகளுக்கு லண்டனில் படித்த மணமகன் தேவை.

**கமலக்கண்ணன் திருமண சேவை**

இல.171/1, மனோன்மணி அம்மன் கோயிலடி, நல்லூர். தொ.பே.: 0776070862

## பாலம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.26

கொழும்புத்துறை விதானையார் வீதிச் சந்திப் பகுதியில் உள்ள பாலம் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாலம் புனரமைக்கப்படுவதால் மக்களின் போக்குவரத்துக்கெனத் தற்காலிகப் பாதை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அந்தத் தற்காலிகப் பாதையில் கனரக வாகனங்களைத் தவிர ஏனைய வாகனங்கள் பயணம் செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-26)

## தேர் சிற்பங்கள் திருட்டு

தேர்முட்டிக் கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் தேரில் இருந்த சிற்பங்கள் திருட்டுப் போயுள்ளன. மாதகல் பாணாகவெட்டி அம்பாள் ஆலயத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயம் பாலஸ்தானம் செய்யப்படுவதற்கு முன்னர் பூட்டப்பட்டுக் கதவுகள் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தையொட்டித் திறந்த போது சிற்பங்கள் திருட்டுப்போனதை ஆலய நிர்வாகிகள் அவதானித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

**அலுவலக உதவியாளர் தேவை**

நெல்லியடி நகரில் இயங்கிவரும் தனியார் நிறுவனத்துக்கு அலுவலக உதவியாளர் தேவை. விருப்பமுள்ளவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

ASIAN COMPUTER EDUCATION
TEL: 021 226 2399

**கொவிசெத**
உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 791
சீட்டிழுப்பு திகதி 24.01.2011

எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 20 33 41 64

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 11,600,947.20 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000,000/= | 02 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,000/= | 13 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000/= | 340 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000/= | 676 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 100/= | 16968 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரு. 40/= | 9665 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20/= | 240777 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20/= | 37926 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 11,273,460.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 11,808,295.20

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6 மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk




வெற்றி எண்கள்
01 37 52 57 W

ஜக்பொட் பரிசு ரூ. 23,262,010/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 23,262,010/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 18 | 2,000/= | 36,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 440 | 1,000/= | 440,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 716 | 1,000/= | 716,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 18032 | 60/= | 1,081,920/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8512 | 40/= | 340,480/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 218524 | 20/= | 4,370,480/= |
| | | மொத்தம் | ரூ. 7,784,880/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| திருகோணமலை | 600759846-9-39 |
| கொழும்பு | 600746090-0-30 |
| புத்தளம் | 600747134-5-45 |
| கம்பஹா | 600759683-0-10 |
| அம்பாந்தோட்டை | 600743733-2-12 |
| கண்டி | 600744513-4-44 |
| பதுளை | 600746878-7-07 |
| நுவரேலியா | 600747418-0-20 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,184,880/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 23,857,600/=

செல்லுபடியான டிக்கட்டுகள் 2011 ஜனவரி 27 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈரானின் ரஷ்ட் நகரில் நடந்த கூட்டத்தில் கலந்துகொள்ள ஜனாதிபதி முகமது அஹ்மதிநிஜாத் மக்கள் வெள்ளத்தில் மிதந்து வருகிறார். இக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் ஈரானின் அணு ஆயுத விவகாரம் தொடர்பாக பேச்சுகள் நடத்துவதற்கு பல வாய்ப்புகள் உள்ளன எனத் தெரிவித்தார். (எ)

# ரஷ்யாவில் 12 வயதுச் சிறுவனுக்காக பாடசாலையில் படிக்கும் 'ரோபோ'

மொஸ்கோ, ஜன. 26

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவைச் சேர்ந்தவர் ஸ்டீபன் சுபின் (வயது - 12). இவர் அங்குள்ள பாடசாலையில் படித்து வந்தார். திடீரென அவர் லுகேமியா (ரத்தத்தில் வெள்ளை அணுக்கள் குறைவினால் ஏற்படும் விசித்திர நோய்) நோயினால் பாதிக்கப்பட்டார்.

எனவே அவர் பாடசாலைக்குச் சென்று படிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இருந்தாலும் அவரது படிப்பு பாதிக்காத வகையில் புதிய வகை ஏற்பாடு செய்யப்பட்டது.

அதாவது அவருக்குப் பதிலாக ஒரு ரோபோ (எந்திரமனிதன்) பாடசாலைக்குச் சென்று பாடம் படிக்கிறது. வகுப்பிலிருந்தபடியே அந்த ரோபோ பாடங்களைக் கவனித்து தனது நினைவில் பதிவுசெய்து கொள்கிறது.

அவற்றை ஸ்டீபன் வீட்டிலிருந்தபடியே இணையதளம் மூலம் படித்து வருகிறார். ரோபோவுக்கும், ஸ்டீபன் வீட்டிலுள்ள இணையதளத்துக்குமிடையே ரிமோட் கண்ட்ரோல் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ரோபோவை கடந்த 2008ஆம் ஆண்டு மாஸ்கோ நிறுவனம் வடிவமைத்தது. அதில் ஒரு வெப் கேமரா, ஒரு மைக்ரோ போன், ஒலிபெருக்கி கருவி, ரோபோ ஆகியவை கிரகித்த செய்திகளை ஒளிபரப்பும் வசதி போன்றவை உள்ளன.

பிளாஸ்டிக்கினால் தயாரிக்கப்பட்ட அதன் விலை இலங்கை நாணயப்படி நான்கு இலட்சத்து 50 ஆயிரம். வகுப்பறையில் இந்த ரோபோ மற்ற சிறுவர்களைப் போன்று நடந்து கொள்கிறது.

ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களை உன்னிப்பாகக் கவனித்து அவற்றை வீட்டிலிருக்கும் ஸ்டீபனுக்கு அனுப்புகிறது. வகுப்பு நடைபெறும்போது ரோபோவிலுள்ள திரையின் வாயிலாகப் பாடங்களின் சந்தேகங்களை ஆசிரியர்களிடம் ஸ்டீபன் கேட்டுத் தெரிந்துகொள்கிறார்.

இந்தத் தகவலை ஆசிரியர் அல்லா ஜீவக் தெரிவித்துள்ளார். கடந்த செப்டம்பர் மாதம் முதல் கணிதம், ரஷ்யன், வரலாறு, புவியியல், ஆங்கிலம், பிரெஞ்ச் ஆகியவை உள்ளிட்ட அனைத்துப் பாடங்களையும் இந்த ரோபோ படித்து அவற்றை ஸ்டீபனுக்கு வழங்குகிறது என்றும் கூறினார்.

இதற்கிடையே இந்த ரோபோ தனது நண்பர் என்றும் அது தனக்குச் சிறந்த முறையில் உதவிபுரிகிறது என்றும் ஸ்டீபன் தெரிவித்துள்ளார்.

தனது வீட்டில் இருந்தபடியே ரோபோவை அதிவேகமாகவும், வேகம் குறைவாகவும் இயக்க முடியும். அதன் தலையை வலது புறமும், இடது புறமும் திருப்பி பாடத்தை கவனிக்க செய்ய முடிகிறது. இதன் மூலம் நானே வகுப்பறையிலிருந்து பாடம் படிப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது என்று ஸ்டீபன் தெரிவித்துள்ளார்.

இந்த ரோபோவை இணையத்தளம் மூலம் உலகின் எந்த மூலையிலிருந்தும் இயக்க முடியும். (எ)

# எகிப்தியத் தேவாலயத்தில் குண்டுவெடிப்பு; 20 பேர் பலி!

கெய்ரோ, ஜன. 25

எகிப்தில் புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது, அலெக்சாண்டிரியா நகரிலுள்ள தேவாலயத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் 20இற்கும் மேற்பட்டோர் பலியாயினர். இந்தச் சம்பவத்திற்கு பலஸ்தீன பயங்கரவாத அமைப்பே காரணம் என்று எகிப்து உள்துறை அமைச்சர் ஹபீப் அல் அட்லி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பலஸ்தீன இராணுவத்தின் ஒருப்குதியினர், அல்-குவைதா இயக்கத்துடன் தொடர்பில் உள்ளார்கள். இவர்கள் இந்தச் சம்பவத்தை அரங்கேற்றியுள்ளனர். தங்களிடம் இதுதொடர்பான வலுவான ஆதாரங்கள் உள்ளன.

# இத்தாலி பிரதமர் பங்களாவிலிருந்து 14 அழகிகள் வெளியேற்றம்

ரோம், ஜன. 25

இத்தாலி பிரதமர் சில்வியோ பெர்லுஸ் கோனி (வயது - 74). இவர் மீது பாலியல் முறைப்பாடுகள் கூறப்பட்டுள்ளன. பணம் கொடுத்து வயது முதிர்ச்சியடையாத 17 வயது இளம் பெண்ணுடன் பாலியல் உறவு கொண்டார் என அவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மிலன் புறநகர்ப் பகுதியில் பணக்காரர்கள் வாழும் ஆடம் பர பங்களாக்கள் உள்ளன. அங்கு பிரதமர் பெர்லஸ்கோனியின் பங்களாவும் உள்ளது.

அதில் அவர் 14 அழகிகளை தங்க வைத்து அவர்களு டன் பாலியல் உறவு வைத்து வருகிறார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது இத்தாலியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் அங்கு தங்க வைக்கப்பட்டி ருக்கும் 14 அழகிகளும் அங்கிருந்து வெளியேறும் படி அப்பகுதியிலுள்ள குடியிருப்போர் நல சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

அதற்காக அவர்களுக்கு அறிவித்தல் அனுப்பியுள்ளனர்.

அதில், அவர்களின் நடத்தை சரியில்லை. எனவே, இன்னும் 8 நாள்களுக்குள் பங்களாவிலிருந்து வெளியேறவேண்டும். இப் பகுதியில் எங்கும் தங்கக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Automotor Club Lanka (Pvt) Ltd**
Manthikai Junction Puloly South, Puloly

**இன்னிசை நிகழ்ச்சி இரத்து**

எமது நிறுவனத்தில் 12.03.2011 இல் மாலுசந்தி அல்வாய் மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தப்பட இருந்த 'நீங்களும் பாடலாம்' இன்னிசை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

இதற்கான டிக்கற் பெற்றவர்கள் 0212262744 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகொண்டு டிக்கற் பணத்தை மீளப்பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத் தருகின்றோம். நிர்வாகம்.

- தபால் மூலம் -
**ஆறு மாத கால டிப்ளோமா**
**Course Length - Six Month**
JAN 2011 TO JUN 2011
20
தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் டி. மா.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை டி. மா.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2011

**THE HALO TRUST**

HALO Trust, ஆனது உலகில் 10 நாடுகளில் பணிபுரியும் ஒரு பிரித்தானிய கண்ணிவெடி அகற்றும் அரசசார்பற்ற அமைப்பாகும். இலங்கையில் 2002இல் இருந்து கண்ணிவெடிகளையும் ஏனைய யுத்த வெடிப்பொருள்களையும் அகற்றிவருகின்றது. நாம் எமது யாழ்ப்பாண நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஆண், பெண் கண்வெடி அகற்றுனர்களை பணிக்கமர்த்த உள்ளோம்.

இப்பணியானது உடலியல் ரீதியாகக் கடுமையானதென்பதைத் தெரிந்துகொள்வதுடன் இப்பணி பற்றிய முழுமையான உணர்வும் பொறுப்பும் உள்ளவர்கள்மீது கவனம் செலுத்தப்படும். இப்பணி சம்பந்தமான முழுமையான பயிற்சியையும், பாதுகாப்பையும் HALO வழங்கும். ஆர்வமுடைய விண்ணப்பதாரிகள் தமது சுயவிவரங்களுடன் தொடர்புகொள்ளும் இலக்கத்தையும் உள்ளடக்கிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**The HALO Trust,**
12, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

அனைத்து விண்ணப்பங்களும் 01.பெப்ரவரி.2011, செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். பொருத்தமானவர்கள் மட்டுமே தொடர்பு கொள்ளப்படுவார்கள்.

**Computer Express**
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

**விசேட கட்டணக்கழிவுடன்**
**O/L பரீட்சை எடுத்த மாணவர்களிற்கான புதிய பிரிவுகள்**

Diploma in Microsoft Office 1000/= 3 Months
Diploma in Desktop Publishing 1000/= 4 Months
Diploma in Web Page Designing 1000/= 3 Months
Diploma in Graphic Designing 1000/= 4 Months
Diploma in Hardware Engineering 1000/= 3 Months
Diploma in Auto CAD 1000/= 3 Months
Diploma in Computer Science 1000/= 4 Months
Honors Diploma in Computer Science 1000/= 3 Months

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Batch i - 26/01/2011 9am or 3pm
Batch ii - 28/01/2011 9am or 4pm
Batch iii - 29/01/2011 9am or 4pm
Batch iv - 30/01/2011 9am or 3pm

05.02.2011க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

கம்பனிக் கணக்குகளை உள்ளடக்கி முன்னணி Accounting Software களினூடாக
**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Book + MYOB (5 User)
Tally Accounting Package
Tally Date மாற்றலாமா?? முடியும்.....
Course Fee - 1000/=
ஆரம்பம் : 29/01/2011 30/01/2011 02.00PM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்கு வடகொரியாவை தென்கொரியா அழைக்கும்

## உயரதிகாரி தகவல்

சியோல், ஜன. 26

''ஆறு நாடுகள் பேச்சுக்கு வழிவகுக்கும் விதத்தில், வட கொரியாவுடனான பேச்சுகள் குறித்து, தென்கொரியா விரைவில் அழைப்பு விடுக்கும்'' என தென்கொரிய உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இயான்பியாங் தீவுப் பிரச்சினைக்குப் பின்னர் வடகொரியா பல தடவைகள் பேச்சுக்கு அழைப்பு விடுத்தது. ஆனால், அணு ஆயுதங்களைக் குறைக்க வேண்டும் என்று தென் கொரியா நிபந்தனைகள் விதித்தது.

இதற்கிடையில், கடந்த வாரம் சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ, அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது, வடகொரியா விவகாரத்தில் சீனா போதுமான அழுத்தத்தை கொடுக்கவில்லை.

ஆசியாவில் அமெரிக்கா தனது படைகளை குவிக்க வேண்டி வரும் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எச்சரிக்கை விடுத்திருந்தார். இதையடுத்து, வடகொரியா பேச்சுக்கான நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய தென்கொரிய ஒருங்கிணைப்புத்துறை செய்தித் தொடர்பாளர் லீ ஜாங் ஜூ கூறியவை வருமாறு:-

பேச்சு ஆரம்பிப்பது குறித்து தென்கொரியா ஆலோசித்து வருகிறது. விரைவில், இரு நாடுகளுக்கிடையிலான உயர் மட்ட பேச்சு, அணு ஆயுதக் குறைப்பு ஆகியவை குறித்து அழைப்பு விடுப்போம்.

இரண்டு விவகாரங்களையும் ஒரே நேரத்தில் அல்லது குறிப்பிட்ட கால இடைவெளியில் விவாதிப்பது குறித்து ஆலோசித்து வருகிறோம்.

அதேநேரம், அணு ஆயுதக் குறைப்பு விடயத்தில், வட கொரியா ஆர்வமாக இருக்கிறதா என்று இன்னும் எங்களுக்கு சந்தேகமாக உள்ளது- இவ்வாறு ஜூ தெரிவித்தார்.(த)

# உலகில் உயரமான உணவு விடுதி

துபாய், ஜன. 26

உலகின் மிக உயரமான கட்டடமான புர்ஜ் கலிபாவின் 122 ஆவது மாடியில் அமைக்கப்பட்ட உணவு விடுதியின் திறப்பு விழா, ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக நடந்தது. இதன் மூலம் உல கில் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள உணவு விடுதி என்ற பெருமையை இது பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு நாடுகளில் ஒன்றான துபாயில், உலகின் மிக உயரமான கட்டடமான புர்ஜ் கலிபா அமைந்துள்ளது. இது மொத்தம் 828 மீற்றர் உயரம் கொண்டது. இதில், 442ஆவது மீற்றர் உயரத்தில் 122 ஆவது மாடியில் ஞாயிற்றுக்கிழமை புதிய உணவு விடுதி ஒன்று திறக்கப்பட்டது. இதன் மூலம் உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்த உணவு விடுதி இது என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

கனடாவின் டொரன்டோ நகரிலுள்ள சி.என்.டவர் கட்டடத்தில் அமைந்துள்ள உணவு விடுதிதான் இதுவரை உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்த உணவு விடுதி என்ற இடத்தைப் பெற்றிருந்தது.

புர்ஜ் கலிபாவின் உயரமான புதிய உணவு விடுதியில் அடுத்த இரண்டு நாள்களுக்கான பதிவுகள் அனைத்தும் முடிந்துவிட்டன. இந்த விடுதியிலிருந்து துபாயின் அனைத்துப் பகுதிகளையும் பார்க்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விடுதியில் தனியாக அமர்ந்து சாப்பிட பதிவு செய்வதற்கு இந்திய நாணயப்படி 8,000 ரூபாயும், டீ அருந்துவதற்கு 4,500 ரூபாயும், முற்றத்தில் அமர்ந்தபடி மதுபானமும், நொறுவைகளும் சாப்பிட 2,500 ரூபாயும் வசூலிக்கப்படுகின்றன. (த)

# பாகிஸ்தானில் நிலநடுக்கம்

இஸ்லாமாபாத், ஜன.26

பாகிஸ்தானின் வட எல்லைப் பகுதியில் திங்கட்கிழமை பூகம்பம் ஏற்பட்டது. பாகிஸ்தானின் வட எல்லைப் பகுதியில் இந்திய நேரப்படி திங்கட்கிழமை காலை 8.15 மணியளவில் பூகம்பம் ஏற்பட்டது.

ரிச்டர் அளவுகோலில் இதன் தாக்கம் 6.3 புள்ளிகளாக இருந்தது. நிலப்பரப்புக்குக் கீழே 89 கிலோமீற்றர் ஆழத்தில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டது. பாகிஸ்தான் - தஜிகிஸ்தான் நாடுகளின் எல்லைப்பகுதியில் நிகழ்ந்த இந்தப் பூகம்பத்தால் பொருள் சேதமோ உயிர்ச்சேதமோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

வடமேற்கு பாகிஸ்தான், தஜிகிஸ்தான், சீன எல்லைப் பகுதிகளிலும் நில அதிர்ச்சி இருந்தது. பூகம்பத்தைத் தொடர்ந்து மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறினர். எந்தவொரு இடத்திலும் எவ்வித சேதம் பற்றிய தகவல் இல்லை.

ஜனவரி 19ஆம் திகதி இதே பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் புதுடில்லியிலும் உணரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (த)



ஜேர்மன் வந்திருந்த சுவிட்ஸர்லாந்து வெளியுறவு அமைச்சர் மிச்செலியன்-காலமிரேவுக்கு (இடது), ஜேர்மன் அதிபர் கிறிஸ்டியன்ஒல்ஃப், தலைநகர் பேர்ளினில் இராணுவ மரியாதையுடன் வரவேற்பு அளிக்கிறார்.

# ரஷ்ய விமான நிலையத்தில் தற்கொலை தாக்குதல்

மொஸ்கோ, ஜன. 26

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவிலுள்ள, டொமொடிடோவோ விமான நிலையத்தில் மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 35 பேர் உடல் சிதறிப் பலியாயினர்.

மொஸ்கோவிலிருந்து 40 கி.மீ. தென்கிழக்கிலுள்ள, இந்த விமான நிலையத்தின் வருகைப் பகுதியில், பொருள்களைச் சேகரிக்கும் பகுதியில் குண்டு வெடித்தது.

அதைத் தொடர்ந்து பலரின் அலறல் சத்தம் கேட்டது. அப்போது மொஸ்கோ நேரப்படி இரவு 9.24 மணியாகும். இந்தத் தாக்குதலில் 35 பேர் பலியாயினர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். (த)

# மதுபோதையில் விமானம் ஓட்டிய விமானிக்குச் சிறை

லண்டன், ஜன. 26

மதுபோதையில் சேருமிடம் தெரியாமல் விமானம் ஓட்டிய அமெரிக்க விமானிக்கு இல்ஸ்வொர்த் மாகாண நீதிமன்றம் ஆறு மாத காலச் சிறைத் தண்டனைவிதித்து தீர்ப்பளித்துள்ளது.

இது குறித்து 'டெய்லி எக்ஸ்பிரஸ்' எனும் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

அமெரிக்காவிற்குச் சொந்தமான டெல்டா ஏர்லைன்ஸ் விமானப் போக்குவரத்து நிறுவனத்தில் போஸ்டன் மாகாணத்தைச் சேர்ந்த ஜோர்ஜ்-லாபெர்ல் (வயது - 49) என்பவர் விமானியாக கடந்த 20 ஆண்டுகளாகப் பணியாற்றி வந்தார்.

இவருக்கு குடிப் பழக்கம் இருக்கிறது எனக் கூறப்படுகிறது. இவர் லண்டன் ஹீத்ரு சர்வதேச விமான நிலையத்திலிருந்து டெல்டா ஏர்லைன்ஸ் விமானம் மூலம், நியூயோர்க் சர்வதேச விமான நிலையம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்.

இதில் 241 பயணிகள் இருந்தனர். அப்போது இவர் மது அருந்தியிருந்தார். உடன் பயணித்த சக பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் விமானம் டெட்ராய்ட் மாகாணத்திலுள்ள சர்வதேச விமான நிலையம் செல்லாமல் வேறு பாதையில் சென்றுகொண்டிருப்பதை விமானி ஜோர்ஜ் லாபெர்லிடம் கேட்டார்.

அப்போது தான் அவர் போதையில் டெட்ராய்ட் விமான நிலையம் செல்லாமல் நியூயோர்க் விமான நிலையம் நோக்கி செல்வது தெரியவந்தது. இது தொடர்பாக அவர் கைதுசெய்யப்பட்டு இல்ஸ்வொர்த் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

மிகப்பெரிய பேராபத்து ஏற்படுத்தும் வகையில் விமானம் ஓட்டியமை, பணியின்போது போதையிலிருந்தமை ஆகியவை உள்ளிட்ட காரணங்களால் நீதிமன்றம் இவருக்கு ஆறு மாத காலச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இந்நிலையில் ஜோர்ஜ் லாபெர்ல் ஏற்கனவே கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி அமெரிக்காவின் மிகப் பெரிய பயணிகள் விமானமான போயிங் 767 விமானத்தை ஓட்டிய அனுவம் பெற்றவர் என்றும் இது வரை நான்கு தடவைகள் குறிப்பிட்ட அளவைக்காட்டிலும் மதுவகை உட்கொண்டுள்ளார் என்றும் இவர் மீது குற்றச்சாட்டு எழுந் துள்ளது.

இவ்வாறு அந்தப் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (த)

# துப்பாக்கி பிரயோகம் செய்தவர் சுடப்பட்டார்

வாஷிங்டன், ஜன.26

அமெரிக்காவில் பொலிஸ் நிலையத்தினுள் நுழைந்து சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டவர் பொலிஸாரால் சுட்டு வீழ்த்தப்பட்டார்.

ஞாயிற்றுக்கிழமையன்று, டெட்ராய்ட் நகரிலுள்ள ஒரு பொலிஸ் நிலையத்தில் மர்ம நபர் ஒருவர் நுழைந்து திடீரென்று துப்பாக்கியால் சுடத் தொடங்கினார். இதில் நான்கு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்தனர்.

பொலிஸ் நிலையத்தில் புகுந்து சுடத் தொடங்கியவரைக் கண்டு அதிர்ந்த காவலர்கள், பின்னர் சுதாகரித்துக் கொண்டு திருப்பிச் சுட்டதில் அந்த அடையாளம் தெரியாத நபர் உயிரிழந்தார். காயமடைந்த பொலிஸார் எவருக்கும் உயிர் ஆபத்து இல்லை.

# பெண்களைக் கடத்தி விபசாரம்; சீனாவில் அவலம்

பீஜிங், ஜன. 26

சீனாவில் பெண்களைக் கடத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தும் அவலப் போக்கு அதிகரித்து வருகிறது எனத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து சீனாவிலிருந்து வெளியாகும் 'சென் சிக்கு' என்ற தினசரி நாளிதழில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

கட்டாயத் திருமணம் அல்லது கட்டாய விபசாரம் ஆகியவற்றுக்காக சீனாவின் கிராமப்புறங்களிலிருந்து பெண்கள் அதிகளவில் கடத்தப்படுகின்றனர். சீனாவின் [illegible] ஷ்வு மாகாணங்களில் இதுபோன்ற கட்டாயத் திருமணங்கள் சகஜம்.

நாடு கடந்த அளவில் மனிதர்களைக் கடத்தும் போக்கு தற்போது அதிகரித்து வருகிறது. அதில் ஈடுபடும் கும்பல்கள் சீனப் பெண்களை அதிகளவில் கடத்தி, தென்கிழக்கு ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் கட்டாய விபசாரத்தில் ஈடுபடுத்துகின்றன.

கடந்தாண்டு நவம்பர் மாதம் மட்டும் மலேசியாவில் 5 ஆயிரத்து 453 சீனப் பெண்கள் விபசாரத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர். 2009 ஏப்ரல் வரை சீனப் பொலிஸார் 17 ஆயிரத்து 746 பெண்களை மீட்டுள்ளனர். வெளிநாடுகளில் படிக்க வைப்பதாகவும், அதிக சம்பளத்தில் வேலை வாங்கித் தருவதாகவும் ஆசை காட்டி பெண்கள் ஏமாற்றப்பட்டு கடத்தலுக்குள்ளாகி கட்டாய விபசாரத்தில் தள்ளப்படுகின்றனர். இவ்வாறு அந்தப் பத்திரிகை தெரிவித்துள் ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 St IN COM. G.A.Q.
### யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

* கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணபிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
* இவற்றுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
* இவற்றுக்குரிய பதிவுகளை மேற்கொள்ளவும்.

குறிப்பு:

1 st in Com.க்கான புதிய பிரிவுக்கான விரிவுரைகள்
ஆரம்பம்-29.01.2011 காலை 8 மணி
*விவரங்களுக்கு - எஸ். அருள்நங்கை (நிர்வாகி)*

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்.

## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி

கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வி) தொடர்ச்சியாக ஏற்றப்படவுள்ளதாக மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தொடக்கம் பி.ப. 11 மணிவரை சுவாமியார் வீதி சிகிச்சை நிலையத்திலும் மு.ப. 11.30 மணி தொடக்கம் பி.ப. 1.30 மணிவரை சுவாமியார் வீதி, சூசையப்பர் கோயில் சந்தியிலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை அதிப்பத்தி வளன்புரத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பி.ப.1.30 மணிவரை கடற்கரை வீதி வளன்புரத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (ஓ-323)

## 43 ஆவது பிறந்தநாளும் 2 ஆம் ஆண்டு நினைவும்

**திருமதி சாந்தி கதிரவேற்பிள்ளை**
(பூநகரி, முழங்காவில் வைத்தியசாலை, சோலை, ஜெயபுரம்)



தோற்றம் - 26.01.1968
மறைவு - 11.02.2009

அன்புக்கு இலக்கணமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் ஊற்றாய்
சுமைதாங்கியாய் வாழ்ந்து
எம் இதயத்தில் அணையாத் தீபமாய்
சுடர் வீசும் உத்தமியே
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

சோலை,ஜெயபுரம். (109913)

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவுகளில்...

அமரர்
**இராசரத்தினம் புஸ்பராசா**
(வசந்தன்)



தாயின் மடியில்
13.04.1978

ஆண்டவன் அடியில்
09.02.2007

திதி: அபரபக்கீ ஸப்தமி

கனிவான உமது முகமும்
பணிவான உமது பேச்சும்
தணிவான இன்சொல்லோடும்
வாழ்ந்த உமது மேனிவிட்டகன்று
வருடம் நான்கு ஆனாலும்
ஆறாது உமது பிரிவுத்துயரம்
செந்தன் நாங்கள் பூமியில்
வாழும் காலம் வரை
இமைவிட்டகலாது எமது இதயச் சுமைகள்.

(109928)

சி.இராசரத்தினம்,
மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம்,சாவகச்சேரி.

உமது ஆத்ம சாந்திக்குப்
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

பருத்தித்துறை, குடத்தனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கமலதாஸ் ஆகிய எனது அடையாள அட்டை (892682305V) 15.01.2011 அன்று யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
0772727447

## தவறிவிட்டது

இதயநாதன் சசிகுமார் ஆகிய எனது N.P.W.C. 3377மோட்டார் சைக்கிளுக்குரிய காப்புறுதிப் பத்திரமும், அனுமதிப்பத்திரமும் யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.
0775093169

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கி வரும் DSI மொத்த வியாபார நிறுவனத்துக்கு கீழ்க்காணும் பதவிக்கு பணியாளர்கள் தேவை. தகுதி உடையவர்கள் தமது பூரணப்படுத்தப்பட்ட சுயவிவரக்கோவையை கீழ்க்காணும் முகவரிக்கு எதிர்வரும் 31.01.2011 க்கு முன்பாகக் கிடைக்க கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

1) எழுது வினைஞர் (பெண்கள் மட்டும்)
2) விற்பனையாளர் (ஆண்கள்-SHOW ROOM)

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி
DSI மொத்த விற்பனை நிலையம்
154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



*சின்னத்தம்பி நடேசு*

உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வதி விடமா கவும் கொண்ட சின்னத்தம்பி நடேசு நேற்று முன்தினம்(24.01.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வரும், பத்தினிதேவியின் அன்புக்கணவரும், சிறிவதனி, காலஞ்சென்ற கலாதரன் மற்றும் ஜெயவதனி, கவிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராசு (டிலன் ஹோட்டல், யாழ்ப்பாணம்), நவரத்தினம், நித்தியானந்தம் (கனடா), பராசக்தி, வரதலட்சுமி, ஆகியோரின் அன்புச் சகோதரரும். சரணியா,வினுசியா, ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.012011) வியாழக்கிழமை பி.பகல் 2 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37A, உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு , கொக்குவில்.
தொ.பே. இல:- 0779050219, 0214907292

தகவல்:
சகோதரர்கள்
(10979919)

# மரண அறிவித்தல்

## ஆசைப்பிள்ளை இரத்தினம் (கப்பூது இரத்தினம்)



**கப்பூதை பிறப்பிடமாகவும் அச்சுவேலி, பத்தமேனி வைரவர் கோயிலடியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை இரத்தினம் நேற்றுமுன்தினம் (24.01.2011) திங்கட்கிழமை காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் பாலகிருஷ்ணன், செல்வம் (சுவிஸ்),பவானி (பாமினி - சுவிஸ்), ராசன் (சுவிஸ்), பாமதி (சுவிஸ்), பாநிதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசேஸ்வரி, திரவியநாதன், மணிவண்ணன், கங்காதரன், வினோதினி, சிவராஜ் ஆகியோரின் அன்பு மாமனும் வினோஜா, காயத்திரி, அபிதன், சுஜீபன், தர்சிகா, கஜானா, அஜந்தினி, வினுசாந், தாட்சாஜினி, தாரணி, செந்துஜன், சஞ்சிகா, சர்மிகா, அனோஸன், அஸ்வினியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2011) புதன்கிழமை அவரது பத்தமேனி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணிக்குத்தகனக்கிரியைக்காக பத்தமேனி தீத்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**வைரவர் கோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி,
தொ.பே.: 021 321 8005,
0770690358,**

**தகவல்:
இ.சிவபாக்கியம்
(மனைவி),
குடும்பத்தினர்.**

(இ-75235)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில் திருவருள்மிகு
## ஸ்ரீ கௌரி அம்பாள் தேவஸ்தானம்
## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**காலம்: 26.01.2011 இன்று புதன்கிழமை**

காலை 9.30 மணி முதல் மு.ப.10.15 மணிக்குள் மஹாகும்பாபிஷேகம் நிகழப்பெறும். கும்பாபிஷேகக் கிரியைகள் சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

(109923) மு.குமாரசாமி.

## உடனடி வேலை வாய்ப்பு

**வாகன சாரதி - 01**

தகைமை - ADவாகன அனுமதிப்பத்திரம்
3 வருட முன் அனுபவம்

**விநியோக உதவியாளர் - 02**

தகைமை - 8ஆம் தரச் சித்தி


சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். 29.01.2011 சனிக்கிழமை காலை 9 மணிக்கு தங்கள் சுயவிபரக்கோவையுடன் கீழ் காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

## லக்சுமி ஏஜென்சி,

**எஸ்லோன் விநியோக நிலையம்,
4ஆம் ஒழுங்கை, 23/1 பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.** (575229)

## 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
04
05
1929



மறைவு
29
01
2008

### அமரர் முருகேசு மார்க்கண்டு
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

*அன்பிற்கு நல்ல அப்பாவாய்
அறிவிற்கு நல்ல ஆசானாய்
உழைப்பிற்கு உத்தமனாய்
ஊர் போற்ற வாழ்ந்த உங்களை
முன்னூறு ஆண்டுகள் சென்றாலும்
மறக்கமாட்டோம்.*

*உங்கள் ஆத்மா சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.*

டச்றோட்,
மானிப்பாய். (109914)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### தங்கத்துரை ராமநாதன்

முல்லைத்தீவு, தண்ணீரூற்றை (மாமூலை) பிறப்பிடமாகவும், கொழும்பு கிருலப்பனை இல. 43/61 B, பூர்வாராம வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற தங்கத்துரை ராமநாதன் நேற்றுமுன்தினம் (24.01.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கத்துரை - இராசமணி தம்பதியரின் புதல்வரும், மோகனதாஸ் - காலஞ்சென்ற கமலாதேவி தம்பதியரின் மருமகனும், நந்தினியின் பாசமிகு கணவரும், ஜெகந்தன் (UK), சிந்துஜன் (UK), அக்ஷயா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மாவதி, காலஞ்சென்ற பத்மநாதன், மற்றும் பூலோகநாதன், லிங்கநாதன், பரமநாதன், பவானிதேவி, சந்திராதேவி, ஜெகநாதன், கணேசநாதன், காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் ரங்கநாதன், கௌரிதேவி (கனடா), விஜயநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சூரியகலாவதி, சந்திரசேகரன், பிரபாகரன் (கனடா), ஸ்ரீதரன் (UK), பிரேமிலா (UK), சுரேஷ்குமார் (UK), ஆனந்தி (இந்தியா), மனோகர், தனுஜா (UK) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2011) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூர்வாராம பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 43/61 B, பூர்வாராம மாவத்தை,
கொழும்பு. Tel: 011-2816743 (575148)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

## மதுபோதையுடன் மோ.சைக்கிளில் சென்றவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜன. 26

ஆவணங்கள் எதுவுமின்றி மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய ஏழாலை தெற்கு வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 12 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பதிவுசெய்யப்படாத மோட்டார் சைக்கிளில் காப்புறுதி, வாகனவரி போன்ற ஆவணங்கள் அற்ற நிலையில் மது போதையில் செலுத்தியதாகக் கொடிகாமம் பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் நான்கு குற்றங்களுக்குமாக மொத்தம் 12 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து, அபராதத் தொகை செலுத்தத் தவறின் 4 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(ஓ-207)

## பாம்பு தீண்டிய மூவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, ஜன. 26

பாம்புக் கடிக்கு இலக்கான மூவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பாம்புக்கடியினால் கடியுண்டவர்களே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பூநகரிப் பகுதியில் வெடிப் பொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்ட வேளையில் கிளிநொச்சி கரடிப்போக்கைச் சேர்ந்த இ.சசிக்குமார் (வயது 18), பூநகரிப் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படைச்சிப்பாய் சந்திரகுமார (வயது 26), வளவு துப்பரவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இயக்கச்சியைச் சேர்ந்த கு.நாகமுத்து (வயது 73) ஆகியோரே பாம்பு தீண்டியவர்களாவர்.

(ஓ-207)

## வீடு, காணி விற்பனைக்குண்டு

**அச்சுவேலியில் 3 பரப்புக்காணி வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு.**

தொடர்பு:- 0770871982, 0217911949

## தவறிவிட்டது

இல.15, குளங்கரை வீதி, கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த நரேந்திரன் திருத்தணிகன் என்பவரது தேசிய அடையாள அட்டை (911313464V) கடந்த வாரமளவில் யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி உதவவும். தொ.பே இல:- 0213007667

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான புறொயிலர் கோழிக்குஞ்சுகள் விநியோகம் செய்யப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். அத்துடன் கோல்ட்கொயின் கோழித் தீவனங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

சிற்றி பாம் ரேடேர்ஸ்,
ஆரியபாதம் வீதி, கல்வியங்காடு.
தொடர்பு:0777238573

மகமாயி ஸ்ரோர்ஸ்,
866, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம். 0773484992

## நன்றி

25.01.2011 அன்று ஏ-9 வீதியில் தவறிய கைப் பையை கண்டெடுத்து எம்மிடம் ஒப்படைத்த கஜன் பட்டறை தொழிலகம், 18/1, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லிங்கராணம் கஜேந்திரனுக்கு நன்றி தெரிவிப்பதுடன் அவரது நேர்மையைப் பாராட்டுகின்றேன்.

நன்றி

Dr.கணேஷ்

## காணி விற்பனைக்கு

காங்கேசன் துறை வீதியில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு முன்பாக 9½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்:-0776146451

## For Lease

In Moolai Road, near Ponnali Junction, opposite the Transformer, ' **An Extensive Land**, 'with partly damaged building is for lease immediatly. Suitable for ereact communication Tower or install Petrol Station

Contact:- 0774639585

## மரண அறிவித்தல்கள்

### நன்னித்தம்பி அருணகிரிநாதன்
(முகாமையாளர் - வர்த்தகத் திணைக்களம்,
முன்னாள் முகாமையாளர் - விற்பனைத் திணைக்களம்)



பாடசாலை வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலை வதிவிடமாகக் கொண்ட நன்னித்தம்பி அருணகிரிநாதன் நேற்று (25.01.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான - ஓய்வுபெற்ற பிஸ்கால் நன்னித்தம்பி - லீலாவதி தம்பதியரின் அன்பு மகனும் சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ரத்தினம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ரதியின் அன்புக் கணவரும், இளங்கோவன், அரசிளங்கோவன், இளவேனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவலோகநாதன், சகுந்தலா ஜெயரங்கநாதன், வசந்தலா, கைலேங்கிரி நாதன், நிர்மலா, ஜெயந்தலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லுருபதி பிள்ளையார் கோயிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில். (109926)

தகவல்:
மனைவி
பிள்ளைகள்.

### இராசன் குணரத்தினம்



சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசன் குணரத்தினம் நேற்றுமுன்தினம் (24.01.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசன் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (கேதீஸ் - லண்டன்) கஜேந்திரன், தவரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியகலாவின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நற்குணராசம்மா, நவரத்தினம் மற்றும் தங்கம்மா (அன்ரா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற விக்னேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, கமலேஸ்வரி (கனடா) பஞ்சநாதன் (கனடா), செல்வரட்ணம் (J.P), விசாகநாதன், காலஞ்சென்ற யோகாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் கிருஸ்ணப்பிள்ளை காலஞ்சென்றவர்களான வைரவநாதன் பரராஜசிங்கம் மற்றும் கந்தசாமி (கனடா), மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகலனும் அதுஷனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2011) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி மேற்கு பத்தகலட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜ வீதி,
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி. (109914)

தகவல்:
பிள்ளைகள்
(கேதீஸ், கஜேந்திரன், ரூபன்)
கேதீஸ் - 0044 7529535712
ரூபன் - 021 7210164

### நோயல் மரின்ஸ் அல்பிரட் B.Sc (QS)
(மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கணியம் சார் அளவையியல் 2005/2006 பிரிவு)



ஜோசப் அல்பிரட் - மரினா அல்பிரட் தம்பதியினரின் அன்புப் புதல்வன் நோயல் மரின்ஸ் அல்பிரட் திங்கட்கிழமை (24.01.2011) கொழும்பில் இறையடி சேர்ந்துள்ளார்.

அன்னார் அல்பிரட் நீல் மரின்ஸ் (UK), நொயிலின் மரின்ஸ் ஜெயரூபன் (ஜேர்மனி), அல்பிரட் நெல்சி மரின்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயரூபன் மரியதாஸ் (ஜேர்மனி), மரூனிக்கா நீல் (UK) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெனோஜா மலர்விழி (ஜேர்மனி), ஜியோல் மரின்ஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (27.01.2011) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது ஆனைக்கோட்டை இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, ஆனைக்கோட்டை அடைக்கலமாதா தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபின் காக்கைதீவு கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அடைக்கலநாயகி வீதி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.
T.P: 077 6718882 (575237)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
26 ஜனவரி 2011 புதன்கிழமை

# மனோகரா, யங்லயன்ஸ் அணிகளுக்கு 2 வருடங்கள் போட்டிகளில் பங்கேற்கத்தடை

யாழ்ப்பாணம், ஜன.26

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு இரண்டு வருடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக் இந்தத் தடையை விதித்துள்ளது. கடந்த வருடம் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரனையுடன் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்துக்கும் யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணிகளின் வீரர்களும் கைகலப்பில் ஈடுபட்டமையால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

இது தொடர்பாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் நிறைவேற்றுக் குழுவினர் ஒழுக்காற்று விசாரனைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விசாரணையின் முடிவில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவை உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்ற இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. அத்துடன் கைகலப்புக்குக் காரணமான மனோகரா விளையாட்டுக்கழக வீரர்களான சி.நிரோஷன் நா.சர்வநிதி ஆகியோர் மூன்று வருடங்கள் போட்டிகளில் பங்கு பற்றத் தடை விதிக்கப்பட்டதாகவும் லீக்கின் செயலாளர் மு.வரதராஜன் தெரிவித்தார்.

(த-23)

# பெண்கள் உதைபந்தாட்டம்; கச்சாய் தமிழ் கலவன் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன.26

தென்மராட்சிக் கல்வி வலயம் சாவகச்சேரி பாடாசலைகளின் 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கச்சாய் தமிழ்க் கலவன் பாடசாலை வெற்றி பெற்றது.

கச்சாய் தமிழ்க் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியது முதல் முடியும் வரையில் இரு அணிகளும் கோல்களைப் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு 5 சமநிலைதவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் கச்சாய் தமிழ்க்கலவன் பாடசாலை அணி 2:0 என்ற கோல் கணக்கில் சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி அணியை வென்றது. (த-23)

# வென்றது வதிரி டயமன்ஸ்

யாழ்ப்பாணம், ஜன.26

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரனையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் கடந்த ஆண்டு நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் தொடர்ச்சி நேற்று முன்தினம் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை ஆதிசக்தி 'பி' வல்வெட்டித்துறை அணி மோதியது. இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய வல்வெட்டித்துறை ஆதி சக்தி 'பி' அணியை 8:0 என்ற கோல் கணக்கில் வென்றது. (த-23)

# வலைப்பந்தாட்டம் 29 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.26

அகில இலங்கை வலைப் பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் 'டயட்டகிரில' வலைப்பந் தாட்ட சுற்றுப்போட்டி 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து 17 வலைப்பந்தாட்ட அணிகள் இந்தப் போட்டியில் பங்கு கொள்கின்றன.

வவுனியா, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து தலா 2 அணிகளும், யாழ். மாவட்டத்திலிருந்து ஐந்து அணிகளும் கொழும்பு வலைப்பந்தாட்ட சம்மேளனத் தின் இரு அணிகளும் இந்த சுற்றுப் போட்டியில் கலந்து கொள்கின்றனர்.

இதேவேளை வலைப்பந் தாட்ட மத்தியஸ்தர்களுக்கான எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்த மத்தியஸ் தர்களுக்கான செயன்முறை பரீட்சையும் அன்றைய தினம் இடம் பெறவுள்ளதாக யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் தெரிவித்தார். (த-23)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் 19, 18, 15 வயதுப்பிரிவுகளின் உதை பந்தாட்டப் போட்டிகள் யாவும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது என உடற்கல்வி உதவிக் கல் விப் பணிப்பாளர் சண் தயாளன் தெரிவித்துள்ளார். (த-23)

***

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்திய யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப்பிரிவு அணிகளுக்கான போட்டியில் வெற்றி பெற்ற யாழ். இந்துக்கல்லூரி அணிக்கும் பொலநறுவை கிரிதலகம மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான துடுப்பாட்டப் போட்டி இன்று புதன்கிழமை பொலநறுவை கிரிதலகம மத்திய கல்லூரி மைதானத் தில் நடைபெறும். (த-23)

***

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்.மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகிய வற்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கான கிரிக்கெட் ஆட்டங்கள் எதிர்வரும் வெள்ளி, சனிக்கிழமைகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற வுள்ளது. (த-23)

***

யாழ்ப்பாணம், ஜன.26

பருத்தித்துறை வை.எம்.சி. ஏயின் அனுசரணையுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் 5 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை பருத்தித்துறை நக்கீரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் 35 கழகங்கள் பங்குபற்றவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)



யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட் டச் சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத் தைப் பெற்ற ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி. (த-86)

# ஊர்சுற்றும் போட்டி மார்ச் மாதத்தில்

யாழ்ப்பாணம், ஜன .26

எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவிருந்த தேசிய மட்ட ஊர்சுற்றுப் போட்டி மார்ச் மாதம் முதல் வாரத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை அறிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

தேசிய மட்ட ஊர் சுற்றும் போட்டியில் பங்கு கொள்ளவுள்ள வீரர்கள் வீராங்கனைகள் தங்களது பயிற்சியினை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (த-23)

# சென்.அன்ரனிஸ் சம்பியன்

ஊர்காவற்றுறை, ஜன.26

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி வேலனை மத்திய கல்லூரி ஆகியவற்றின் 17 வயதுப்பிரிவு அணிகளின் வயல மட்ட உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் புனித அந்தோனியார் கல்லூரி அணி சம்பியனானது.

இப் போட்டியில் முதல் பாதி ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்றது. இப் போட்டியில் எந்த அணி முதலில் கோல் போடப் போகின்றது என்ற விறுவிறுப்பை இரு அணிகளும் ரசிகர் மத்தியில் ஏற்படுத்தி அசத்தின. இரு அணிகளும் கடுமையான போராட்டத்தின் மத்தியில் முதல் பாதி ஆட்டத்தை இரு அணிகளும் எதுவித கோலைப் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணிகளும் மிகவும் ஆக்ரோசமாக விளையாடின. இறுதியில் புனித அந்தோனியார் கல்லூரி 1 கோல் போட்டு அசத்த 1:0 என்ற கணக்கில் வேலணை மத்திய கல்லூரி அணியை வீழ்த்தி தீவக வலயச் சம்பியனாகியது சென் அன்ரனிஸ் கல்லூரி. (த-325)

# சென்.அன்ரனிஸ் கோல் மழை

ஊர்காவற்றுறை, ஜன.25

19 வயது பிரிவுக்கான தீவக வலய உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் புனித அந்தோனியார் கல்லூரி அணி கோல் மழை பொழிந்தது அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ் இறுதிப் போட்டியில் புனித அந்தோனியார் கல்லூரி யும் காரைநகர் தியாகராசா மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இப் போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் கல்லூரி அடுத்தடுத்து 4 கோல்களை போட்டு 4:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் அடுத்தடுத்து 5 கோல்களை போட்டு புனித அந்தோனியாக் கல்லூரி மொத்தமாக 9 கோல்களை சரமாரியாகப் பொழிந்து காரைநகர் தியாகராசா வித்தியாலயத்தை தோற்கடித்து தீவக வலயச் சம்பியனானது. (த-325)

# உடற் கல்வி உதவிப் பணிப்பாளர் நியமனம்

சாவகச்சேரி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளராக தவமணி சிவகுமார் கடந்த வாரம் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் கடந்த 10 வருடங்களாக யாழ்.கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றியுள்ளார். (த-23)

# மானிப்பாய் இந்து மூன்றாமிடம்

வலி. வடக்கு, ஜன.26

வலிகாமம் கல்வி வலயப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரி பெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் சளைத்தவர்கள் இலலையென்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்டன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி முதல் கோலைப் பெற்று முன்னிலையில் நின்ற வேளையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெற வேண்டும் என்ற வேகத்துடன் களமிறங்கி மோதிக் கொண்டன.

இந்த வேளையில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் ஒரு கோலைப் போட்டு போட்டியைச் சமப்படுத்தியது.

தொடர்ந்து இரு அணிகளும் மேலும் ஒரு கோலைப் பெற்று வெற்றி இலக்கை அடைய எடுத்த முயற்சிகள் எவையும் கைகூடாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்று சமநிலை யில் காணப்பட்டன.

வெற்றி தோல்வியை தீர்மா னிக்க சமநிலை உதைகளைத் தொடர்ந்து மானிப்பாய் இந்து கல்லூரி 3:2 என்ற கோல்கள் அடிப்படையில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத் தை வெற்றிபெற்று 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண் டது.

(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிறுதியில் பெடரர் வெற்றி



மெல்போர்ன், ஜன. 26

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் ரோஜர் பெடரர் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

தரவரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கும் சுவிட்ஸர்லாந்து வீரரான ரோஜர் பெடரர், தரவரிசையில் 19 ஆவது இடத்திலிருக்கும் சக நாட்டு வீரரான ஸ்ரானிஸ் லாஸ் வவ்ரிங்காவை எதிர் கொண்டார். இப்போட்டியில் 6-1, 6-3, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்ற பெடரர், அரை யிறுதிக்கு முன்னே றினார்.

# அரையிறுதியில் வொஸ்னியாக்கி, நா லீ



மெல்போர்ன், ஜன. 26

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்ற, வொஸ்னியாக்கி, நாலி ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறினார்.

தரவரிசையில் முதலாவது இடத்தில் இருக்கும் டென்மார்க் வீராங்கனையான கரோலின் வொஸ்னியாக்கி, தரவரிசையில் ஏழாவது இடத்திலிருக்கும் இத்தாலி வீராங்கனையான பிரான் செஸ்காவை எதிர்கொண்டார்.

முதல் சுற்றில் அதிர்ச்சியைச் சந்தித்த வொஸ்னியாக்கி, அந்தச் சுற்றை 3-6 என்ற கணக்கில் கோட்டைவிட்டார். பின்னர் சுதாகரித்துக்கொண்ட அவர், 6-3, 6-3 என்ற கணக்கில் பதிலடி கொடுத்து அடுத்த இரண்டு சுற்றுகளையும் கைப்பற்றினார். இறுதியில், 3-6, 6-3, 6-3 என்ற செற் கணக்கில் காலிறுதியாட்டத்தில் வெற்றிபெற்று, அடுத்த சுற்றான அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில், சீன வீராங்கனையான நா லீ, ஜேர்மன் வீராங்கனையான அன்டியா பெட்கோவிக்கை, 6-2, 6-4 என்ற செற் கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

நேற்றுமுன்தினம் நடந்த காலிறுதியாட்டம் ஒன்றில் பெல்ஜியம் வீராங்கனையான கிம் கிளிஸ்டர்ஸ், 7-6, 6-2 என்ற செற் கணக்கில் ரஷ்ய வீராங்கனையான எக்கரினாவை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தார்.

# ஸ்ரீசாந்துக்கு ஸ்ரீகாந்த் பாராட்டு



கொச்சி, ஜன. 26

''உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் இடம்பெறாவிட்டாலும், ஸ்ரீசாந்த் சிறந்த பந்துவீச்சாளரே.''


- இவ்வாறு இந்திய தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் பாராட்டியுள்ளார்.

உலகக் கிண்ண இந்திய அணியில் இளம் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த இடம் பெறாதமை குறித்துக் கருத்துக் கூறும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கேரளாவில் இன்னும் சில ஆண்டுகளில், உதைபந்தாட்டம், தடகளத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, கிரிக்கெட் முதலிடத்தைப் பிடித்துவிடும். பொதுவாக, ஒவ் வொரு மாநிலத்துக்கும் ஒரு பிரபலமான நட்சத்திரம் தேவைப்படும்.

முன்னர் கேரளாவில் தங்கமங்கை பி.டி.உஷா பிரபலமாக இருந்தார். தற்போது அந்த இடத்தை கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த் பெற்றுள்ளார் என எல்லோரும் சொல்கிறார்கள்.



ஏனெனில், அவர் ஒரு சிறப்பான பந்துவீச்சாளர். சிலர் விளையாட்டுத்தனமாக எதையாவது செய்வார்கள். பிறகுதான் அனுபவம் கிடைக்கும். இதனால், அமைதியாக இருக்குமாறு ஸ்ரீசாந்திடம் கூறியுள்ளேன்.

- இவ்வாறு ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

# சிக்ஸர்களாகக் குவித்தவர்கள்

2010ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் அரங்கில் சிக்ஸர்கள் அடித்து பல வீரர்கள் சாதனை படைத்துள்ளனர்.

டெஸ்ட் அரங்கில், கடந்த ஆண்டு அதிக சிக்ஸர்களை அடித்தவர்களில் தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ் முதலிடம் பிடித்தார். இவர் 11 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 18 சிக்ஸர்களை அடித்துள்ளார். இந்திய வீரர் ஹர்பஜன் சிங், 16 சிக்ஸர்களை அடித்து மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

இவ்வரிசையில் முதல் 5 இடங்களைப் பிடித்த வீரர்கள் விவரம் வருமாறு:-

| வீரர் | போட்டி | சிக்ஸர் |
|---|---|---|
| வில்லியர்ஸ்(தெ.ஆ.) | 11 | 18 |
| கலிஸ் (தெ.ஆ.) | 11 | 17 |
| ஹர்பஜன் (இந்.) | 12 | 16 |
| டோனி (இந்.) | 13 | 11 |

கெய்ல் (மே.இ.தீவுகள்), பிரன்டன் மக்கலம் (நியூஸி.) பிராட் ஹடின் (ஆஸி.), சச்சின் (இந்தியா), ஷேவாக் (இந்தியா) உள்ளிட்டோர் தலா 10 சிக்ஸர்களை அடித்து 5ஆவது இடத்தில் உள்ளனர்.

ஒருநாள் கிரிக்கெட் அரங்கில், கடந்த ஆண்டு அதிக சிக்ஸர்களை அடித்தவர்களில் பாகிஸ்தான் வீரர் அப்ரிடி முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

இவர் 18 போட்டிகளில் பங்கேற்று 27 சிக்ஸர்களை விளாசியுள்ளார்.

முதல் 5 இடங்களைப் பிடித்த வீரர்கள் விவரம் வருமாறு:-

| வீரர் | போட்டி | சிக்ஸர் |
|---|---|---|
| அப்ரிடி (பாக்.,) | 18 | 27 |
| ரெய்லர் (நியூஸி.) | 20 | 20 |
| கெ.ஒயிட் (ஆஸி.) | 25 | 20 |
| வில்லியர்ஸ்(தெ.ஆ.) | 16 | 19 |

போல் ஸ்டிர்லிங் (அயர்லாந்து), தமிம் இக்பால் (பங்களாதேஷ்) ஆகியோர் தலா 15 சிக்ஸர்களை அடித்து 5ஆவது இடத்தைப் பிடித்தனர்.

சர்வதேச 'ருவென்ரி-20' அரங்கில், கடந்த ஆண்டு அதிக சிக்ஸர்களை அடித்த வீரர்கள் வரிசையில் ஆஸ்திரேலியாவின் டேவிட் வார்னர் முதலிடத்தைப் பிடித்துள்ளார். இவர் 15 போட்டிகளில் விளையாடி 22 சிக்ஸர்களை விளாசியுள்ளார்.

முதல் 5 இடங்களைப் பிடித்த வீரர்கள் விவரம் வருமாறு:-

| வீரர் | போட்டி | சிக்ஸர் |
|---|---|---|
| வார்னர் (ஆஸி.) | 15 | 22 |
| வோட்சன் (ஆஸி.) | 13 | 19 |
| கெ.ஒயிட் (ஆஸி.) | 15 | 19 |
| அப்துல் ரஸாக் (பாக்.) | 17 | 18 |
| உமர் அக்மல் (பாக்.) | 18 | 17 |

# இந்திய அணியை விட்டு செல்வதில் கிறிஸ்டன் உறுதி!



பெங்களூர், ஜன. 26

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்குப் பின்னர் இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து கிறிஸ்டன் விலகுவது உறுதியாகியுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய அணியின் பயிற்சியாளராக கிறிஸ்டன் ஒப்பந்தமானார்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவரான கிறிஸ்டனின் பயிற்சியில் இந்திய அணி, டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பெற்றது. ஒருநாள் தரவரிசையில் 2ஆம் இடத்தைப்பெற்றது.

இதனிடையே, அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணத் தொடருடன், கிறிஸ்டனின் பதவிக்காலம் முடிகிறது.

இதற்குப் பின்னர், தனது குடும்பத்துடன் பொழுதைக் கழிக்க விரும்புவதால், பயிற்சியாளர் பதவியில் நீடிக்க விருப்பமில்லை என கிறிஸ்டன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வரும் 3 ஆண்டுகளுக்கு கிறிஸ்டன் பயிற்சியாளராகத் தொடர வேண்டும் என இந்திய ரசிகர்கள் விரும்புகின்றனர். ஏனெனில், இவரது பயிற்சியில் இந்திய அணி சிறப்பான வெற்றிகளைப் பெற்றது. இந்த வெற்றிகள் அனைத்திலும் அவருக்கும் பங்குள்ளது. அணியில் ஒற்றுமையை ஏற்படுத்தி, வலிமையானதாக மாற்றியவர்.

இதனால், கிறிஸ்டன் தொடர்ந்தும் மூன்று ஆண்டுகளுக்கு பயிற்சியாளராக தொடர்வது குறித்து அவருடன் இந்தியக் கிரிக்கெட் சபை உறுப்பினர்கள் நீண்ட நேரம் பேசியுள்ளனர். எனினும், உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர், தமது பதவியிலிருந்து விலகுவதில் அவர் உறுதியாக உள்ளார் எனத் தெரியவருகிறது.

# வெவ்வேறு களங்களில் 2 மோதல்கள் இன்று

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் இன்று இரு மோதல்கள் நடைபெறவுள்ளன. ஓவல் மைதானத்தில் ஆஸ்திரேலிய-இங்கிலாந்து அணிகளும், கியூங்டவுனில் பாகிஸ்தான் - நியூஸிலாந்து அணிகளும் மோதவுள்ளன.

இங்கிலாந்துடனான 7 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஏற்கனவே 3 வெற்றிகளைப் பெற்றுள்ள ஆஸி., இன்றைய போட்டியிலும் வெற்றிபெற்றால் தொடரைக் கைப்பற்றும் இதனால், இன்றைய இந்தப் போட்டி முக்கியமானதாக அமைகிறது.

அதேவேளை, 6 போட்டிகளைக் கொண்ட பாக்.-நியூஸிலாந்துக்கிடையிலான முதலாவது போட்டியில் நியூஸிலாந்து வெற்றிபெற்றது. இரண்டாவது போட்டி இன்று நடைபெறவுள்ளது.

எனவே, கிரிக்கெட் ரசிகர்களுக்கு இன்று இரு பெரு விருந்து காத்திருக்கின்றன.



24 நாள்களே

உதயன் உலகக்கிண்ண கொண்டாட்டம் உங்களுடன்

உலகக்கிண்ணப் போட்டிகள்.
எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை.
பார்த்த அனுபவங்கள். ரசித்த போட்டிகள்.
எழுந்த எண்ணங்கள். எழுதுங்கள்....
எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள்.
சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தரின் ஆசீர்வாதத்துடன்

## புதுக்கடைத் திறப்பு விழா

### துதி அந்திய கால சேவை

இதுவரை காலமும் யாழ். மண்ணில் டைமன் எம்பாமிங் சேவை நிறுவனமாக இயங்கிவந்த எமது நிறுவனம் தற்பொழுது இல. 56, மணிக்கூட்டு வீதியில் (பிறவுண்ஸ் கொம்பனி அருகில்) **துதி அந்தியகால** சேவையாக மிளிர்கின்றது என்பதனை அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

தொடர்பு: தொ.பே.: 0212220577



ஜெய்குருதேவ்

THE ART OF LIVING



*ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் நல்லாசியுடன் இந்திய வாழும் கலை நிறுவனத்திலிருந்து வருகை தந்துள்ள வேதபண்டிதர்களும், சிவாச்சாரியார்களும் சேர்ந்து உலக அமைதிக்காக சிறப்பு யாகம் நடத்தவுள்ளனர்.*

இடம் : இந்து சமய பேரவை, பலாலி வீதி, கந்தர் மடம்.
காலம் : 28.01.2011 (வெள்ளிக்கிழமை)
நேரம் : பி.பகல் 3.45 மணிக்கு

*அனைவரும் குடும்பத்துடன் கலந்துகொண்டு ஆசிபெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

அனுமதி இலவசம்

தொ.பே.: 0770474757, 0776622247, 0777222135, 0777740595 0779492589 (109924)


## மரண அறிவித்தல்

### முருகேசு துரைராஜசிங்கம்

(ஆதீனகர்த்தா, காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம்)



காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு துரைராஜசிங்கம் நேற்றுமுன்தினம் (24.01.2011) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக்கணவரும், நாகேந்திரம் (ஓய்வு பெற்ற அதிகாரி, இலங்கை வங்கி), சேதுகாவலன் (நந்தினி ஸ்ரோர்ஸ், கண்டி), உமாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் திலகவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), இராஜேஸ்வரி, சிவபாதசுந்தரம் (அண்ணாச்சி- Sun Fancy House, மட்டக்களப்பு) ஆகியோரின் மாமனாரும், சிவநயனி, ஐங்கரநேசன், சுந்தரேசன், ரகுநந்தன், ரகுநந்தினி, நந்தகோபி, வரதகரன் வனிதா, சிவசக்தி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு சாம்புலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுப்பிரமணியம் வீதி,
இடைப்பிட்டி,
காரைநகர்.

தகவல்:
பிள்ளைகள்.

## 6 ஆம் மாத நினைவலைகள்

தோற்றம் 02 - 12 - 1973



மறைவு 31 - 07 - 2010

### திருமதி ஞானஜோதி ஜெயலிங்கம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் சென்னையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானஜோதி ஜெயலிங்கம் (ஞானம்) அவர்களின் அந்தியேட்டி நிகழ்வானது நாளை (27.01.2011) வியாழக்கிழமை இராமேஸ்வரத்தில் நடைபெறும். அதேவேளை, அவருடைய பிறப்பிடமாகிய நயினாதீவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சோ. சின்னத்துரை (அப்பா)
முதலாம் வட்டாரம்,
நயினாதீவு.

## மரண அறிவித்தல்

### கனகரட்ணம் தவச்செல்வன்



வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் யாழ். கொட்டடி வைரவர் கோயில் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் தவச்செல்வன் நேற்று (25.01.2011) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் - பூபதி தம்பதியரின் மகனும் செல்வரட்ணம் - காலஞ்சென்ற பூபதி தம்பதியரின் மருமகனும் இரட்ணாம்பிகையின் அன்புக் கணவரும் நிரோஜன், நிலக்ஷன், நிரோஜினி, நிதுசன், நிதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2011) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில்தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

50/28, கொட்டடி வைரவர் கோயில் ஒழுங்கை,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

### வாடகைக்கு வாகனம் பெற்றுக்கொள்ளல்

Hiace Van

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ்ப்பாணம், பருத்தித்துறை நிறைவேற்றுபொறியியலாளர் காரியாலயங்களின் உத்தியோக பூர்வ பாவனைக்காகத் தனித்தனியாக Hiace Van பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

#### நிபந்தனை

01. வாகனம் டீசல் வாகனமாக இருத்தல் வேண்டும்.
02. ஆசனங்களின் எண்ணிக்கை 05 க்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
03. நடப்பு வருடத்துக்கான வரிப்பத்திரமும், காப்புறுதியும் பெற்றிருத்தல் வேண்டும்.
04. வாகனத்தின் உரிமையை உறுதிப்படுத்தும் பதிவுப் புத்தகம் இருத்தல் வேண்டும்.
05. எரிபொருள், ஓட்டுநர் ஊதியம், திருத்தவேலைகள் அனைத்தும் வாகன உரிமையாளரால் நிறைவேற்றப்பட வேண்டும்.
06. வாடகைக்கு அமர்த்தப்படும் வாகனம் ஞாயிறு , போயாதினம் தவிர்ந்த ஏனைய நாள்கள் 7.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை வேலை செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
07. வாகன ஓட்டுனர் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
08. வாகனம் யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு பகுதிக்கும் சென்று வரக் கூடியதாக இருக்கவேண்டும்.
09. வாகனம் நாள் ஒன்றுக்கு குறைந்தது 100 கி.மீற்றர் ஓட வேண்டும்.
10. மாதாந்தம் 3000 கி.மீற்றர்ஓட வேண்டும்.
11. வாடகை வாகனம் ஒரு மாத முன்னறிவித்தலுடன் அதிகார சபையினால் எந்த வேளையிலும் நிறுத்தப்படலாம்.
12. கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்படும் விலை விவரம் குறைந்தது 6 மாதங்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

கேள்வி கோரல்பத்திரத்தை விளம்பரத் திகதியில் இருந்து பிரதம பெறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் நடைமுறை 02.02.2011 அன்று மு.ப. 10 மணியுடன் முடிவடையும்.

மேலதிக விவரங்கள் 021 222 2968, இலக்க தொலைபேசியுடன் தொடர்பு கொண்டுபெற்றுக்கொள்ள முடியும்.

எந்திரி. வி.சுதாகர்,
பிரதம பெறியியலாளர், பிரதம பெறியியலாளர் அலுவலகம்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.
(சி-575232)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் பிறேமரட்ணம் (மல்லி அண்ணா)

(சர்மிளி ரவல்ஸ்)



தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை V.M. றோட்டை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த இரத்தினம் பிறேமரட்ணம் (மல்லி அண்ணா) 23.01.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம்- பாக்கியரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் செல்வமலரின் அன்புக் கணவரும் துஷ்யந்தினி, முகுந்தன், கார்த்திகா, சுகந்தினி, சர்மினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்துருராசாவின் பாசமிகு மாமனும் துரைரட்ணம், காலஞ்சென்றவர்களான திலகரட்ணம், மகேந்திரராணி மற்றும் ஜெயந்திரராணி, விமலரட்ணம், ராஜரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.M. றோட்,
பருத்தித்துறை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## நீங்காத நினைவுகள்

8ஆம் வருட நினைவஞ்சலி

மலர்வு 1918.12.14



உதிர்வு 2003.01.25

அமரர் A.R.சிவகுருநாதன்

19ஆம் வருட நினைவஞ்சலி

மலர்வு 1924.08.09



உதிர்வு 1992.09.06

திருமதி தவமணி சிவகுருநாதன்

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

102, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில் வாழும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### மகாலிங்கம் சுந்தரலிங்கம்



சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், தாளையம்பதி துர்க்கையம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சுந்தரலிங்கம் நேற்று (25.01.2011) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், லிங்கேஸ்வரன், காலஞ்சென்ற கோமலேஸ்வரி மற்றும் லங்கேஸ்வரி (இத்தாலி), சர்வேஸ்வரன், மோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அற்புதராஜாவின் (இத்தாலி) மாமனாரும், அபிஷனா, அபீஷன், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2011) புதன்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துர்க்கையம்மன் கோயிலடி,
சாவகச்சேரி.
தொ.பே.-0773608830

(109927)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாபோதி...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

கோயிலும் இருக்கிறது. வாரத்தில் ஒரு நாள் பூஜையும், தியான வகுப்பும் நடைபெறும். புத்தர் பிறந்த நாளில் பிரமாண்டமான விழாவும் நடத்தப்படும்.

இந்தக் கோவிலின் முன்பகுதியில் உள்ள மடாலயத்தில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் புத்த பிக்குகள் சிலர் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத 15 பேர் கொண்ட கும்பல் அங்கு நுழைந்தது. அவர்கள் யார்? என்ன வேண்டும்? என்று கேட்பதற்குள் அந்தக் கும்பல் கல் வீச்சு நடத்தியது. இதன்போது அலுவலகக் கண்ணாடி, ஷோகேசில் இருந்த கண்ணாடி, கோவிலுக்குள் நிறுத்தப்பட்டிருந்தவான் கண்ணாடி ஆகியவை உடைந்தன. தொலைக்காட்சியும் அடித்து நொறுக்கப்பட்டது.

புத்த பிக்குகளும், மற்றவர்களும் தாக்கப்பட்டனர். அதனால் அவர்கள் தங்கியிருந்த அறையை நோக்கி ஓடினார்கள். சாப்பாட்டு அறையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களும் அங்கும் இங்குமாக ஓடினார்கள். இந்தத் தாக்குதலில் புத்த பிக்குகள் உட்பட 5 பேர் காயமடைந்தனர். உடனே அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதற்கிடையே பொலிஸாருக்கும், இலங்கைத் துணைத் தூதரகத்திற்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் தாக்குதலில் ஈடுபட்ட கும்பலைப் பிடிக்க முயன்றனர். அதற்குள் அந்தக் கும்பல் ஓடி மறைந்துவிட்டது. பரபரப்பான இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இலங்கை துணைத்தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர். இதேவேளை, இச் சம்பவத்தில் மூன்றாவது தரப்பொன்று சம்பந்தப்பட்டிருக்கலாம் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் பிரசாத் காரிய வாசம் தெரிவித்துள்ளார் என பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் நேற்றிரவு தெரிவித்தது.

(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)

## திருச்சியில்..

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

பாண்டியன் என்ற மீனவரையும், மீனவர் ஜெயக்குமாரையும் இலங்கை கடற்படையினர் கொலை செய்தனர் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, திருச்சி சட்டக்கல்லூரி முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இலங்கை ஜனாதிபதியின் உருவப்பொம்மை எரிக்கப்பட்டது.

## அ'புரம்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

சம்பவத்தில் 25 பேர் காயமுற்று அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தை அடுத்து நேற்றுக்காலை அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.டி.சில்வா ஆகியோர் திடீர் விஜயம் மேற்கொண்டனர். இதனையடுத்து அவர்கள் சிறைச்சாலைக் கைதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.டி. சில்வா உடனடியாகப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்தமையால் சிறைச்சாலையில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது. சிறைச்சாலைக் கைதிகளின் வேண்டுகோள்கள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகப் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்துவதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும், அநுராதபுரம் சிறைச்சாலையை நிர்வகிப்பதற்கு கொழும்பில் இருந்து புதிய குழு ஒன்று அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.டி. சில்வா தெரிவித்தார். (சி)

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து பேர் கொண்ட அமர்வு தனது தீர்ப்பை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்தது.

அரசமைப்பின் பிரிவு 89 டி பிரிவின் கீழ் இராணுவ நீதிமன்றங்களை நியமிப்பதற்கான அதிகாரம் அரசுக்கு உள்ளதாக உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

ரஞ்சித் டி சில்வா தலைமையிலான மூன்று நீதிபதிகள் குழுஉயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நேற்று அறிவித்தது.

இராணுவத்தில் இருந்த போதே அரசியலில் ஈடுபடுவதற்கு முயன்றார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இராணுவ நீதிமன்றம் சரத் பொன்சேகாவுக்கு 30 மாத கடுங்காவல் தண்டனை விதித்தது.

இதனை அடுத்து அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை ரத்து செய்யப்படுவதாக சபாநாயகர் அறிவித்தார். அதனை எதிர்த்து நாட்டின் அரசமைப்புக்கு முரணாக இராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டதாகத் தெரிவித்து பொன்சேகா சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை அல்லது சிறைத் தண்டனையை வழங்குவதற்கான அதிகாரத்தை அரசமைப்பு வழங்கியிருக்கிறது எனத் தெரிவித்த நீதியரசர்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றங்கள் மட்டுமே அத்தகைய தண்டனையை வழங்க முடியும் என்று சுட்டிக் காட்டி உள்ளன.

இந்த வழக்குத் தொடர்பான எதிர்பார்ப்பு அதிகம் இருந்ததால் நேற்று உயர் நீதிமன்ற வளாகத்தில் பத்திரிகையாளர்கள் குவிந்திருந்தனர்.

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

விசாரணை நடத்த மஹிந்த ராஜபக்ஷவைக் கைது செய்ய வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

காலை 11 மணிமுதல் 3 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உயிராபத்துள்ள நோய் ஒன்றுக்கு சிகிச்சை பெறுவதற்காகவே அமெரிக்கா சென்றுள்ளார் என செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யுத்தக் குற்றவாளிகளை இனம் கண்டு அமெரிக்க நிர்வாகம் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனவும், எந்தவொரு நல்லிணக்க செயற்பாடுகளுக்கும் இது அவசியமானது என்றும் அமெரிக்க ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை தாங்கிய டாக்டர் தயாபரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட சில முக்கிய நபர்களும் இதேபோன்றதோர் கோரிக்கையை அமெரிக்காவிடம் முன்வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அது தனிப்பட்ட விஜயம் என அரச தரப்பில் கூறப்படுகின்றது.

ஆனால், ஊடகங்களில் இந்த விஜயம் தொடர்பாகப் பல்வேறு விதமாகக் கூறப்படுகின்றது.

அமைச்சரும் அரச அதிகாரிகளும் உள்ளிட்ட 20 பேர் அரச செலவில் ஜனாதிபதியுடன் சென்றுள்ளனர். அப்படியாயின் இந்த விஜயத்தை எப்படி தனிப்பட்ட விஜயம் என்று எடுத்துக்கொள்வது?

இந்த மாதம் 19 ஆம் திகதி அமெரிக்கா சென்ற ஜனாதிபதி இன்னும் அங்கேயே இருக்கின்றார். அங்கு என்ன நடக்கிறதென்று தெரியவில்லை. அரசு இந்த விஜயத்தை தனிப்பட்ட விஜயம் என்று கூறி உண்மையை மறைக்கப் பார்க்கின்றது.

இது தொடர்பில் இந்நாட்டு மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இந்த விஜயத்தின் உண்மையை அறிய அவர்கள் விரும்புகின்றனர். ஆகவே, அரசு ஜனாதிபதி விஜயத்தின் இரகசியத்தை இந்நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்த வேண்டும்- என்றார். (ஐ-சி)


### வீடு வாடகைக்குண்டு

பலாலி வீதி, சுந்தர்மடம் சந்திக்கு அருகில் 7 அறைகள், ஹோல், கிச்சின் கொண்ட வீடொன்று வாகனத்தரிப் பிடத்துடன் வாடகைக்குண்டு.

(N.G.O) அலுவலகப் பாவனைக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

தொடர்பு: 0750386004

### வீடு விற்பனை

மல்லாகம் சந்திக்கு அருகில் கோணபுல வீதியில் 6½ பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778786974, 0778786941, 0756145442.


### சுன்னாகம் தெற்கு அருள்மிகு சிவபூதராயர் தேவஸ்தானம்

## மஹா கும்பாபிஷேகம்

### பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசிச் செய்தி



சைவமும் தமிழும் தானதருமங்களும் தழைத்தோங்கும் சுன்னாகம் தென்பதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ சிவபூதராயப் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளான விநாயகர், தெட்சணாமூர்த்தி, நாக தம்பிரான், முருகன், சனீஸ்வரன், நவக்கிரகங்கள், வைரவர், மயிலிட்டி காசி பூதராயர், சண்டேஸ்வரர் ஆகியோருக்கும் மங்களகரமான விகிர்த்தி வருடம் தை மாதம் 12 ஆம் நாள் இன்று புதன்கிழமை சித்திரை நட்சத்திரமும் ஸப்தமி திதியும் கும்பலக்கினமும் குருஹோரையும் சித்தயோகமும் அமையப் பெற்ற நன்நாளில் காலை 8 மணி முதல் காலை 09.05 மணி வரையான சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபி ஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. 12 வருடங் களுக்குப்பிறகு நடைபெறும் இக் குடமுழுக்குப் பெரு விழாவினை காண்பது மக்களுக்குக் கிடைக்கக் கூடிய பெரும் பேறாகும். இப் பெருவிழாவானது அந்தணப் பெருமக்களாலும், ஆலய நிர்வாக சபையினராலும், ஊர் மக்களாலும், வெளிநாட்டில் உள்ள அன்பர்களாலும் தொண்டர்களாலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருவது மேன்மையானதாகும். அனைவருக்கும் சிவபூதராயர் பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

*தென்னாடுடைய சிவனே போற்றி*
*எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி*

சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள்,
ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தானம்,

### 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## தில்லையம்பலம் செல்வராசா

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தபாற் கந்தோர், சுன்னாகம்)




மலர்வு - 18.02.1944
உதிர்வு - 18.01.2009

எம் அன்பு அப்பாவே
எங்கள் உயிரின் உயிரானவரே
காலங்கள் கடந்தாலும்
நாள்கள் நகர்ந்தாலும்
மாதங்கள் சென்றாலும்
வருடங்கள் போனாலும்
உங்கள் நினைவுகள் - என்றும்
எம்மை விட்டு அகலாது ....!

குடும்பத்தினர்.

நிலோ தொலைத் தொடர்பு நிலையம்,
செல்வம் ஹொட்டல்,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.
021 321 2899

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



*அமரர் வைரவிப்பிள்ளை ஸ்ரீராமகிருஷ்ணன்*

மண்ணில் 1954 - 11 - 15 விண்ணில் 2010 - 02 - 06

குடும்பத்தின் குல விளக்கே
குன்றா மணி விளக்கே
எம் குலம் வாழ
வழி வகுத்த அப்பாவே
ஆண்டொன்று போனாலும்
உங்கள் மேல் உள்ள அன்பு
மாறாது! ஏந்தலே எங்கள் உயிரே
பாச மழை பொழிந்து
எம்மைப் பட்டாம் பூச்சியென
பறக்க விட்டுப் பார்த்து ரசித்தக் காட்சி
என்றென்றும் மறக்க ஒன்னா
காட்சியப்பா!
நீ இல்லாது போனாலும்
உம்மை என்றும் மறவோம்.



வட்டுவத்தை,
அல்லாய் கிழக்கு,
அல்வாய்.

(சி/575242) மனைவி, மகன்.

### மரண அறிவித்தல்

## இளையதம்பி செல்வராசா

ஈவினையைப் பிறப்பிடமாகக் கொண்ட இளையதம்பி செல்வராசா நேற்று (25.01.2011) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்மாப்பிள்ளையின் அன்புக் கணவரும், சந்திரன், சந்திரலீலா, சந்திரதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் சத்தியபாமா ஆகியோரின் அன்பு மாமனும் றமேஷ் (பிரான்ஸ்), றமணன் (லண்டன்), றஜீந்தன் (பிரான்ஸ்), சகிலன், சரோஜா (பிரான்ஸ்), ஜெயச்சித்திரா (லண்டன்), நதியா ஆகியோரின் பேரனும் றம்சிகா, றமிழன் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஈவினை விலங்கன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈவினை மத்தி,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்:
சந்திரலீலா
(லீலா-மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
..நகர சபை, யாழ்ப்பாணம்.



# வெள்ளைக் கொடியுடன் வந்த புலிகளின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மேல் நீதிமன்றில் நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, வராவெல, சர்பிக் ரஷீக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதன்போது சாட்சியம் அளிக்கையிலேயே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றைய விசாரணையின்போது கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும் வருமாறு:-

முதலில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் புவனேகு அலுவிஹார, பாதுகாப்புச் செயலாளரைக் குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்வி:- நீங்கள் தற்போது பாதுகாப்புச் செயலாளராக பதவி வகிக்கின்றீர்கள்? பதில்:- ஆம்.

கே: எவ்வளவு காலமாக இப்பதவியில் உள்ளீர்கள்? ப: 2005ஆம் ஆண்டு நவம்பர் முதல்.

கே: இராணுவம், பொலிஸ் திணைக்களம் என்பன பாதுகாப்பு அமைச்சினது பொறுப்பிலேயா உள்ளன? ப: ஆம்.

கே: 2009ஆம் ஆண்டு முழுவதும் நீங்கள் பாதுகாப்புச் செயலாளராக இருந்துள்ளீர்கள்? ப: ஆம்.

கே: 2005ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நீங்கள் நியமனம் பெறும்போது இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் செயற்பட்டது என்று கூறினால் ஏற்பீர்களா? ப: ஆம்.

கே: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சர்வதேச நாடுகள் சில தடை செய்திருப்பதை நீங்கள் அறிவீர்களா?

ப: ஆம்.

கே: அந்த இயக்கம் இலங்கை அரசுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டது என்பது சரியா? ப: ஆம்.

கே: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், இலங்கைத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாக காண்பிப்பதற்கு முற்பட்டதா? ப: ஆம்.

கே: அந்த இயக்கத்திலிருந்த முக்கிய உறுப்பினர்கள் தமிழர்களை உள்ளடக்கியிருந்தது சரியா? ப: ஆம்.

கே: 2009ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இலங்கை அரசு, புலிகளுக்கு எதிராக மனிதாபிமான நடவடிக்கை எனக் கூறப்படும் நடவடிக்கையில் ஈடுபட்டதா?

ப: ஆம்.

கே: 2009ஆம் ஆண்டின் மே மாதம் 17ஆம், 18ஆம் திகதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிலைகொண்டிருந்த பகுதிகளை இலங்கை அரசு மீட்டதா? ப: ஆம்.

கே: 2009ஆம் ஆண்டு இராணுவத் தளபதியாகச் செயற்பட்டவர் யார்? ப: சரத் பொன்சேகா.

கே: 2009ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் இராணுவத் தளபதியாக செயற்பட்ட சரத் பொன்சேகாவுக்கு முப்படைகளின் தளபதி பதவி கிடைத்ததா? ப: ஆம்.

கே: அவர் அதே வருட இறுதியில் ஓய்வு பெற்றாரா? ப: ஆம்.

கே: 'சண்டே லீடர்' பத்திரிகையிலுள்ள இச்செய்தியை நீங்கள் வாசித்தீர்களா? ப: ஆம்.

கே:- அச்செய்தி தொடர்பில் உங்களது கருத்து என்ன? ப: அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை முற்றிலும் பொய்.

கே: அதே புத்திரிகையில் 'பே ஒன்று ஏ மூன்று' எனக் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன? ப: அதுவும் பொய்.

கே: அதிலேயே இறுதிப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள 'பே ஒன்று ஏ நான்கு, பே ஒன்று ஏ ஐந்து' என அடையாளமிடப்பட்ட பகுதியை உங்களால் விளக்க முடியுமா? ப: அதுவும் பொய்.

கே: 'பே ஒன்று' என அடையாளமிடப்பட்ட பகுதியிலுள்ள தலைப்பானது, 58ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு வெள்ளைக் கொடியுடன் சரணடைய வரும் புலி உறுப்பினர்களைச் சுடுமாறு உங்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகச் சாட்சியாளர் தெரிவித்திருக்கிறார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து உங்களது கருத்து என்ன?

ப: சரத் பொன்சேகா ஒரு முன்னாள் இராணுவத் தளபதி. அவரால் இப்படிக் கூறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கும் போது மக்கள் அதனை நம்புகின்றார்கள். அது குறித்து என்னிடம் பல நாடுகளும், அமைப்புகளும் வினவின. அவற்றிடம் அது பொய்யான விடயம் எனக் கூறிய போதும் அக்கருத்தைக் கூறியவரை சுட்டிக்காட்டுகின்றன.

கே: எவ்வுளவு பேர் சரணடைந்தார்கள், அவர்களை எந்த வகையில் நடத்தினீர்கள்?

ப: நாம் சரணடைந்தவர்களை நன்றாகக் கவனித்தோம். 11 ஆயிரத்து 968 பேர் சரணடைந்தனர். அவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தி தற்போது சமூகத்துடன் ஒன்றிணைத்து வருகிறோம்.

கே: 'சண்டே லீடர்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றிருந்தால் அதுகுறித்து உங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்குமா? ப: ஆம்.

கே: எச்சந்தர்ப்பத்திலும் அவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றிருக்கவில்லையா? ப: இல்லை.

கே: சாட்சியாளர் அவ்வாறு ஓர் உத்தரவு உங்களால் பிறப்பிக்கப்பட்டதா என எச்சந்தர்ப்பத்திலும் உங்களிடம் வினவினாரா? ப: இல்லை.

கே: 11 ஆயிரத்து 968 பேர் சரணடைந்தார்கள் என நீங்கள் கூறினீர்கள். அவர்கள் அனைவரும் இறுதி யுத்தத்தின்போது மீட்கப்பட்ட பகுதிகளிலேயே சரணடைந்தார்களா? ப: ஆம்.

கே: தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களான தயா மாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோரும் சரணடைந்தார்களா? ப: ஆம். அவர்கள் தற்போதும் பாதுகாப் பிலேயே உள்ளனர்.

கே: முக்கிய தலைவர்களில் ஒருவரான தமிழ்ச்செல்வனின் உறவினர்கள், அவருடன் தொடர்புடையவர்கள் சரணடைந்தார்களா? ப: தமிழ்ச்செல்வனின் உறவினர்கள், சரணடைந்து தற்போதும் பாதுகாப்புடன் உள்ளனர்.

கே: சர்வதேச நாடுகளில் புலம்பெயர் இலங்கைத் தமிழர்கள் அங்கு போராட்டங்களை மேற்கொண்டார்கள் என்பதை அறிவீர்களா? ப: ஆம்.

கே: இனங்களுக்கு இடையிலான பகை உணர்வு போன்றவற்றைத் தவிர்ப்பதற்கு அரசினால் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா?

ப: ஆம். உதாரணமாக கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழு.

கே: 2010ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வாக்குமூலம் அளித்தீர்களா? ப: ஆம்.

பிரதி சொலிசிட்டர் ஜெனரலின் குறுக்கு விசாரணைகள் இதன்போது முடிவடைந்தன. அதனைத் தொடர்ந்து பிரதிவாதி சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி குறுக்கு விசாரணைகளை ஆரம்பித்தார்.

கே: 'சண்டே லீடர்'பத்திரிகையில் உங்களைக் குறித்து வெளியிடப்பட்டவை பொய்யா?

ப: அதில் அரசு தெரிவித்தவையும் உள்ளன. என்னைக் குறித்து வெளியிடப்பட்டவை தொடர்பில் அதற்கு எதிராக கல்கிஸை மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தேன்.

கே: அவ்வழக்கில் இனிமேல் பாதுகாப்புச் செயலாளர் தொடர்பாகத் தவறான விடயங்களை எழுதவேண்டாம் எனத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததா? ப: ஆம்.

கே: அப்படியிருக்க, 'சண்டே லீடர்' ஆசிரியர் பிரட்றிகா ஜான்ஸ் உங்களைக் குறித்த செய்தியை வெளியிட்டுள்ளாரே?

ப: அந்த வழக்கு வேறு. இந்த வழக்கு வேறு.

கே: 2009ஆம் ஆண்டுடன் நிறைவடைந்த யுத்தத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பாடுபட்டாரா? ஒத்துழைத்தாரா?

ப: தனிப்பட்ட நபரைக் குறிப்பிட முடியாது. முழு இராணுவமும் இதற்கு ஒத்துழைத்தது.

கே: 11ஆயிரத்து 968 பேர் சரணடைந்தார்கள் எனக் கூறினீர்கள். அதில் கருணா, பிள்ளையான் ஆகிய புலி முக்கியஸ்தர்களும் இருந்தார்களா?

ப: இல்லை. அவர்கள் இறுதிக்கட்ட யுத்தத்துக்கு முன்னரே இணைந்தார்கள்.

கே: தயா மாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டர் ஆகிய இருவரும் சரணடைந்தார்களா? ப: ஆம்.

கே: குமரன் பத்மநாதன் சரணடைந்தாரா? ப: இல்லை. அவரை இராணுவ நுட்பத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டில் வைத்து கைது செய்தோம்.

கே: குமரன் பத்மநாதனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவில்லையா? அப்படியிருந்தால் சற்று விளக்கமுடியுமா? ப: அவர் கைதுசெய்யப்பட்டவர். அவர் மீது தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் அது குறித்து விளக்கமளிக்க முடியாது.

கே: தயா மாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டர் ஆகிய இருவரும் அரசுக்கு எதிராக குற்றம் சுமத்தவில்லையா? ப: எனக்குத் தெரிந்த வகையில் இல்லை.

கே: நீங்களும் இராணுவச் சேவையில் இருந்துள்ளீர்கள்? ப: ஆம். 20 வருட காலம்.

கே: ஓய்வு பெறக் காரணம் என்ன?

ப: தனிப்பட்ட காரணம்.

இதனையடுத்து வழக்கு விசாரணை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

(ஓ-சி)

நீதிச்சேவை ஆணைக்குழுவின் எழுதுவினைஞர் போட்டிப்பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு
சனிக்கிழமை (30.01) நடைபெற இருக்கும் பரீட்சைக்கானது
இன்று புதன் (26.01) - 4.30 -7.30pm
நாளை வியாழன் (27.01) - 12.30-5.30pm
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். போதனா வைத்தியசாலை எதிரே)

கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்
வீடு கட்டுதல், திருத்துதல், குளியலறை கட்டுதல் சுற்றுமதில் கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சுவேலைகள், Plumbing, பெயின்ற் பூசுதல், Electrical, உலோகவேலைகள் அனைத்தும் தரமாகவும் நியாயவிலையிலும் செய்து கொடுக்கப்படும்.
AXSHAYA CONSTRUCTION JAFFNA
தொடர்புகளுக்கு:-0776679564, 0213207202, 0213218088

Study In the
UNITED KINGDOM
இறுதிச் சந்தர்ப்பம்
IELTS தேவையில்லை
March / April Intakes in Progress
2011 July இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் IELTS 5.5 உள்ளடங்கலாக பல கடுமையான கட்டுப்பாட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவதால் அதற்கு முன்னர் உங்கள் விசாக்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
Degree Programme - No IELTS
Basic Requirements
G.C.E. (O/L)
G.C.E. (A/L - at least 2 passes
Postgraduate Diploma + MBA
Basic Requirements
G.C.E. (O/L), G.C.E. (A/L)
Any Degree
உங்களுக்கான அனுமதிகள், ஆவணங்களை தயார்ப்படுத்தல் என்பன எங்களால் நேர்த்தியான முறையில் செய்து தரப்படும்.
சகல நாடுகளுக்குமான அனைத்துவித Documentation மற்றும் விசாக்களும் 100% உத்தரவாதத்துடன் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் பெற்றுத் தரப்படும்.
Jaffna: BRITISH COLLEGE OF HIGHER STUDIES
Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
T.P: 0212224550 (above Cosy Hotel & Near Ariyakulam Junction)
EXPRESS
INTERNATIONAL STUDIES & CONSULTANTS
30-1/14, W.A. De Silva Mawatha (Above Hotel Saravana Bavan)
Colombo 6. Tel:2500207 E-mail:eisc_2007@yahoo.com
Robin: 0777...

உங்கள் முன்னேற்றத்திற்கு
ஆங்கிலம் ஒரு தடையா?
Business Resource Management Services (BRMS)
நிறுவனம் இளைஞர், யுவதிகளின் ஆங்கில ஆற்றலை மேம்படுத்துவதோடு அவர்களின் திறன்களையும், ஆக்கங்களையும் வெளிக் கொண்டுவரும் நோக்குடன் "Shift of Paradigm" எனும் கற்கை நெறியை அறிமுகப் படுத்தவுள்ளது.
இக்கற்கை நெறியானது தற்போது வேலை செய்வோருக்கும், வேலை வாய்ப்பை தேடிக்கொண்டிருப்போருக்கும், உயர்கல்வியினை பயின்று கொண்டிருக்கும் மாணவர்களுக்கும், வெளிநாடு செல்ல இருப்போருக்கும் மிகப்பயனுடைய கற்கை நெறியாகும்.
இக்கற்கை நெறி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று உங்களுக்காகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இடம் : IIS City Campus பிரதான மண்டபம்
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 27.01.2011 மாலை 3.00மணி
ஆர்வலர்கள் இக் கலந்துரையாடலில் பங்குபற்றி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
அனுமதி முற்றிலும் இலவசம்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
Spoken English with Grammar
(Quick Learing Course -QLC)
உரையாடற் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள், இலக்கணப் பயிற்சிகள் உள்ளடங்கலாக ஆங்கில அறிவு இல்லாதவர்களுக்கும் மிக இலகுவாகக் கற்கும் விதத்தில் அமைந்த பாடத்திட்டம்.
புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video Visuals மூலமாக இவை நடாத்தப்படுகின்றது
ஆரம்பம் : 15-02-2011 Duration 1 Month
2500/-
Batch 11 : 09.00 AM - 1.00PM
Batch 12 : 1.30 PM - 5.30 PM
Advanced Diploma in English
ஆரம்பம் : 05-02-2011 Duration 2 Month
Batch 1 : 09.00 AM - 1.00PM
Batch 2 : 01.30 AM - 5.30PM
பிரித்தானிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர வதிவிட விசா (Settlement Visa) பெற்றுக் கொள்வதற்கான ஆங்கில பரீட்சை தொடர்பான ஆலோசனைகளும், அதற்கான பரீட்சைகளும் (PTE, IELTS, ESOL) எங்களால் வெற்றிகரமாக நடாத்தப்படுகின்றது
ஆரம்பம் : 02-02-2011 Duration 2 Month
Batch 1 : 09.00 AM - 1.00PM
Batch 2 : 01.30 AM - 5.30PM
IELTS-International English Language Testing System
PTE-Pearson Test of English
Student Visa மூலமாக வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கான இப் பரீட்சைகள் எமது நிறுவனத்தால் நடாத்தப்படுகிறது.
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Second Floor, No.15, Sirampiyadi Lane
(Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கோசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.